மு. வரதராசனார்

# அறிஞர் அறவாழி

க. த. திருநாவுக்கரசு

மணியகம்
சென்னை. 85

# அறிஞர் அறவாழி

க. த. திருநாவுக்கரசு

மணியகம் வெளியீடு : 3

முதற்பதிப்பு : நவம்பர், 1978

உரிமை :

திருமதி தி. கஸ்தூரி

3, இரண்டாவது நெடுஞ்சாலை

கோட்டூர்த் தோட்டம்

சென்னை—600085.

விலை ரூ. 6-00

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை—600001.

அச்சிட்டோர் :— நற்செய்தி அச்சகம், 66-7, அசோசியேசன் சாலை

மாதவரம், சென்னை-600060

# முன்னுரை

தமிழின் மறுமலர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் அறிஞர் மு. வரதராசனுர் அரும்பணியாற்றியுள்ளார். இலட்சக்கணக்கான இளைஞர்களின் எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் தம் இலக்கியப் படைப்புகளின் மூலம் அவர் உண்டாக்கியுள்ளார். பச்சையப்பன் கல்லூரியில், அவருடைய திருவடிகளின் கீழ் அமர்ந்து தமிழியலையும், தமிழ்ப் பண்பாட்டையும் கற்கும் பேறுபெற்ற இளைஞர்களுள் அடியேனும் ஒருவன். அக்காலத்தில் அவரை, அறிஞர் அறவாழியாகவே மாணவர் பலர் கண்டனர். இதனுல் தான் அவரைப் பற்றிய இந்நூலுக்கு, **அறிஞர் அறவாழி** எனும் பெயரிடப்பட்டுள்ளது.

டாக்டர் மு. வ. அவர்களின் மறைவு, என்னைப் போன்ற மாணவர்களைச், சொற்களால் புலப்படுத்த இயலாப் பெருந்துன்பத்தில் ஆழ்த்தியது. அத் துன்பக் கடலிலிருந்து கரையேற முயன்ற பொழுது, நான் உணர்ந்த அவருடைய அருமை பெருமைகளைப் பலரோடு பகிர்ந்து கொள்ளத் துடித்தேன்! இரங்கல் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினேன். அப் பேச்சுக்களில் இரண்டு இணைந்து 'இனிக்கும் நினைவாக' இந்நூலில் இடம்பெற்றிருக்கிறது.

1974ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 'தமிழ்ப்பணியில்', என் உள்ளக் குமுறலின் வெளிப்பாடாக 'அறிஞர் அறவாழி' வெளிவந்தது. அதே மாதம் 'நூலகத்தில்', 'தமிழிற்கு ஓர் அண்ணல்' எனும் தலைப்பில் வெளிவந்தது 'மூதறிஞர் வரதராசனுர்' எனும் எழுத்துரை; தினமணிச் சுடரில் பூத்துக் குலுங்கியது, 'புதிய உலகம்'; 'தமிழரசில்' வெளிப்பட்டது 'வரதராசனுரின் வரலாற்றுக் கொள்கை'; இளைஞர் இந்திய சங்கத்தில் ஒலித்தது 'பண்பாட்டின் காவலர்'; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திறனாய்வு நூலில், ஆங்கிலத்தில் அரும்பியது 'மு. வ. வின் முன்னுரைகள்'; டாக்டர் பட்ட ஆய்வுரையில் இடம்பெற இடம் இல்லாமல் போனமையால், இந்நூலில் சுருங்கிய வடிவில் வெளிப்படும் வாய்ப்பைப் பெற்றது 'கடித இலக்கியம்'.

இரண்டாம் பகுதியில், இதுவரை வெளியிடப்படாத டாக்டர் மு. வ. அவர்களின் கடிதங்கள் பலவற்றைச் சேர்த்துள்ளேன். அவற்றை, என்னுடைய நூலில் சேர்த்துக் கொள்ள அன்புடன் இசைவு தந்த அன்பர்கள் அனைவருக்கும், என் உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன், என்னுடைய ஆசான், எனக்கு எழுதிய கடிதங்களுள் சிலவற்றை, மதுரைப் பல்கலைக் கழகத்தினரிடம் கொடுத்து வெளியிட முன்பு தயங்கினேன். 'உண்மையை உலகம் உணருமாறு செய்வது தவருகாது' என்று என்னுடைய தோழர்கள் அறிவுறுத்தி வந்தனர். அதனுல், ஐயா, எனக்கு எழுதிய கடிதங்களுள் நான்கைத் தவிர, மற்றவை அனைத்தையும் இந்நூலில் சேர்த்துள்ளேன். இக்கடிதங்களால், என்னுடைய அறிவுத் தந்தை, என்னிடம் கொண்டிருந்த அன்பு எளிதில் புலனுகும்.

இந்நூலினை நன்முறையில் அச்சிட்டுதவிய என் நண்பர் டாக்டர் வீ. ஞானசிகாமணி அவர்கட்கு என் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்னை
14-11-78

க. த. திருநாவுக்கரசு

## உள்ளுறை


| | |
|---|---|
| அறிஞர் அறவாழி | 9 |
| மூதறிஞர் மு. வரதராசனார் | 11 |
| புதிய உலகம் | 28 |
| வரதராசனாரின் வரலாற்றுக் கொள்கை | 36 |
| பண்பாட்டின் காவலர் | 41 |
| மு. வ. வின் முன்னுரைகள் | 52 |
| இனிக்கும் நினைவுகள் | 76 |
| கடித இலக்கியம் | 107 |
| அறிஞர் அறவாழியின் கடிதங்கள் | 118 |

முதற் பகுதி

அறிஞர் அறவாழி

# அறிஞர் அறவாழி

தமிழ் அன்னைக்குப் புத்தம் புதிய அணிகள் பலவற்றை அணிவித்து மகிழ்ந்தவர் அறிஞர் அறவாழி! ஆராய்ச்சித் தமிழிற்கு அரங்கம் அமைத்துத் தந்தவர் அறவாழி! இருவேறு துருவங்களுக்குச் செல்லாது, நடுநிலையில் நின்று, தமிழகம் வாழ்வதற்கு வழிகாட்டியவர் அறிஞர் அறவாழி! கூட்டத்தில் கூடி நின்று கூடிப்பிதற்றாது, நாளும் நல்ல கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடித்தவர் அறிஞர் அறவாழி! ஒல்லும் வகையெல்லாம் ஓயாது கடமைகளைச் செம்மையாகவும் சிறப்பாகவும் செய்து முடித்த செயல்வீரர் அறிஞர் அறவாழி! தமிழ்ப் பண்பாட்டினை, மேற்கு நாட்டு அறிவு ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் விளக்கமுறச் செய்தவர் அறிஞர் அறவாழி! விளம்பரத்தை விரும்பாத வித்தகர் அறிஞர் அறவாழி! மனிதனை மனிதனாக மதித்துப் போற்றிய மனிதநலக் கோட்பாட்டாளர் அறிஞர் அறவாழி!

அவர் ஒரு புலவர்! அவர் 'வாழ்தல் வேண்டிப் பொய்கூறா' வாய்மையாளர்! அவர் ஓர் அறிஞர்! அவர் ஒரு கலைஞர்! அவர் ஒரு மெய்யறிவாளர்! அவர் ஓர் அறவோர்! அவர் ஒரு சான்றோர்! அவர் ஒரு சைவர்! இல்லை...! வேதாந்தி! அவர் ஒரு காந்தியவாதி! இல்லை...! மார்க்சியவாதி! சனநாயகத்தின் பண்புகளை மதித்துப் போற்றிய சனநாயகவாதி!

தமிழே அவருடைய உடல்! அறமே அவருடைய உயிர்! அன்பே அவருடைய நெறி! பண்பே அவருடைய வாழ்க்கை!

சமயங்களிடையே சமரசத்தைக் கண்டவர் அவர்! சமுதாயச் சீர்கேடுகளைச் சாடியவர் அவர்! மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க முயன்றவர் அவர்! எல்லார்க்கும் எல்லாம் அமையக்கூடிய புதியதோர் உலகைக் காணத் துடித்த புத்துலகச் சிந்தனையாளர் அவர்! தனி வாழ்க்கையிலும், பொது வாழ்விலும் வேற்றுமைக்கு இடையே ஒற்றுமையைக் கண்டு போற்றிய பேரறிவாளர் அவர்! பல்வேறு அரசியல் கட்சியினரும், 'எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்' என்று உரிமை கொண்டாடும் வகையில் வாழ்ந்த, தமிழ் அறிஞர் அவர்!

இவ்வாறு தமிழ் கூறும் நல்லுலகம் பெருமிதத்தோடு போற்றிடும் அறிஞரே அறவாழி!

**அவர் யார்?**

அண்மையில் நம்மையெல்லாம் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டு, இயற்கையோடு இயற்கையாக மாறிவிட்ட மூதறிஞர் மு. வ. அவர்கள்! தமிழுலகம் பரிவோடும் பாசத்தோடும் போற்றும் இரண்டு எழுத்திற்குரிய தலைவர் அவர்! தாம் படைத்த 'நாவல்' களில், தம்மையே ஒரு பாத்திரமாகப் படைத்து, தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் பிரதிநிதியாகக் காட்டியுள்ளார். அப்பாத்திரமே **அறிஞர் அறவாழி!** ஐந்திற்கு மேற்பட்ட 'நாவல்களி'ல் அறவாழி, நம்மோடு கலந்து உரையாடுவதைக் காணலாம்! 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக' அறவாழி காட்சி தருகிறார். அந்த அறவாழியின் பண்பு நலன்கள் அனைத்தும் அறிஞர் மு. வ. அவர்களிடம் குடிகொண்டிருந்தன! இவ்வாறு தம்மையே, ஒரு கதைப் பாத்திரமாகத் தம்முடைய புதினங்களில் படைத்த முதல் தமிழ் எழுத்தாளர் டாக்டர் மு. வ. அவர்களே யாவர்!

பேராசிரியர் மு. வரதராசனாரின் வாழ்க்கை ஒரு 'திறந்த புத்தகம்'! நமக்கு எல்லாம் வழிகாட்டும் ஒளிவிளக்கு! 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்னும் முதுமொழிக்குச் சான்று பகரும் சாகாத பேரிலக்கியம்! 'தம் புகழ் கேட்டார் போல் தலை சாய்த்து மரம் துஞ்ச' என்று அன்றொரு புலவன் பாடினான். 'தம் புகழ் விரும்பாத' தகைமையாளராக வாழ்ந்து காட்டியவர் அறிஞர் அறவாழி!

அவருடைய மறைவால், 'மலர்விழி' மதிமயங்கி விழுகிறாள்! 'பாவை' செயலற்றுப் பாவை போலாகிவிட்டாள்! 'மண் குடிசை' யில் ஒளிவீசிய 'அகல் விளக்கு' அணைந்துவிட்டது! 'மனச்சான்று' ஓடி ஒளிந்து கொண்டது! 'கொங்கு தேர் வாழ்க்கை' அஞ்சிறைத் தும்பி, 'முல்லைத் திணை'யிலிருந்து நானிலம் எங்கும் பறந்து சென்று, 'ஓவச் செய்தியை'—'ஐயா ஓய்ந்த செய்தியை'—ஓலமிடுகிறது! 'தம்பி' துடிக்கிறான்! 'தங்கை' தவிக்கிறாள்! 'அன்னை' அலறுகிறாள்! 'நண்பர்' நெஞ்சம் நைந்து உருகுகிறார்! 'அல்லி' அழுகிறாள்! 'கரித்துண்டு' அவள் கண்ணீரால் கரைந்துபோகிறது! 'தமிழ் நெஞ்சம்' தன்னம்பிக்கை இழந்து தத்தளிக்கிறது! 'தாயகமே' — தமிழகமே துன்பக் கடலில் மூழ்கிவிட்டது!

# முதறிஞர் வரதராசனார்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி சீரும் சிறப்பும், வலிவும் பொலிவும், வாழ்வும் வளமும் பெற்று வளர்ந்து வருகிறது. தரமான புதிய விதைகளைத் தேர்ந்தெடுத்து விதைத்து, தமிழ்ப்பண்ணையில் புதிய பயிரினைப் பேணி வளர்த்தவர் மிகச் சிலராவர். இப்பயிருக்கு உரமிட்ட தமிழ் அறிஞர் சிலர்; நீரூற்றி வளர்த்தவர் பலர்; வேலியிட்டுப் பயிரைப் போற்றிக் காத்த தமிழ்க் காவலர் சிலர். மேற்கண்ட அரும்பணிகள் அனைத்தையும் கண்ணுங் கருத்துமாகச் செய்த ஒருவர் உண்டென்றால், அவர் யாராக இருத்தல்கூடும்? எங்கள் பேராசான டாக்டர் மு. வரதராசனாராகத்தான் இருக்கமுடியும்! மூத்த தமிழை, மூவாத கன்னித்தமிழை, 'என்றுமுள தென்தமிழை' ஏற்றமுறச் செய்த அண்ணலே பேராசிரியர் மு. வ! அவருடைய தமிழ்த்தொண்டு நிலத்திலும் பெரிது! அவருடைய தமிழுணர்வு வானிலும் உயர்ந்தது! அவருடைய தமிழ்ப் புலமை கடலினும் ஆழமானது! கூட்டத்தில் கூடிநின்று கூடிப் பிதற்றாது, நாட்டத்தில் நல்ல கருத்துகளைக் கொண்டு அன்புப் பணியை அமைதியாகப் புரிந்த அறிஞரே டாக்டர் மு. வ! அவருடைய எழுத்து எண்ணற்ற இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது! ஆயிரக்கணக்கான அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டியது! முதுபெரும் புலவர்களின உள்ளத்திலே 'தமிழிற்கு வாழ்வு உண்டு!' என்னும் நம்பிக்கை ஒளியை ஊட்டியது!

> ஆசிரியர் வரதராசனாரை, யான் நீண்ட காலமாக அறிவேன். அவரை யான் முதல்முதல் பார்த்தபோது அவர்தம் மலர்ந்த விழிவும், கூரிய மூக்கும் பரந்த நெற்றியும் நீண்ட முகமும், நிமிர்ந்த பிடரியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன . . . . ஆசிரியர் வரதராசனார் பெருங்கலைஞராய் நாட்டை நல்வழியில் ஓம்புந் தொண்டராவர் என்று யான் நினைத்தது உண்டு. அந் நினைவு பழுதுபடவில்லை! அவர் இயற்றியுள்ள நூல்கள் நாட்டை நல்வழியில் ஓம்பி வருதல் கண்கூடு

என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், முப்பதாண்டுகளுக்கு முன்பு, மு. வ அவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## இளமைப் பருவம்

பேராசிரியர் அவர்கள் 25-4-1912ல் பிறந்தார்; சொந்த ஊர் வட ஆர்க்காடு மாவட்டத்தில், அம்மூருக்கு அருகிலுள்ள வேலம் என்பதாகும். அவருடைய தந்தையார் முனிசாமி முதலியார்; உழவுத்தொழில்புரிந்து வாழ்க்கை நடத்தியவர். உயர்நிலைப் பள்ளிவரை திருப்பத்தூரில் மு.வ. கல்வி பயின்றார். சிறிது காலம் திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். பின்னர், உடல் நலக்குறைவினால் அப்பணியை விட்டு விலகினார்.

அப்பொழுது, புலவர் முருகைய முதலியார் என்னும் சான்றோரிடம் அவர் தமிழைப் பயின்றார். சென்னைப் பல்கலைக் கழகத்து, வித்துவான் தேர்வில் (1935) முதல் வகுப்பில், முதல் நிலையைப் பெற்று அவர் தேர்ச்சியுற்றார்; ஆயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றதோடு, தமிழ்ப்பெரும் புலவராக விளங்கத் திட்டமிட்டு அவர் உழைக்கலானார். 1937-ல் B.O.L. தேர்வில் தேர்ச்சி பெற்றார்; 1939ம் ஆண்டு சென்னைப் பச்சையப்பர் கல்லூரிக்குள் பயிற்றாசிரிய (Tutor)ராக நுழைந்தார். தக்காரை அடுத்துத் தம் ஐயந்திரிபுகளைப் போக்கிக் கொண்டு, தாமாகவே தனிமுறையில் தேர்வுகள் பலவெழுதி எம்.ஏ. பட்டம் பெற்ற பெருமை (பழைய B.O.L. பட்டத்தை M.A. பட்டமாகப் பல்கலைக் கழகத்தினர் மாற்றினர்) பேராசிரியர் மு. வரதராசனாருக்கு உரியதாகும். தன்னம்பிக்கையும் உழைக்க சலிக்காத ஆர்வமும் கொண்டவர் யாரும் எந்தத் தேர்வையும், நல்லமுறையில் எழுதி வெற்றிபெற இயலும் என்னும் திடமான நம்பிக்கை அவருக்கு என்றும் உண்டு. இந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே, மதுரைப் பல்கலைக் கழகத்தில 'அஞ்சல வழிக் கல்வி முறையை'த் துணிச்சலுடன் அவர் தொடங்கினார்; அதில் பெருவெற்றிபெற்று மனம் மகிழ்ந்தார்.

### ஆசிரியர்பணி

பச்சையப்பன் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில், தமிழின் வளர்ச்சிக்கும் தமிழைக் கற்போரின் வாழ்க்கை வளம்பெறுவதற்கும் பல அரிய பணிகளைத் திரைமறைவில் இருந்து, விளம்பரத்தை விரும்பாமல் அவர் செய்துள்ளார். B.O.L.-க்கு மேற்பட்ட, பட்டப்படிப்பு ஒன்று வேண்டும் என்பதை அவர் நன்குணர்ந்தார். அதற்காகப் பல பெரியவர்களைக் கண்டு, எடுத்துரைத்து B.O.L. (Hons) பட்டப் படிப்பை, முதன்முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கு

மாறு செய்தார்; அப்பட்டப்படிப்பைத் தாம் பணியாற்றிய பச்சை யப்பன் கல்லூரியில் அவர் கொண்டுவந்தார். தொடக்கத்தில் பல வகைப் புதுமுறைப் பாடங்களையும் அவரே நடத்தும் பொறுப்பினை ஏற்ருர். பின்னர், தம்முடன் பணியாற்றிய ஆசிரியர்களைப் புதிய கலைத்துறைகளில் ஈடுபடுத்தி, பல ஆண்டுகள் தொடர்ந்து பாடம் நடத்தி, அக்கலைகளில் தேர்ச்சிமிக்க வல்லுநர்களாக அவர்களை விளங்கச் செய்தார்.

சில ஆண்டுகளுக்குள், தமிழ்நாட்டு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவினர் B.O.L. (Hons) பட்டம் பெற்றவர்களை, M.A. பட்டதாரிகளுக்குச் சமமாக மதிக்க மறுத்தனர். தம்முடைய மாண வர்களுக்கு—தமிழ்ப் பயின்ற இளைஞர்கட்கு—உண்டான இன்னலைக் கண்டு அவர் மனம் நொந்தார். உடனடியாக B.O.L. (Hons) பட்டம் பெற்ரேர், அதை M.A. ஆக மாற்றிக்கொள்ளும் உரிமை யைச் சென்னைப் பல்கலைக் கழகம் அளிக்குமாறு செய்தார். வந்த தீங்கிலிருந்து தமிழ் மாணவரைக் காத்த பெரியார், அதோடு வாளா இருந்துவிடவில்லை; மேலும் தீமை வருமுன் காக்க முனைந் தார். 1950 முதல், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் B.A. (Hons), தமிழ் M.A. பட்டப்படிப்புகளுக்கு வழி வகுத்துத் தந்தார். 1961 வரை செம்மையாகவும் சிறப்பாகவும் அவர் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பணியாற்றினர்.

அக்காலத்தில் அவரிடம் M.A. சிறப்புத் தமிழைப் பயின்ரேர் முந்நூறுக்கு மேற்பட்டவராவர். அவர் ஆசிரியராக மட்டும் விளங்கவில்லை. அவருடைய மாணவர்க்குத் தாயாக, தந்தையாக, நண்பனுக, தோழனுக, நெறிப்படுத்தும் அறவோராக அவர் திகழ்ந் தார். அவர் எப்பாடத்தை நடத்தினலும், அது எளிமையாக இருக் கும்; தெளிவு மேலோங்கி நிற்கும்; திட்பமும் நுட்பமும் தொக்கி நிற்கும்; நயம் பெருக்கெடுத்து ஓடும். மறந்தும் அவர், பிறரு டைய குறைகளைச் சுட்டியதும் இல்லை, அதைப் போன்றே தம் மைப்பற்றியும், தம் வாழ்க்கையைப் பற்றியும் சொன்னதும் இல்லை! இதனல், எண்ணற்ற இளைஞர்களின் 'உள்ளங்கவர் கள்வனுக' அவர் விளங்கினர்.

ஆசிரியராகப் பணிபுரிந்த அக்காலத்திலேயே, எழுத்தாளர் வரதராசனரும், ஆராய்ச்சிப் பேரறிஞர் வரதராசனரும் உருவாகிக் கொண்டிருந்தனர். அவர் தமிழின் வளர்ச்சிக்குப் புதிய வழிவகை களை வகுத்துத் தந்தார்; புராணத் தமிழின்பத்தில் மூழ்கிக் கிடந்த மக்களுக்குச் சங்கத் தமிழினை 'விருந்தாக'ப் படைத்தார். இதன் மூலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய தமிழ் இலக்கி

யங்களைத் தமிழ் மக்கள் சுவைத்து மகிழவும், தங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தை உணர்ந்து போற்றவும் செய்தார். இதனால் சங்கத் தமிழிற்குப் புதுமெருகும் புதுவாழ்வும் கிட்டியது. இவ்வாறு தமிழின் மறுமலர்ச்சிக்கு ஆற்றல்மிகு தூண்டுகோலாக அவர் அமைந்தார்.

அவர் தமிழாராய்ச்சிக்கு வழிவகுத்து, தமிழறிஞர் M.O.L. ஆராய்ச்சிப்பட்டம் பெற உதவியும்செய்தார். 'திராவிட மொழிகளில் வினைச் சொற்கள்' என்னும் ஆய்வுரையை ஆங்கிலத்தில் அளித்து, அவர் M. O. L. பட்டம் பெற்றார். பின்னர் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' எனும் ஆய்வுக் கட்டுரை வரைந்து, டாக்டர் பட்டத்தையும் பெற்றார். இதற்கு இடையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில மதிப்புறு துணைப்பேராசிரியராக (Honorary Reader) அவர் பணியாற்றினார். பின்னர் 1949 அளவில், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும், இந்தியமொழிகளின் துறைகளுக்குத் தலைவராகவும் விளங்கினார்.

அக்காலத்தில் அவர் படைத்த நூல்கள் எண்பதற்கு மேற்பட்டனவாகும். அவருடைய சிந்தனைச் சிறப்பையும், கருத்தோட்டத்தையும், எடுத்துரைக்கும் இனியபாங்கையும் கண்டு வியந்தவர் பலர். அவருடைய அரிய படைப்புகளான கள்ளோ காவியமோ எனும் புனைகதைக்கும், அரசியல் அலைகள் எனும் கட்டுரை நூலுக்கும், ஓவச்செய்தி எனும் இலக்கியத் திறனாய்வு நூலுக்கும், மொழியியற் கட்டுரைகள் எனும் மொழி ஆராய்ச்சி நூலுக்கும் தமிழ்நாடு அரசு பரிசுகள் வழங்கிப் பாராட்டியது. தில்லி சாகித்திய அக்காதமி, பேராசிரியருடைய அகல் விளக்கு எனும் புனைகதைக்கு 1961 ஆம் ஆண்டு பரிசளித்துப் பெருமை பெற்றது. இந்நூல்கள் அல்லாமல், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் ஆராய்ச்சி நூலையும், விடுதலையா? எனும் சிறுகதைத் தொகுப்பையும், மொழிநூல் என்னும் மொழியியல ஆய்வு நூலையும் தமிழ் வளர்ச்சிக் கழகம் பாராட்டியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய காலத்திலேயே புகழ் அவரைத் தேடிவந்தது. உலகின் மூலைமுடுக்குகளில் உள்ள தமிழர் பலரும், அவரோடு நெருக்கமான கடிதத்தொடர்பு கொண்டனர்; தங்கள் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவுமாறு வேண்டினர். பண்பட்ட தமிழ் உள்ளம் வாய்க்கப் பெற்ற பேராசிரியரின் அறிவும் ஆற்றலும, அன்பும் பண்பும், பரிவும் பாசமும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தது! 'மு. வ.' எனும் ஈரெழுத்தாலாகிய பெயர், தமிழகத்தின் வீடுகள்தோறும் மதிப்பிற்குரிய திருப்பெயராக ஒலிக்கலாயிற்று.

## பல்கலைக்கழகப்பேராசிரியர்

1961ஆம் ஆண்டு முதல் 1971 வரை டாக்டர் மு. வ. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகத் தொண்டாற்றினார். பின்னர் 1971ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் அவர் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகத் தொண்டு புரிந்தார். தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், தமிழினை, உலகத்தின் பல்வேறு நாட்டு அறிஞர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். 'திறமையான புலமையெனில் அதை வெளி நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என்பது பாரதியாரின் வாக்கு. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் நம் பேராசிரியர். செக் நாட்டு அறிஞர் டாக்டர் கமில் வெலெபில், இங்கிலாந்து நாட்டு அறிஞர் டாக்டர் ஆஷெர், டாக்டர் ஜான்மார், மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் (செல்வி) ஹெல்கா ஆண்ட்டன், ருஷ்ய நாட்டு அறிஞரான டாக்டர் ரூடின் போன்றோர் டாக்டர் மு. வரதராசனாரிடம் தமிழ் இலக்கியங்களைப் பயின்றனர். அவருடைய நூல்களுள்—சிறப்பாகப் புதினங்களுள் சிலவற்றைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துத், தங்கள் ஆசானுக்கு அவர்கள் சிறப்பைத் தேடித்தந்தனர். அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்குச் சென்று 'தேமதுரத் தமிழோசையை உலகமெலாம்' பரப்பும் பணியை அவர் செய்துள்ளார்.

சென்னையில் தமிழ்க் கலைமன்றத்தை (Academy of Tamil Culture) தொடங்க உறுதுணையாக இருந்ததோடு, பல ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்காக அவர் அரும்பாடுபட்டார். பின்னர், அதனுடைய கிளை அமைப்பாக அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை (IATR) நிறுவி, மூன்று உலகத் தமிழ் மாநாடுகளைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு, ஒல்லும் வகையெல்லாம் அவர் ஓயாது முயன்றார். சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்ததோடு, அதனுடைய மதிப்புறு இயக்குநராகப் பொறுப்பேற்று, அதன் வளர்ச்சிக்குரிய வழிவகைகளை நம் பேராசிரியர் வகுத்துத் தந்தார்.

## துணைவேந்தர்

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்ற நாள் முதல், அதனுடைய வளர்ச்சிக்குப் பலவகையில் டாக்டர் மு.வ. பாடுபட்டுள்ளார். அதனைத் தம்முடைய நான்காவது குழந்தையாக அவர் கருதினார். அதனுடைய விரைவான வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற வகையில், இன்னல்களையும்

இடையூறுகளையும் கண்டு மனந்தளராது பேராசிரியர் மு.வ. அவர்கள் ஓயாது உழைத்தார். 'உழைப்பே உயர்வு தரும்' என்னும் கொள்கையில் அவர் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். உழைப்பின் சின்னமாகத் தம்மை உலகிற்கு உணர்த்தி 10 - 10 - 74 அன்று மாலை 5 - 30 மணிக்கு மறைந்துவிட்டார்.

## தமிழ்ப்பணி

புலவர் மு. வரதராசனாராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில், பல புதிய துறைகளில் நம் அன்னைத் தமிழை வளர்க்க அவர் திட்டமிட்டார்; ஆரவாரமின்றிப் பையப் பைய அத்திட்டங்களைத் தம் எழுத்தின்மூலம் செயல்படுத்தி வந்தார். 'பேச்சைக் குறை; எழுத்தை நிறை!' என்னும் கொள்கையோடு, மேடைப் பேச்சுக்கு இரையாகாமல், நடுவு நிலையில் நின்று, நாளும் எழுதிக் கொண்டே இருந்தார். ஆண்டுதோறும் இரண்டு அல்லது மூன்று நூல்கள் வெளிவந்துகொண்டே இருந்தன. 1943 முதல் 1960 வரை அவர் ஓயாது எழுதினார். எழுதியவற்றைச் செப்பம் செய்து, தாமே நூலாகப் பெரும்பாலும் வெளியிட்டு வந்தார்.

புத்தம் புதிய துறைகளில் அவர் தமிழை வளர்த்தார்; மற்றவர்கள் எவ்வெத் துறைகளில் தமிழை வளர்க்கலாம் என்பதைக் கோடிகாட்டியும், வழிவகுத்தும் கொடுத்தார். 'மாடுகளும் வழக்கத்தால் செக்கை சுற்றும்' என்பார்கள். பழமையில் ஊறிய தமிழ்ப் புலவரான டாக்டர் மு. வரதராசனார், தமிழை வளர்ப்பதற்காக இக்காலத்திற்கு உகந்ததாக உள்ள புதிய துறைகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்தார்; பழமையின் அடிப்படையில் புதுமைக்கு விளக்கம் கொடுத்தார்; புதுமையிலே பழமையின் சிறப்பியல்புகளைக் கண்டு போற்றினார். அவர் மரபுவழி வந்த தமிழ்ப் புலவர்! சங்ககாலச் சான்றோர்களின் நெறியில் நின்று, அவர் இன்றைய உலகை நோக்கினார்! அச்சான்றோர்களின் அறவுரைகளையும் அறிவுரைகளையும் இன்றைய மக்களுக்குப் பயன்படும் வகையில், இன்றைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கட்டுரைகளையும் புனைகதைகளையும் பேராசிரியர் வடித்துத் தந்தார். அவருடைய உள்ளத்தில் வள்ளுவரின் வாய்மொழியும், அப்பரின் அருண்மொழியும், மணிவாசகரின் மணிமொழியும் ஆழமாகப் பதிந்திருந்தன. அவற்றோடு மனிதஇன நலக்கோட்பாட்டு உணர்வுமிக்க தாயுமானவரின் தவமொழிகள் அவருடைய கருத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன. இராமதீர்த்தரின் மெய்யுணர்வுக் கருத்துகளிலும் அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை நெறியிலும் பேராசிரியரின் உள்ளம் தோய்ந்திருந்தது. ஜெர்மானிய நாட்டு மெய்யுணர்

விள்ளரான காண்ட்டின் அறவேட்கையிலும், இங்கிலாந்து நாட்டின் சிந்தனைச் சிற்பியான ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவின் சோசலிசக் கோட்பாட்டிலும் அவர் பேரீடுபாடு கொண்டிருந்தார். அவருடைய எழுத்துகளில் இச்சான்றோர்களின் எண்ணங்கள் நிழலாடின. திரு. வி. கலியாண சுந்தரனார் டாக்டர் மு. வரதராசனாரைத் தமிழ் பெர்னார்ட்ஷா என்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே பாராட்டியுள்ளமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

பேராசிரியர் மு வரதராசனார் பல பட்டைகள் தீட்டப்பட்ட ஒரு வயிரமாவார். அதனால், அவருடைய தமிழ்ப்பணியும் பல்வேறு வகைகளாகப் பல்கிப் பெருகியுள்ளன. அவருடைய எழுத்துரைகள் பல நூல்களாக வடிவம்பெற்றுள்ளன. அவர் 85 நூல்களை விட்டுச் சென்றுள்ளார். அவருடைய பெயர் குறிப்பிடப்படாமல் வெளிநாட்டுக் கதைகளின் தமிழாக்கம், மூன்று நூல்களாக் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ளன. ஏராளமான கட்டுரைகளும் கருத்துரைகளும் தொகுக்கப்பெறாமல் உள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்தால் தமிழில் பத்து நூல் களும், ஆங்கிலத்தில் இரண்டுமூன்று நூல்களும் வெளியிடலாம். பேராசிரியருடைய படைப்புகளைப் பதினான்கு வகைகளாக நாம் பாகுபடுத்தலாம்.

### (1) பழைய இலக்கியங்களுக்குப் புதிய விளக்கம்

சங்கத் தமிழ் இலக்கியங்களுள் சிறந்த பாடல்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை இன்றைய மக்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, எளிய நடையில் ஓரளவிற்குத் தமிழை அறிந்தவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் பல கருத்தோவியங்களை அவர் வரைந்துள்ளார். அவை தமிழன் மறுமலர்ச்சிக்கு உரமூட்டின; புதியதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கின. அவை (1) இலக்கியக் காட்சிகள், (2) குறள் காட்டும் காதலர், (3) குறுந்தொகை விருந்து, (4) குறுந்தொகைச் செல்வம், (5) தமிழ் நெஞ்சம், (6) நடைவண்டி, (7) நற்றிணை விருந்து, (8) நற்றிணைச் செல்வம், (9) நெடுந்தொகை விருந்து, (10) நெடுந்தொகைச் செல்வம், (11) புலவர் கண்ணீர், (12) மணல்வீடு என்பனவாகும்.

### (2) கட்டுரைகள்

நாட்டின் அன்றாடச் செய்திகளுள் சில, மனச்சான்றை மதித்துப் போற்றும் மனிதனுடைய உள்ளத்தைத் தாக்கியும் சிந்தனையைத் தூண்டியும் எழுச்சியுறச் செய்தன. அவற்றைக் கருத்தில் கொண்டு, அவற்றால் உண்டாகும் சிக்கல்களுக்குத் தீர்வுகளும்

முறையில் பத்திரிகைகள் சிலவற்றில் அவ்வப்போது அவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றின் தொகுப்புகளும், நூல்களாகவே வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இதனுள் அடங்கும். அவை (1) அரசியல் அலைகள், (2) அறமும் அரசியலும், (3) உலகப் பேரேடு, (4) கண்ணுடைய வாழ்வு, (5) கல்வி, (6) குருவிப் போர், (7) நல்வாழ்வு, (8) நாட்டுப் பற்று, (9) படியாதவர் படும்பாடு, (10) பெண்மை வாழ்க, (11) மண்ணின் மதிப்பு, (12) மொழிப்பற்று என்பனவாகும். சொற்பொழிவு ஒன்று (13) 'உலகம் உய்ய' எனும் நூல்வடிவம் பெற்றுள்ளது.

### (3) கடிதங்கள்

தமிழிலக்கிய வகையுள், கடிதங்கள் புதியதோர் இலக்கிய வடிவமாகும். வாழ்க்கைப் போராட்டத்தையும் உலகியல்புகளையும் நுணுக்கமாக அலசி, ஆராய்ந்து, தெளிவுபெற உதவும் வகையில் கற்பனைக் கடிதங்கள் பலவற்றை அன்னைக்கும், தம்பிக்கும், தங்கைக்கும், நண்பர்க்கும் இப்புலவர் பெருமகனார் எழுதியுள்ளார். அவை (1) அன்னைக்கு, (2) தம்பிக்கு, (3) தங்கைக்கு, (4) நண்பர்க்கு எனும் நான்கு நூல்களாக வெளிவந்துள்ளன. தம் வாழ் நாளில், பல நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள் பல. அவற்றுள் சில (5) டாக்டர் மு. வ. வின் கடிதங்கள், (6) மு. வ.வின் கடிதங்கள் எனும் நூல்களாக அவர் மறைந்த பிறகு வெளியிடப்பட்டுள்ளன.

### (4) வாழ்க்கை வரலாறு

சான்றோர்களின் வாழ்க்கை நமக்கு ஒப்பற்ற கைவிளக்காகும். அவர்களுடைய வரலாற்றை அறிவதன் மூலம், நம்முடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள இயலும். இளைஞர்கள் உலகப்பெருஞ் சான்றோர்களின் வாழ்க்கையையும் அவர்தம் தொண்டினையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் நம் பேராசிரியர் நான்கு நூல்களைப் படைத்துள்ளார். அவை (1) காந்தி அண்ணல், (2) அறிஞர் பெர்னர்ட்ஷா, (3) கவிஞர் தாகூர், (4) திரு.வி.க. என்பன. இந்நால்வரும் பொதுநலத் தொண்டர்களாகவும் அறிஞர்களாகவும் மனித இனத்தின் மேம்பாட்டிற்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர்.

### (5) சிறுவர்க்கான செந்தமிழ்

பள்ளியில் பயிலும் சிறுவர்களுக்கு மொழியின் வரலாற்றையும், சொற்களின் வரலாற்றையும் விளக்கி, பேராசிரியர் வானொலியில் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளின் தொகுப்பாக மூன்று நூல்கள்

வெளிவந்துள்ளன. அவையே: (1) மொழியின் கதை, (2) எழுத்தின் கதை, (3) சொல்லின் கதை என்னும் சிறுநூல்களாகும். சிறுவர்க்காக அவர் எழுதிய மேனாட்டுக்கதை நூல்கள் மூன்றும், தமிழ் இலக்கண நூல்கள் இரண்டும் இங்குக் குறிப்பிடத் தக்கன.

(6) நாடகங்கள்

பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில், ஆண்டு தோறும் முத்தமிழ் விழாவினைக் கொண்டாடுவது வழக்கம். அவ் விழாவில் நடிப்பதற்காகப் பேராசிரியர் ஓரங்க நாடகங்கள் சில வற்றை எழுதினர்; வேறு சிறு நாடகங்கள் வானொலியில் ஒலி பரப்பப்பட்டன; மற்றும் சில முதலில் நூலாக வெளியிடப்பட்டன. அவை (1) மணச்சான்று, (2) காதல் எங்கே?, (3) இளங்கோ, (4) டாக்டர் அல்லி, (5) பச்சையப்பர், (6) மூன்று நாடகங்கள் என்பன. இறுதியாக வெளியிடப்பட்டுள்ள 'மூன்று நாடகங்'களுள், 'இளங்கோ' எனும் நாடகத்தைச் சேர்த்துள்ளார். 'அல்லி' எனும் புதினம், 'டாக்டர் அல்லி' எனும் நாடகமாக கணபதி என்பவரால் எழுதப்பட்டு, அரங்கேற்றம் செய்யப்பட்டது.

(7) உரை விளக்கம்

பழைய தமிழ் இலக்கியங்களுள், திருக்குறளுக்கு டாக்டர் மு. வ. அவர்கள் வரைந்துள்ள உரைவிளக்கம் எளிமையும் தெளிவும் உடையது; கையடக்கமானது. ஓரளவிற்குத் தமிழைப் பயின் றோரும் படித்து, எளிதில் புரிந்துகொள்ளத் தக்கது. திருக்குறள் தெளிவுரை என்னும் நூல் முதன்முதல் 1949 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இன்றுவரை பன்னிரண்டு இலட்சத்திற்கு அந் நூலின் பிரதிகள் விற்பனையாகியுள்ளன. இதனால், அந்நூல், நாட்டு மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினை நாம் நன்குணரலாம். ஆனல், அந்நூலால், ஆசிரியர் அடைந்தது சில நூறு ரூபாய்களே என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இது தமிழ்நாட்டு எழுத்தாளனுடைய உண்மையான நிலையைப் புலப்படுத்துவதற்குப் போதிய சான்றாகும்.

(8) இலக்கிய ஆராய்ச்சி

நம்முடைய இலக்கியங்களின் அருமைபெருமைகளை அறியவும், அவற்றின் சிறப்பியல்புகளை நாம் உணர்ந்து போற்றவும் உதவி புரிவது இலக்கிய ஆராய்ச்சியாகும். சங்க இலக்கியங்களானு

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் ஆகிய இலக்கியங்களிலும், சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திலும் டாக்டர் மு. வரதராசனார் நுண்மாண் நுழைபுலம் வாய்க்கப்பெற்றவராவர். அவ்விலக்கியங்கள் நல்கும் இன்பத்தில், அவர் மூழ்கித் திளைத்தார். அவற்றின் அரிய பண்புகளைப் பிறரும் அறிந்து இன்புறும்வண்ணம் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் சிலவற்றைப் படைத்துள்ளார். அவற்றால் ஆராய்ச்சித் தமிழ் வளர்ந்தது; பழந்தமிழ் இலக்கியத்தின் ஏரும் எழிலும், சீரும் சிறப்பும் விளக்கமுற்றன. அவை (1) இளங்கோ அடிகள், (2) ஓவச் செய்தி, (3) கண்ணகி, (4) கொங்குதேர் வாழ்க்கை, (5) திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், (6) பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (டாக்டர் பட்டத்திற்காக எழுதப்பட்ட ஆய்வுரை), (7) மாதவி, (8) முல்லைத்திணை என்பன. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள 'Treatment of Nature in Ancient Tamil Literature' எனும் நூலும், 'Ilango Adigal' எனும் நூலும் இங்குக் குறிப்பிடத் தக்கன.

## (9) இலக்கியத் திறனாய்வு

இலக்கியத் திறனாய்வு, இந்தியர்களுக்குப் புதியதொரு துறை. தமிழில் இலக்கியத் திறனாய்வு இன்றும் குழவிப்பருவத்திலேயே இருந்துவருகிறது. இத்துறையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, விருப்புவெறுப்பு இல்லாமல், நடுவுநிலையில் நின்று, அவர் உண்மை காணும் வேட்கையோடு ஈடுபட்டார். அதன் விளைவாக, மேலைநாட்டு இலக்கியக் கொள்கைகளை நம் மாணவர்களும், தமிழறிஞர்களும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் எடுத்துரைத்தும் தமிழிலக்கியங்களில் அவற்றைப் பொருத்திக் காட்டியும் அவர் விளக்கம் தந்துள்ளார். சாகித்திய அக்காதமியின் சார்பில் தமிழிலக்கிய வரலாறு என்னும் நூலை அவர் வெளியிட்டுள்ளார். இந்நூலும் தமிழிலக்கியத்தின் வரலாற்றைத் திறனாய்வு முறையில் எடுத்துரைக்கிறது. அவருடைய இலக்கியத் திறனாய்வு நூல்கள்: (1) இலக்கிய ஆராய்ச்சி, (2) இலக்கியத் திறன், (3) இலக்கிய மரபு, (4) இலக்கிய வரலாறு என்பனவாகும்.

## (10) மொழியியல் நூல்கள்

இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்த நம் பேராசிரியர், மொழியாராய்ச்சியிலும் ஆர்வம் காட்டினார். இலக்கணத்தை ஆழக் கற்றவர்களே, மொழியாராய்ச்சியில் ஈடுபட முடியும். பொதுவாக இலக்கியப் புலவர்கள் இலக்கணப் புலவர்

களாக இருப்பதில்லை. இலக்கியத் திறனாய்வாளர்கள், மொழியியல் அறிஞர்களாகச் சிறப்புறுவதில்லை. நம் பேராசிரியர், இவ்விரு கலைகளிலும் தேர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றிருந்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திராவிட மொழிகளின் அமைப்பினையும் இயல்புகளையும் தாமே கண்டு அறிவதற்காகப் பத்தாண்டுகளுக்கு மேல், அவர் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளைக் கற்றார். அம்மொழிகளில் அவர் எழுதப் படிக்கக் கற்றதோடு, நன்கு பேசியும் வந்தார். பச்சையப்பன் கல்லூரியின் கன்னட, தெலுங்கு, மலையாள மொழி விரிவுரையாளர்களே அவருடைய ஆசிரியர்களாக விளங்கினர். அவர்களுள் சிலர், நம் பேராசிரியருடைய சிறப்புமிக்க புனைகதைகளான கள்ளோ காவியமோ, மலர் விழி, கரித்துண்டு போன்றவற்றைத் தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளுள் மொழிபெயர்த்துள்ளனர். மொழி ஆராய்ச்சியில் தமக்குப் புலனாகிய உண்மைகளை, எளிய முறையில் கட்டுரைகளாக அவ்வப்போது, அவர் சில ஆய்வேடுகளில் வெளியிட்டுள்ளார். அவற்றைத் தொகுத்து மொழியியற் கட்டுரைகள் எனும் நூலாக்கியுள்ளார். மொழியியல் நூல்களாவன: (1) மொழிநூல், (2) மொழி வரலாறு, (3) மொழியியல் கட்டுரைகள் முற்பகுதி என்பனவாகும்.

(11) சிறுகதை

நற்றமிழ்ப் புலவரான டாக்டர் மு. வரதராசனார், சிறுகதைகள் சிலவற்றைத் தொடக்க காலத்தில் எழுதியுள்ளார். அவற்றைத் தொகுத்து விடுதலையா? எனும் நூலாக வெளியிட்டுள்ளார். அத்தொகுப்பில் உள்ள கதைகள் சில, நம் பேராசிரியருடைய இளமைப் பருவ நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டவை. இச்செய்தியை ஆசிரியரே என்னிடம் தெரிவித்துள்ளார். குறட்டை ஒலி என்பது மற்றொரு சிறுகதைத் தொகுப்பாகும்.

(12) புதினங்கள்

தமிழ்ப் பேராசிரியரான டாக்டர் மு. வ. அவர்களைக் கல்வியறிவில்லாத பாமர மக்களும் நாவலாசிரியராக நன்கு அறிவர். இத்துறையில் பதினைந்து ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து நல்ல பணியினை அவர் ஆற்றியுள்ளார். அவருடைய புதினங்களுள் பாவை 'லோகோபகாரி' எனும் வார இதழில் தொடர்ந்து வெளிவந்தது. அந்த நாள் 'தமிழ் முரசு' வார இதழில் வெளிவந்ததாகும். மற்றவை எல்லாம் ஆசிரியரால் எழுதி முடித்தவுடன் நூலாக வெளியிடப்பட்டவையாகும். அவருடைய புதினங்கள் அனைத்துமே சமூக நாவல்களாகும். அவை யாவும் குடும்ப வாழ்க்கை

யில் எழும் சிக்கல்களைக் கருவாகக் கொண்டுள்ளன. இன்றைய வாழ்க்கைப் போராட்டத்தின் எதிரொலிகளே, அவற்றில் நாம் கேட்கின்றோம். டாக்டர் மு. வரதராசனார் படைத்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட கதைப் பாத்திரங்களுள், ஒருவருடைய சாதியைக்கூட நாம் அறிய இயலாது.[1] அவர்கள் யாவரும் சாதிவேறுபாடற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுடைய பேச்சு நடையைக் கொண்டும், அவர்களுடைய சாதியை நாம் இனங் கண்டுகொள்ள இயலாது. இது ஆசிரியரின் எண்ணப்போக்கினை எடுத்தியம்புகிறது.

நம் பேராசிரியரின் 'நாவல்கள்' யாவுமே பயன்மதிப்பை (Values)த் தெளிவு படுத்தும் கருத்து விளக்க நாவல்களாகும். இதனால், அவை 'பிரசாரம்' செய்யும் நாவல்களாகக் கருதப் படுகின்றன. 'கலை இன்பம் தருவது மட்டும் அன்று; வாழ்க்கையைத் திருத்திச் செம்மைப்படுத்துவதுமாகும்' என்னும் கொள்கையில், நம் பேராசிரியர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால், ஒவ்வொரு குறிக்கோளினை விளக்க ஒவ்வொரு புதினத்தைப் படைத்தார். எனவே, அவருடைய புதினங்கள் யாவும் கருத்துவிளக்கக் கதைகளாக அமைந்துள்ளன. அவை (1) அகல்விளக்கு, (2) அந்த நாள், (3) அல்லி, (4) கயமை, (5) கரித்துண்டு, (6) கள்ளோ காவியமோ?, (7) கி.பி. 2000, (8) செந்தாமரை, (9) நெஞ்சில் ஒரு முள், (10) பழியும் பாவமும், (11) பாவை, (12) பெற்ற மனம், (13) மண்குடிசை, (14) மலர்விழி, (15) வாடாமலர் என்பனவாகும்.

இவற்றுள் கள்ளோ காவியமோ, கரித்துண்டு, மலர்விழி, அகல் விளக்கு என்னும் நாவல்கள் நம் பேராசிரியருக்குப் பொன்றாப் புகழைத் தேடித்தந்தன.

### (13) பயண இலக்கியம்

தமிழில் பயண இலக்கியங்கள் மிகக் குறைவாக உள்ளன. வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள், தம் அனுபவத்தை எடுத்துரைப்பது நம்நாட்டில் அரிய செயலாக இருந்துவருகிறது. பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் 1950 அளவில் முதன்முதல் இலங்கைக்குச் சென்று வந்தார்கள். அப்பயணத்தில் தாம் கண்டவற்றையும், பெற்ற புதிய அனுபவங்களையும் ஆற்றொழுக்கான இனிய நடையில் யான் கண்ட இலங்கை எனும் நூல் வாயிலாக அவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். இந்நூல், அவருடைய மகன் டாக்டர் அரசுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பாக உள்ளன.

(1) பாவை ஒன்றே இதற்கு விதிவிலக்கு

### (14) குழந்தை உளவியல்

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களைப் புரிந்துகொள்ளுவது அரிய செயலாகும். அவர்களுடைய உள்ள உணர்ச்சிகளை மதித்துப் போற்றி உரிமை அளித்தால், அவர்களுடைய அறிவுத்திறனும் செயல்திறனும் நன்கு மலர்ச்சியடையும் என்பது டாக்டர் மு. வ. அவர்களுடைய கருத்தாகும். மாண்டிசெரி அம்மையாரின் கருத்துகளைக் கருத்தில் கொண்டு, குழந்தையின் மனவளர்ச்சியைக் கூர்ந்து நோக்கி, நுட்பமாக ஆராய்ந்து அவர் ஒரு நூலினை எழுதியுள்ளார். அதற்குக் குழந்தை என்பதே பெயராகும்.

எளிய நடையில், தெளிவுமிக்க வகையில், இனிமையும் மென்மையும் வாய்ந்த சொற்களால், அவர் இவ்வரிய நூல்களையெல்லாம் இயற்றியுள்ளார். 1972ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் அமெரிக்காவில்உள்ள ஊஸ்டர்கல்லூரி டாக்டர் மு. வரதராசனுர் அவர்களைப் பாராட்டி, டி.லிட். (D.Litt) பட்டம் அளித்து, பெருமையுற்றது. 'புதிய தமிழைப் போற்றி வளர்க்கும் பேராசான்' என்பதற்காக இப்பட்டத்தை அளிப்பதாக அப்பல்கலைக்கழகம் தெரிவித்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். தமிழறிஞர்களுள் முதன்முதலாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தினரால், சிறப்புமிக்க அறிஞராகப் போற்றிப் பட்டம் அளித்துப் பாராட்டப் பெற்ற நல்லறிஞர், நம் பேராசிரியரே யாவார். தமிழ் வளர்க்கும் பெரியார்களுள் சிறப்புமிக்கவராக உலகம் போற்றும் நிலையில், அவர் மறைந்துவிட்டார். அவருடைய வாழ்வும் பணியும் நமக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைவதாகும்.

# பேராசிரியரின் இலக்கியப் படைப்புகள்

[ காலவரன்முறை ]

| | | |
|---|---|---|
| 1. | குழந்தைப் பாடல்கள் | 1939 |
| 2. | படியாதவர் படும்பாடு | 1940 |
| 3. | கழக இளைஞர் பாட்டு | 1941 |
| 4. | கண்ணுடைய வாழ்வு | 1945 |
| 5. | அறமும் அரசியலும் | ,, |
| 6. | ஓவச் செய்தி | 1946 |
| 7. | செந்தாமரை | ,, |
| 8. | தமிழ் நெஞ்சம் | 1947 |
| 9. | கள்ளோ காவியமோ | ,, |
| 10. | கி.பி. இரண்டாயிரம் | ,, |
| 11. | மொழிநூல் | 1947 |
| 12. | மணல் வீடு | 1948 |
| 13. | அரசியல் அலைகள் | ,, |
| 14. | காந்தியண்ணல் | ,, |
| 15. | அன்னைக்கு | ,, |
| 16. | பாவை | ,, |
| 17. | அந்த நாள் | ,, |
| 18. | விடுதலையா ? | ,, |
| 19. | திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் | ,, |
| 20. | திருக்குறள் தெளிவுரை | 1949 |
| 21. | கவிஞர் தாகூர் | ,, |
| 22. | தம்பிக்கு | ,, |
| 23. | கண்ணகி | 1950 |
| 24. | மாதவி | ,, |
| 25. | முல்லைத்திணை | ,, |
| 26. | யான் கண்ட இலங்கை | ,, |
| 27. | மலர்விழி | ,, |
| 28. | பழியும் பாவமும் | ,, |
| 29. | பச்சையப்பர் | 1951 |
| 30. | மொழியின் கதை | ,, |

31. பெற்ற மனம் ,,
32. அறிஞர் பெர்னார்ட்ஷா 1952
33. அல்லி ,,
34. குறட்டை ஒலி ,,
35. மனச்சான்று ,,
36. இளங்கோ ,,
37. எழுத்தின் கதை ,,
38. சொல்லின் கதை ,,
39. நற்றிணை விருந்து 1953
40. குறுந்தொகை விருந்து ,,
41. இலக்கிய ஆராய்ச்சி ,,
42. கரித்துண்டு ,,
43. தங்கைக்கு ,,
44. நெடுந்தொகை விருந்து 1954
45. நெடுந்தொகைச் செல்வம் ,,
46. குருவிப்போர் ,,
47. பெண்மை வாழ்க ,,
48. குழந்தை ,,
49. நண்பர்க்கு ,,
50. மொழி வரலாறு ,,
51. மொழியியல் கட்டுரைகள் ,,
52. குறுந்தொகைச் செல்வம் 1955
53. கொங்குதேர் வாழ்க்கை ,,
54. டாக்டர் அல்லி ,,
55. நடைவண்டி 1956
56. புலவர் கண்ணீர் ,,
57. கல்வி ,,
58. மொழிப்பற்று ,,
59. நாட்டுப்பற்று ,,
60. கயமை ,,
61. நெஞ்சில் ஒருமுள் ,,
62. The Treatment of Nature in Sangam Literature 1957
63. நற்றிணைச் செல்வம் 1958
64. அகல்விளக்கு ,,
65. இலக்கியத்திறன் 1959
66. உலகப் பேரேடு ,,
67. மூன்று நாடகங்கள் ,,
68. காதல் எங்கே? ,,

| | | |
|---|---|---|
| 69. | இலக்கிய மரபு | 1960 |
| 70. | இளங்கோவடிகள் | ,, |
| 71. | திரு. வி. க. | 1961 |
| 72. | மண்குடிசை | ,, |
| 73. | வாடாமலர் | ,, |
| 74. | இலக்கியக் காட்சிகள் | 1962 |
| 75. | மண்ணின் மதிப்பு | ,, |
| 76. | பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | 1964 |
| 77. | Ilango Adigal | 1967 |
| 78. | குறள் காட்டும் காதலர் | 1968 |
| 79. | அரசியல் தொண்டு | 1970 |
| 80. | உலகம் உய்ய | 1971 |
| 81. | தமிழ் இலக்கிய வரலாறு | 1972 |
| 82. | நல்வாழ்வு | 1973 |
| 83. | மு. வ. வின் கடிதங்கள் (டாக்டர் ஈ. சா. விசுவநாதன் பதிப்பு) | 1976 |
| 84. | டாக்டர் மு. வ. வின் கடிதங்கள் (டாக்டர் முத்துச் சண்முகம் டாக்டர் இரா. மோகன் பதிப்பு) | 1977 |

இவை அல்லாமல் பேராசிரியரின் பெயரைக் குறிப்பிடாமல் 1939, 1940, 1941–ல் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் கழகத் தமிழ் இலக்கணம் I, II, III, என்னும் மூன்று இலக்கண நூல்களோடு, ஷேக்ஸ்பியர் கதைகள் I, II எனும் இரு நூல்களையும் வெளியிட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மேற்கண்ட அட்டவணையில் இருந்து, பேராசிரியர் மு வ. அவர்களின் இலக்கியப் படைப்புகள் 1945ஆம் ஆண்டில் தொடங்கி, 1962ஆம் ஆண்டோடு பேரளவிற்கு நிறைநிலையை அடைந்துள்ளதைக் காணுகின்றோம். இந்தப் பதினேழு ஆண்டுகளில் 1950க்கும் 1956க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் அவருடைய படைப்பு ஆற்றலும் சிந்தனைத் திறனும் கொடுமுடியை எட்டிப் பிடித்தது எனலாம்.

1962க்குப் பின்னர் வெளி வந்த நூல்கள் மிகக் குறைவாகும். அவற்றுள் 'தமிழிலக்கிய வரலாறு' எனும் நூலே சிறப்புமிக்கதாகும். இவ்வாறு, பேராசிரியரின் இலக்கியப் படைப்பு ஆற்றலில்

'தொய்வு' உண்டானமைக்குக் காரணம், 1961இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப் பேற்றமை யாகும். நிருவாகப் பொறுப்பினால், இலக்கியப் படைப்பிற்குத் தேவையான ஓய்வும், அமைதியும் அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது. எழுத வேண்டும் என்னும் உள்ளத்துடிப்பு இருந்தும், எழுத இயலாத சூழ்நிலையில் சிக்குண்டு உழன்றதை அவருடைய இறுதி நாட்களில் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவர்.

# புதிய உலகம்

## புதுமைப் புலவர்

இந்நூற்றுண்டில் சிறப்புற்று விளங்கிய தமிழ்ப் புலவர்கள் பலராவர். அவர்களுள் நம் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் புகழ்மிக்கராவர். தம் வாழ்க்கையை எழுத்தராகவும், பிறகு புலவராகவும் தொடங்கியவர் டாக்டர் மு. வரதராசனுர். கடமையுணர்வும் கட்டுப்பாடும் தன்னடக்கமும் வாய்ந்தவர் அவர்; கடுமையான உழைப்பும் சிந்தனைத் தெளிவும் செயல் திறனும் உடையவர். அவருடைய அறிவுத்திறனும் ஆராய்ச்சித் திட்பமும், தமிழுலகில் ஒரு பெருஞ் சிந்தனையாளரை நமக்கு அளித்தன. அவர் பழமையை அப்படியே கண்மூடிப் போற்றவும் இல்லை! புதுமையை அருவருப்போடு வெறுத்து ஒதுக்கவும் இல்லை! பழமையில் ஆழ வேரூன்றியுள்ள நல்லனவற்றை இக்காலத்திய வாழ்க்கைக்கு ஏற்றவண்ணம் அவர் பொருத்திக் காட்டினுர்; புது மெருகு கொடுத்தார்; புதுமையின் போலிப் பகட்டில் மயங்கவில்லை; மனித வாழ்க்கையை மாண்புறச் செய்யும் அதன் சிறப்பியல்புகளைப்போற்றிக் கடைப்பிடித்தார். இதனுல், ஒரு 'புதுமைப் புலவராக' அவர் விளங்கினுர்.

## காலச் சூழல்

அவர் வாழ்வைத் தொடங்கிய காலம் மிகவும் இன்னல் செறிந்ததாகும். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியர் விடுதலைப் போர் முரசு கொட்டிய காலம் அது! அதனுல், அடக்குமுறையும் கொடுங்கோன்மையும் தலைவிரித்து ஆடின. மேற்கு நாட்டுக் கல்விமுறை, நாகரிகம் முதலியவற்றின் தாக்கத்தால் இந்தியப் பண்பாடு சிதைந்து சீரழிந்துகொண்டிருந்த காலம் அது! நிலமானியப் பிரபுத்துவப் பொருளாதார வர்க்கம், தம் வாழ்விற்காக இறுதிப் போர் தொடுத்துக் ககாண்டிருந்த காலம் அது! எங்கும் எதிலும் குழப்பமும் கொந்தளிப்பும் அன்றைய நாள் வண்ணமாக இருந்தன; பஞ்சமும் பட்டினியும் பவனி வந்தன; மனிதத்தின் மாண்பினை மதித்துப் போற்ற வேண்டிய பொறுப்பில்

இருந்தவர்கள், தங்கள் 'பூட்ஸ்' கால்களினால் மனிதத்தை மிதித்துக் கொண்டிருந்தனர். 'மனிதன் உரிமையோடு பிறந்திருக்கிறான்; ஆனால், எங்கும் அடிமைத்தளை பூண்டு அவன் அல்லலுறுகின்றான்' என்று அன்று ரூஸோ கூறியதற்குச் சிறந்த சான்றாக இந்தியர்கள் விளங்கினர்.

அவர்களுடைய அடிமைவிலங்கை உடைத்தெறிய, அண்ணல் காந்திஅடிகள் அரசியல் அரங்கில் அரும்பணியாற்றிக் கொண்டிருந்தார். இந்தியா விடுதலை பெறும் நிலையில் இந்திய மக்களுக்குப் 'புதுவாழ்வு' கிட்டவேண்டும் என்று எண்ணிய சான்றோர்கள் பலர். அவர்களுள் தமிழகத்து மறுமலர்ச்சியினை ஆக்கப்பணிகள் மூலம் வரவேற்று, வலிவும் பொலிவும் பெறச் செய்த டாக்டர் மு. வ. அவர்களும் ஒருவராவர். 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று தமிழ் மக்கள் மகிழ்ச்சியோடு துள்ளித் திரிந்த காலத்தில், 'புதியதோர் உலகு செய்வோம்: மிகப் போரிடும் இவ்வுலகினை வேரொடு சாய்ப்போம்;' என்று கூட்டத்தில் கூடி நின்று, கூடிப் பிதற்றாமல், நாட்டத்தில் கொண்ட நல்லறிஞர் நம் பேராசிரியராவர். சமுதாயச் சீர்கேடுகளையும், அவற்றிற்குரிய காரணங்களையும் ஆராய்ந்து அறிவதில் அவர் பேரார்வம் கொண்டார். திகைப்பை ஊட்டும் அப்புதிர்களை விடுவிப்பதற்குரிய வழிவகைகளைக் காண அவர் பெருமுயற்சி செய்தார். அதன் விளைவாக மனித இனம் 'அமைதியோடு கூடிய நல்வாழ்வினை' அடைவதற்குத் தகுந்த 'புதிய உலகம்' ஒன்றைப் படைக்கத் தம்முடைய அறிவையும் ஆற்றலையும், உழைப்பையும், உணர்வையும் ஒருங்கிணைத்துப் பாடுபட்டார்.

**உலகைத் திருத்த இயலுமா?**

'எல்லாவற்றிற்கும் மனிதனே மாண்புமிக்க அளவுகோல்' (Man is the measure of all things) என்னும் அடிப்படைக் கொள்கையின்மீதே டாக்டர் மு. வ. அவர்கள் தம் சீர்த்திருத்த சிந்தனைக் கோட்டையை வலுவாகக் கட்டினார். இலட்சிய நிலைக்கும் நடைமுறை நிலைக்கும் இடையே உள்ள மேடு பள்ளத்தை நன்குணர்ந்து, இன்றைய நிலையில் மனித இனத்தின் ஆன்மிக நலப்பேற்றிற்கும் மனநலப்பேற்றிற்கும் சமுதாய நலப்பேற்றிற்கும் ஏற்றவகையில் தம்முடைய புது உலகக் கோட்பாட்டை அவர் உருவாக்கினார்.

உலகத்தை நல்வழியில் நிறுத்திக் காப்பதற்காக
மகாவீரரும் புத்தரும் திருவள்ளுவரும் ஏசுநாதரும்

முகமதுநபியும், திருநாவுக்கரசரும், சங்கரரும், ராமாநுஜ ரும், தாயுமானவரும், இராமலிங்கரும், விவேகானந்தரும் செய்துள்ள முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை. ஆனால் அந்த முயற்சிகள் வீணாகப் போனதில்லை. பயன் விளைந்தே தீரும்

எனும் நம்பிக்கையுடையவர் மு. வரதராசனார்.

புதிய சிந்தனைக்கும் புதுவாழ்விற்கும் முட்டுக்கட்டையாக இருப்பன பழமைப் பற்றும், அதனால் உண்டாகும் மரபுவழிவந்த அடிமை மனப்பான்மையுமாகும். மறுமலர்ச்சியின் குழந்தையாக வளர்ந்தவர் வரதராசனார். அதனால் புதிதாக வளர்ந்துவரும் அறிவியல் ஆராய்ச்சியிடத்து மதிப்பும், பேரீடுபாடும் அவர் கொண் டிருந்தார்.

உலகத்துக்கே பொதுவான பெரிய குறைகள் இரண்டு உள் ளன. மூடநம்பிக்கை ஒன்று; ஆடம்பரம் மற்றொன்று.[1]

உலகைத் திருத்த நம் பங்கு முயற்சி செய்வோம். பணவேட்டையும் புகழ்வேட்டையும் அவற்றால் ஆகிய பல வகை ஏக்கங்களும் கவலைகளும் இல்லாமல் சமுதாயம் சீராக அமைவதற்குரிய வகையில் அறிவை வளர்ப் போம்; அறநெறியைப் பரப்புவோம். உடனே பயன் காணமுடியாமல் போகலாம். கவலை வேண்டா. எதிர்கால நன்மையைக் கருதிக் கடமையைச் செய்வோம். அங்கங்கே நல்ல விதைகளைத் தூவிச் செல்வோம். அதுவும் இயலாத நிலையானால், இயன்ற வரையில் நிலத்தைப் பண்படுத்தி விட்டுச் செல்வோம். அது நம் கடமை. நல்ல கடமையை உணர்ந்து செய்வதே நல்வாழ்க்கை.[2]

என்னும் சிந்தனைச் சுடர்கள், புத்துலகைக் காணத் துடிக்கும் அவருடைய உள்ள உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன.

### புத்துலகம் உருவாக வழி

'புத்துலகை' உருவாக்க என்ன செய்யவேண்டும் என்பதை அவர்,

ஆகவே, இன்று அறிஞர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமை தனி மனிதரைத் திருத்துவது அல்ல. சமுதா

1. செந்தாமரை, பக். 23.
2. மண்குடிசை, பக். 504.

> யத்தைத் திருத்துவதே ஆகும். ஆசையோடு போராடுவது அல்ல; அமைப்போடு போராடுவதே ஆகும். பொருட் பற்றைப் போக்குவது அல்ல; பணவேட்டையைப் போக்கு வதே ஆகும்.[1]

என அறிவுறுத்துகிறார். நமக்குச் 'சமுதாய உணர்வு' வேண்டும் (Social Consciousness) என்பதை அவர் ஆணித்தரமாக எடுத்துரைக் கின்றார். சமுதாயத்தையும், பன்னெடுங்காலமாக வளர்ந்து சிறந்து விட்டதனால் சுரண்டும் நிறுவனங்களாக மாறிவிட்ட அமைப்புகளையும் பிறருடைய உழைப்பை உறிஞ்சி, அதன் மூலம் பணமுட்டைகளாக மாறிவரும் மனிதர்களையும் எதிர்த்துப் போராடுவதன் மூலமே, 'புதிய உலகை' உண்டாக்குவதற்கு, நாம் கால்கோள் விழா எடுக்க இயலும் என்பது இதனால் புலனாகின்றது.

போராட்டத்தின் விளைவாகவே புதிய சமுதாயம் அரும்பும் என்பது அவருடைய நம்பிக்கையாகும்.

> பழைய சமுதாய அமைப்பு மறைந்து சாம்பலானால் புதிய சமுதாய அமைப்பு ஒன்றை மக்களால் காணமுடியும். அந்த அமைப்பில் பணம் இருக்கும்; பணவேட்டைக்கு இடம் இருக்காது. அறம் வாழும்; அற நாட்டம் அடிப் படையாக அமையும்.[2]

**பொருள் போராட்டம் இல்லாத வாழ்க்கை**

அப்புதிய சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்பது டாக்டர் மு. வ. அவர் களின் விழைவார்ந்த விருப்பமாகும்.

> பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்னும் நிலைமை போகவேண்டும். பொருள்பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக் கூடாது. 'பொருளில்லார் இவ்வுலகில் இல்லை' என்று மாறிய நிலைமை வந்துவிடவேண்டும்.[3]

என்பதனால் இதனை அறிகிறோம்.

> இதுவரை இருந்த உலக அமைப்பு வேறு; இனி வரப் போகும் புத்துலக அமைப்பு வேறு. பழைய உலகத்தில் பொதுமக்கள் பொருளாதாரப் போராட்டத்தில் சிக்குண்ட

---

1. அறமும் அரசியலும், பக். 49.
2. அறமும் அரசியலும், பக். 65.
3. அன்னைக்கு, பக். 26.

> வர்கள் ..., இனி அவர்களை அந்தக் கடலில் தத்தளிக்க விடும் கொடுமை இருக்காது. பொருட்போராட்டம் ஒழிந்து வாழ்க்கையில் அறப்போராட்டம் ஒன்றே நிற்க வேண்டிய அமைப்பே புத்துலக அமைப்பாகும்,[1]

என்று அவர் புத்துலக அமைப்பின் போக்கினைக் கோடிகாட்டுகின்றார்.

### சாதியற்ற சமுதாயம்

இன்றைய உலகம் இருட்டறையில் இருந்து உழலுகிறது; இதில் 'சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றான்'. ஆனால், டாக்டர் மு. வ. அவர்கள் காண விரும்பும் 'புதிய உலகில்' சாதிப் பாகுபாடு உண்டு. அது பிறப்பை ஒட்டியது அன்று; பண்பினை - குறிக்கோள் வாழ்வினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

> உன் சாதிப் பெண்ணைப் பார்த்து மணந்துகொள். முதலில் நீ என்ன சாதி என்று எண்ணிப்பார். 'இப்படித் தான் வாழவேண்டும்' என்ற சாதியா, 'எப்படியாவது வாழவேண்டும் என்ற சாதியா' என்று தெரிந்துகொள். பிறகு அதே சாதியான பெண்ணைத் தேடு[2]

என்பது அவர் இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரையாகும்.

வாழ்க்கையைப்பற்றி இருவகை நோக்கங்கள் மக்களிடையே இருந்துவருகின்றன. 'கண்டதே காட்சி; கொண்டதேகோலம்' எனக் கருதி 'எப்படி வேண்டுமானாலும்' வாழவிரும்புவோர் பலராவர். அவர்களுடைய நோக்கம் எல்லாம், 'வாழ்க்கை இன்பமயமாக இருக்கவேண்டும்' என்பதேயாகும். நெறியோடும் முறையோடும் வாழ விரும்புவோர், 'வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும்' என்பதில் கருத்தைச் செலுத்துபவராவர். இவர்கள் 'அறத்தான் வருவதே இன்பம்' எனும் கொள்கையைப் போற்றி வாழ்பவராவர். இவ்விரு சாராரையும் டாக்டர் மு.வ. அவர்கள் இருவேறு சாதியினராகக் குறிப்பிடுவது கருதத்தக்கது.

### புரட்சிக்கு வரவேற்பு

மனிதனைச் சிந்திக்கவொட்டாமல் எதற்கு எடுத்தாலும் 'விதி செய்த சதி' என்று கூறி, அவனை விலங்கினும் கீழ்ப்பட்ட நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டது இடைக்காலத்தில் சமுதாயப் போக்கு!

---

1. அரசியல் அலைகள், பக். 116-17,
2. அல்லி, பக், 287,

இன்றைய சமுதாயத்தில் இவ்வுணர்வு ஒரு கொடிய நோயாகப் பரவி உள்ளது. இந்த நினைப்பை—அடிமையுணர்வை—அகற்றினால் தான், மனிதன் தன்முயற்சியுடனும் வாழ்க்கையில் பற்றுடனும் வாழ முயலுவான். எனவே, இம்மூட நம்பிக்கையைத் தகர்த்து எறிய, பாட்டாளி மக்களும் அறிஞர்களும் முன்வர வேண்டும் என அவர் தெரிவிக்கிறார்.

> பாடுபடும் உழைப்பாளிகளுக்குப் பட்டினியும் வறுமையும்; பொன் வெள்ளித் தகடுகளைச் சேர்த்து வைக்கும் ஏய்ப்பாளிகளுக்குப் பெருமையும் வாழ்வும். ஒரு பக்கம் பட்டினி. ஒரு பக்கம் ஆடம்பரம். இது தலைவிதி என்பதா? அப்படியானால், அந்தத் தலைவிதியின் தலையைத் தட்டிப் பிளந்து எறிய உழைப்பாளிகளின் கையில் சம்மட்டிகள் இல்லையா? அறிவாளிகளின் கையில் எழுதுகோல் இல்லையா?[1]

என்று 'புரட்சிக்கு' அவர் நல்வரவேற்பு அளிக்கின்றார்.

### பெண்ணுரிமை பிறக்க வழி

குடும்பம் என்பது ஆண்பெண் ஆகிய இருவரும் கூடிவாழ்ந்து, இல்லறக்கடமைகளை இனிது நடத்துவதற்குரிய பயிற்சிக்களமாகும். 'ஒருவனுடைய மனக்கவலையை மற்றவர் குறைப்பதற்காக' ஏற்படுத்தப்பட்ட சமுதாய நிறுவனமாகக் குடும்பத்தைக் கூறுவர். அதன் சிறப்பிற்குக் காரணமாக உள்ளவர் பெண்கள். இதனாலேயே அவர்களைக் 'குடும்ப விளக்கு' என உலகம் போற்றுகிறது. ஆனால், அவர்களை அடிமைகளாக்கி வீட்டில் அடைத்துவைக்கும் அவலநிலை, நம் சமுதாயத்தினைச் சீரழித்து வருகிறது. அவர் காணவிரும்பிய புதிய சமுதாயத்தில், வீடுதோறும் சமையலறை வகுத்து, வீட்டுத்தலைவியைச் சமையற்காரியாக்கி, ஓய்வில்லாமல் உழைக்கச் செய்யும் கொடுமை இல்லை. இதனால், 'சமையலறை அடிமைகளை நாட்டுத் தாயமார்களாக ஆக்கயிருக்கக் கண்டேன்; பெண்ணுரிமை பிறக்க உதவும் வழி அது என்பதை அங்குக் கண்டேன்'[2] என ஆசிரியர் பெருமிதத்தோடு குறிப்பிடுவது, பெண்ணின் உரிமைகளை நிலைநாட்ட வழிகாட்டுவதாகும்.

### புதிய கல்வி முறை

கல்வியைக் கற்பிக்கும் முறையிலும், கற்றதைச் சோதிக்கும் முறையிலும் மாற்றம் தேவை. வாழ்க்கையோடு ஒட்டிய கல்வி

1. அந்த நாள், பக். 194.
2. கி. பி. 2000, பக். 38-39.

வேண்டும். நூல்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டும் கல்விக்கு மதிப்பு குறைய வேண்டும். மூளையை அறிவுள்ளதாக ஆக்கினுல் போதும்; அதை ஒரு சுமைதாங்கியாக மாற்றும் இன்றையக் கல்வி முறையால் விளைந்த பயன் யாது? ஒன்றும் இல்லை! தாய்மொழியின் வாயிலாகக் கல்வி கற்றலும், கற்பித்தலும் அந்தப் 'புத்துலகில்' சிறப்புற்று விளங்கும்[1] என்பது டாக்டர் மு. வ. அவர்களின் துணிவாகும்.

## கடவுள் நம்பிக்கை

இவை அனைத்தும், மனிதனை மனிதனுக வாழச் செய்வதற்கு வரதராசனுர் வகுத்துக் காட்டும் புதிய வழிமுறைகளாகும். அந்தப் புதிய சமுதாயத்தில் வாழும் மக்கள், கடவுள் நம்பிக்கையுடையவராக இருப்பர். ஆனுல் அவர்களிடையே சமயவெறியோ, சமயப் போராட்டமோ உண்டாகா. ஏன் தெரியுமா? அவர்கள் ''கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து, பொதுமையான ஆட்சிபுரியும் ஒரு பெருஞ்சக்தி''[2] என்பதை உணர்ந்தவர்களாக இருப்பதாகும். ''உடலுக்கு உயிர் எப்படியோ அப்படிப் படைப்புக்குக் கடவுள். உடல் முழுதும் உயிர் இருப்பது போல் உலகமெங்கும் கடவுளின் சக்தி உள்ளது''[3] என்பதை நன்கு உணர்ந்து அவர்கள் இறைவனைப் போற்றி வாழ்வர்.

## தக்க வழி

டாக்டர் மு. வரதராசனுர் காணவிரும்பிய புதிய உலகம் எத்தகையது என்பதை அவர் 'கி. பி. 2000' எனும் நூலில் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அவருடைய அந்தக் கற்பனையுலகிற் (Utopia)குள் அதிகமாக நுழையாமல்,[4] பிற நூல்களில் 'புத்துலகம்' எப்படி அமையவேண்டும் என்பது குறித்து காணப்படும் அவருடைய எண்ண அலைகளைக் கொண்டு வரைந்த கருத்தோவியமே இப் 'புதிய உலகம்'. இப்புதிய உலகம் மலர்ந்தால் தான் நமக்கும், நம் நாட்டிற்கும் மதிப்பு உண்டாகும்.

> நாம் ஒன்று உணரவேண்டும். இந்த நாட்டு மண்ணுக்குமதிப்பு உயர வேண்டுமானுல் இங்கே உள்ள அறநூல்களின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்

---

1. மொழிப்பற்று, பக். 102.
2. நல்வாழ்வு, பக். 10.
3. நெஞ்சில் ஒரு முள், பக். 413.
4. அந்நூல் தனிப்பட்ட வகையில் விரிவாக ஆராயத்தக்கது.

> தால் போதாது. இந்த நாட்டுமக்களின் வாழ்க்கையையே சான்றாக எடுத்துச் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு வாழ்க்கை உயர வேண்டும் ...... இந்த மண்ணில் பிறந்த எல்லோருக்கும் வாழ்வு உண்டு, வளம் உண்டு என்ற நல்ல நிலைமை ஏற்படுத்தவேண்டும். இந்த மண்ணின் மதிப்பு உயர்வதற்கு அதுதான் தக்க வழி[1]

என்பது மு. வ. அவர்களின் முடிந்த முடிவாகும்.

இத்தகைய பயன்மதிப்பு வாய்ந்த, புதிய சமுதாயத்தை-புதிய உலகை-உருவாக்க 'வித்தகம் பேசாது பணிசெய' வாரும்! என டாக்டர் மு. வ. நம்மை அழைக்கின்றார்.

1. மண்ணின் மதிப்பு, பக். 10-11.

# வரதராசனாரின் வரலாற்றுக் கொள்கை

தமிழகத்தின் மறுமலர்ச்சி இயக்க வரலாற்றில், தம் பெயரினைப் பொன்னெழுத்துகளில் பொறித்து மறைந்த அறிஞர்கள் சிலராவர். அவர்களுள் மு. வரதராசனார் ஒருவராவர். வெளிநாட்டு மக்கள், பெரும் புலமைவாய்ந்த தமிழறிஞராகவே அவரை அறிந்துள்ளனர்; இந்தியமக்களோ சிறப்புமிக்க தமிழ்ப் பேராசிரியராகவும் புகழ்மிக்க நாவலாசிரியராகவும் அவரைப் பாராட்டுகின்றனர். தமிழ் மக்களோ அவரைத் தமிழறிஞராகவும், கலைஞராகவும், சான்றோராகவும், வரலாற்று வல்லுநராகவும், மொழியியல் அறிஞராகவும், அறம் பாட வந்த அறவோராகவும் போற்றுகின்றனர். இவ்வகையில், அவர் பல பட்டைத் தீட்டப்பட்ட வைரமணியாக ஒளிர்கின்றார்.

## தமிழக வரலாற்றுக் குழுவின் தலைவர்

பன்னெடுங்காலமாகத் தமிழகத்தின் வரலாற்றைத் 'தக்க அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு செம்மையான முறையில் எழுதவேண்டும்' என்னும் எண்ணம், அறிஞர் பலர் உள்ளங்களில் எழுந்தவண்ணம் இருந்துவந்தது. தனிமனிதர் சிலர், தனித்தனியே தமிழக வரலாற்றை எழுதுவதைக் காட்டிலும், 'வரலாற்று ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ள அறிஞர் சிலரைக் கொண்ட குழுவினை அமைத்து, அக்குழுவினர் நடுநிலையில் நின்று, நல்லதொரு வரலாற்றை எழுதுமாறு செய்ய அரசு முன்வர வேண்டும்' என்று அறிஞர்கள் அவ்வப்போது எடுத்துரைத்தனர். நெடுங் காலம் இந்த எண்ணம் 'ஊமையன் கண்ட கனவாகவே' இருந்து வந்தது. 1969ஆம் ஆண்டில்தான், இம்முயற்சிக்கு ஏற்றவகையில் காலம் கனிந்தது. அன்றைய தமிழக அரசு, பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரைத் தலைவராகக் கொண்ட ஒரு வரலாற்றுக் குழுவைக் கூட்டி, இவ்வரும்பணியில் ஈடுபடுமாறு பணித்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் மு. வ. அவர்களையே, அரசினர் வரலாற்றுக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இதற்குத் தமிழக அரசு இரண்டு சிறப்புமிக்க காரணங்களைக் காட்டியது. யாரும் ஐயுறவு கொள்ள இயலாத அளவிற்கு 'உண்மையான தமிழுணர்வு மிக்கவர் டாக்டர் மு. வ.' என்று அரசு அறிவித்தது. மற்றும், 'எளிதில் உணர்ச்சிவயப்பட்டு இரு எல்லைகளுக்கும் சென்றுவிடாமல் என்றும், எங்கும், எதிலும் நடுவுநிலையைப் போற்றும் தமிழறிஞர் டாக்டர் மு. வ. ஒருவரே' என்று அரசினர் ஆணித்தரமாக எடுத்துரைத்தனர். இந்நிலையில், பேராசியர் மு. வ. அவர்கள் புதிய பொறுப்பை மறுக்க இயலாது, ஏற்கவேண்டி நேரிட்டது. இப்பொறுப்பை ஏற்று, ஒல்லும் வகையெல்லாம் ஓயாது, இப்பணி சிறக்க அவர் அயராது பாடுபட்டார்.

இதற்கு முன்னர், அவர் சில 'வாழ்க்கை வரலாற்று' நூல்களை எழுதியுள்ளார். எனினும் நாட்டு வரலாற்று நூல்களை வரைவதில் நாட்டமோ, பண்பாட்டு வரலாற்று நூல்களைப் படைப்பதில் பரிவோ அவர் கொண்டதாகத் தெரியவில்லை என்பர் சிலர்.[1] உண்மைதான்! ஆனால், எண்பதுக்கு மேற்பட்ட அவருடைய படைப்புகளில், 'வரலாற்றைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள்' இலைமறை காய்போல இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்து நோக்குவோமாயின், டாக்டர் மு. வ. அவர்களின் வரலாற்றுக் கொள்கை இனிது புலனாகும்.

**உண்மை வரலாறு எது ?**

'வரலாறு எழுதுவது எளிய செயல் அன்று' என்பதை டாக்டர் மு. வ. நன்குணர்ந்து இருந்தார். ''கடந்தகாலம் என்னும் எல்லையில்லாப் பெருவெளியில் காலத் தச்சன் கட்டியுள்ள அனுபவம் என்னும் மாபெரும் கோபுரமே வரலாறு. இப் பழம்பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி, அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தைக் காண முயல்வது எளிய செயல் அன்று. எனினும், இளைஞர்கள் ஆற்றல்மிக்கவர்கள். அவர்கள் முயன்றால், அப்பெருவெளியின் முழுத்தோற்றத்தையும் காணலாம்'' என்பதை அவர் அடிக்கடி அறிவுறுத்துவார். இது வரலாறு எழுதுவதைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்தினைத் தெரிவிக்கிறது.

'வரலாறு என்பது என்ன?' எனும் எண்ணம் நம் அகத்தே எழுவது இயற்கை. 'வரலாற்றிற்குப் பலவகையான விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றை எல்லாம் அலசி, ஆராய்ந்த டாக்டர்

1. 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் அவருடைய நூலை, சாகித்திய அக்காதெமி வெளியிட்டுள்ளது.

மு. வரதராசனார் அவர்கள், "மக்களினம், நினைவுக்கு எட்டாதத் தொல்பழங்காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில், இன்று வரை அடைந்துள்ள வெற்றித்தோல்விகளையும் பெருமை சிறுமை களையும், வாழ்வு தாழ்வுகளையும், இன்பதுன்பங்களையும் ஏமாற்றங் களையும் சுவையோடு முறையாகக் கூறும் தொடர்கதையே வரலாறு'' எனக் கருதியதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

**இலக்கியமும் வரலாறும்**

''இலக்கியமும் வரலாறும் இணைபிரியாத இரு சகோதரிகள்'' என்பதை அவர் நன்குணர்ந்து இருந்தார்; எனினும் அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை அவர் சுட்டிக் காட்டத் தவற வில்லை :

> வரலாறு வேறு; இலக்கியம் வேறு. இது உண்மை தான். புலவர்கள் இயற்றிய இலக்கியத்தில் உள்ளன எல்லாம் வரலாற்றுப் பகுதிகளே என ஏற்றுக்கொள்ள இயலாது. இலக்கியத்தில் உயர்வு நவிற்சி உண்டு. ஆனால், புலவர்கள் எல்லாவற்றையும் அளவுகடந்து உயர்த்திக் கூறுவதில்லை : சங்க இலக்கியப் புலவர்களோ உயர்வு நவிற்சியை வரையறை செய்து அளவுபடுத்தி ஆண்டிருந்தனர். வியப்புணர்ச்சி மிகுதியால் பாடும் இடங்கள் தவிர, மற்ற இடங்களில் பெரும்பாலும் உள்ளதை உள்ளவாறு கூறுதலே சங்கப் பாடல்களின் இயல்பு.[1]

இப்பகுதியால் மற்றோர் செய்தி புலனாகின்றது. சங்க இலக்கியப் பாடல்களை வரலாற்று ஆராய்ச்சிக்குரிய அடிப்படைச் சான்றுகளாகக் கொள்ளலாம் என்னும் கருத்துடையவர் பேராசிரியர் என்பது தெரியவருகின்றது.

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு, நாம் சங்க இலக்கியங்களையே பெரிதும் ஆதாரமாகக் கொள்ளவேண்டிய அவலநிலை இருந்துவருவதற்குரிய காரணத்தை அவர் எண்ணிப் பார்த்துள்ளார். வேறு வகையான சான்றுகள் பல கிடைக்காமற் போனதை எண்ணி, அவர் ''பண்டைத் தமிழகம் வரலாற்றைப் பற்றிக் கவலையுறாத நாடு. ஆதலின் வரலாற்றின்கண்கொண்டு புலவரைப்பற்றி ஆராய்வதற்கு ஒன்றும் இல்லை!''[2] என்று வருந்து கின்றார்.

---

1. குடும்ப வழிபாடு, மதுரைக் கும்பாபிடேக மலர், மதுரை, 1963; பக். 153.

2. ஔவைச்செய்தி, பக். 26.

**தமிழரின்குறை**

பண்டைத் தமிழர் காலவழிச் செய்திக் கோவைகளையோ (Chronicles), வரலாற்றுக் குறிப்பேடுகளையோ எழுதிப் போற்றாமை யால், இன்று, பண்டைய வரலாற்றை எழுதுவதற்கு உண்டாகும் இன்னல்களையும் இடையூறுகளையும் நடைமுறையில் நன்குணர்ந்த வர் நம் பேராசிரியராவர். அவருடைய உள்ளக் குமுறலை, இதயக் கொந்தளிப்பை,

> தனித்தனி மாந்தரின் பிறப்புநாள் நாழிகை முதலிய வற்றைக் குறித்துவைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாதிருந்தது வருந்தத்தக்கதே. தனியாட்களைப் போற் றும் அளவிற்கு நாட்டைப் பொதுவாகப் போற்றும் நல்ல கொள்கை இங்கு இன்னும் வேரூன்றவில்லை! பிற்காலத்துக் கல்வெட்டுக்களிலும் நாட்டுப் பெருநிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடும்போது, நாட்டுக்குப் பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் (Era) குறிப்பிடாமல், அந்த அரசன் முடிசூடிய ஆண்டிலிருந்து கணக்கிட்டு அவனு டைய ஆட்சியில் இத்தனையாம் ஆண்டு என்று குறிப்பிடும் வழக்கமே காணப்படுகின்றது. பொதுவான மரபை உடைய ஆண்டின் கணக்கால் குறிப்பிட்டிருந்தால் இன்றைய வரலாற்று ஆராய்ச்சிக்கு அது ஓரளவு துணை புரியும். வரலாற்றில் எழுதுவோரின் மனப்பான்மைக்கு ஏற்பப் பொய்யும் திரிபும் புகுதல் எங்கும் உள்ள இயல்பே எனினும், அவற்றினிடையே கால ஆராய்ச்சி பற்றிய உண்மை காண்பதற்கேனும் வழி இருந்திருக்கும்[1]

என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பகுதியிலிருந்து, மூன்று கருத்துகள் தெளிவாகத் தெரி கின்றன. முதலாவதாகப் பொதுவான வரலாற்றுச் செய்திகளைப் பண்டைத் தமிழர் போற்றி எழுதிவைக்காததைக் குறிப்பிடுகின்றார்; இரண்டாவதாக ஒரு பொது ஊழிக்காலத் (Era) தைத் தமிழர் பயன் படுத்தாததைச் சுட்டுகின்றார்; மூன்றாவதாக வரலாறு எழுதுவோர், தம் விருப்பு வெறுப்பிற்கேற்பப் பொய்யும் திரிபும் கலந்த செய்திகளை வரலாற்று ஏடுகளில் நுழைத்துள்ளதை ஆசிரியர் நயமாகக் கண்டிக் கிறார். இவை யாவும 'அவருடைய வரலாற்று ஆராய்ச்சி மனப் பான்மை எத்தகையது? என்பதை எளிதில் அறிந்துகொள்ளத் துணை புரிகின்றன.

---

1. மொழிவரலாறு, பக். 368.

**வரலாற்றுக் கலையைப் போற்றாதது ஏன்?**

'தமிழருக்கு வரலாற்றுணர்வு போதிய அளவு அன்றும் இல்லை; இன்றும் இல்லை: இதற்குக் காரணம் என்ன?' எனும் கேள்வி அவருடைய உள்ளத்தைப் பெரிதும் வாட்டியுள்ளது. இதற்குரிய காரணத்தை, அவர் பல கோணங்களில் ஆராய்ந்து பார்த்துள்ளார். அவர் கண்ட முடிவு:

> *தமிழர் விளம்பரம் செய்துகொள்ளாத, வரலாறு எழுதிவைக்கவும் முடியாத ஒருவகைக் கூட்டம். தனித்தனியாக உயரும் பண்பாடு உண்டே தவிர, ஒன்றுபட்டுக் கூட்டாக உயரும் இயல்பு இல்லாத இனம் தமிழர் இனம். ஆகையால் உலகறிய வாழத் தெரியவில்லை. செல்வாக்குப் பெற முடியவில்லை*

என்பதாகும். இன்றும் தமிழினத்தை அரித்துத் தின்னும் வேர்ப் புழுவாக இருப்பது இவ்வியல்பேயாகும்.

# பண்பாட்டின் காவலர்

**எங்கள் பேராசிரியர்**

இருபதாம் நூற்றுண்டில் தமிழ் வளர்த்த பெரியார்கள் பலர். அவர்களுடைய முன் வரிசையில் பேராசிரியர் மு. வரதராசஞர் சிறப்பிடம் பெறுகிருர். அவர் ஒரு தமிழ்ப் புலவர்; ஆராய்ச்சி யாளர்; பேராசிரியர்; எழுத்தாளர்; புத்திலக்கியப் படைப்பாளர்; திறஞய்வாளர்; மொழியியல் அறிஞர்; சமுதாயச் சிந்தனையாளர்! மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தமிழ்மொழி வளமும் வனப்பும், வலிவும் பொலிவும் அடையுமாறு செய்தவர் மு. வரதராசஞர்!

அவர் எங்களுடைய வணக்கத்திற்குரிய ஆசிரியராவர். தமிழில் அறிவுத் திறனும், ஆராய்ச்சி மனப்பான்மையும் உடைய மாணவர்களாக, எங்களை அவர் உருவாக்கினர். இருபது ஆண்டு களுக்கு முன்னர் அவருடைய திருவடிகளின் கீழ் அமர்ந்து, தமிழைக் கற்கும் பேற்றினைப் பெற்றவன் யான். அவரிடம் தமிழ்மொழி யையும், தமிழ் இலக்கியத்தையும் மட்டும் கற்கவில்லை! தமிழ்ப் பண் பாட்டின் சிறப்பு இயல்புகள் பலவற்றைக் கற்கும் வாய்ப்பையும் பெற்றேன். தமிழ்க்கல்வியின் - புலமையின் - தலைவராக நாங்கள் அவரைக் கண்டோம்; தமிழ்ப் பண்பாட்டின் முழுநிறை வடிவமாக உணர்ந்து, அவரைப் போற்றினேம். பண்டைத் தமிழ்ச் சான் ருேரின் விழுமிய இலட்சியங்களை, நாள்தோறும் தமிழ் உணர்வோடு குழைத்து, எங்களுக்கு அவர் ஊட்டி வந்தார். பண்பட்ட புதிய உலகைக் காண மரபுவழிக் கல்விமுறையில், புதிய சிந்தனைகளையும், எழுச்சியூட்டும் உணர்வுகளையும் அவர் ஓயாது ஊட்டி வந்தார்.

**வழிகாட்டி**

நம் நாட்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்க மும் அளிக்கும் பணியில் அறிஞர் மு. வ. அயராது உழைத்தார். அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற நம் நாட்டின்

விடுதலைப் போராட்ட காலத்தில் அவர் வளர்ந்து, சிறந்த தேசபக்த ராளுர். தம் தமக்கையின் கணவர் சிறைப்பட்ட பிறகு மூன்று குடும் பங்களைக் காக்கவேண்டிய பொறுப்பு அவரைச் சேர்ந்ததால், விடுத லைப் போராட்டங்களில் நேரடியாகக் கலந்துகொள்ள இயலாது அவர் ஒதுங்கி நின்ருர். அவருடைய இனிய பண்புகள், தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் பல பெரியோர்களின் அன்பையும் ஆதரவையும் தேடித்தந்தன. அவருடைய மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் மட்டும் அல்லாமல், அவருடைய நூல்களைப் படித்து அவரிடம் ஈடுபாடு கொண்ட முன்பின் அறிமுகம் இல்லாத மனிதர்களுக்கும் அவர் அறவோராய், நண்பராய், வழிகாட்டியாய் விளங்கினர்.

தமிழ் மாணவர்களாகிய நாங்கள், அவரிடம் பேரீடுபாடு கொண்டு இருந்தோம். இல்லை! அதற்குமேல் ஒருபடி சென்று, அவருடைய அறவுரைகளைப் பின்பற்றி வாழ முயன்ருேம்! திருவள்ளுவரைப் பற்றிய பழம்பாடல் ஒன்று,

> அவனே புலவன்!
> அவனே அறிஞன்!
> அவனே தமிழை முழுதுணர்ந்தோன்!

எனப் போற்றுகிறது.

டாக்டர் மு. வ. அவர்கள், இப்பாடலிற்கு நல்லதோர் இலக்கிய மாக நம்மிடையே வாழ்ந்ததை எண்ணி மகிழ்ந்த நாள்கள் பல!

### தமிழ் நெஞ்சம்

உலக அரங்கில் தமிழின் பெருமையை நிலைநாட்டவும், தமிழ ரின் நிலையை உயர்த்தவும் அவர் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது முயலுவதை, எங்கள் மாணவப் பருவத்திலேயே நாங்கள் நன் குணர்ந்து இருந்தோம். சங்ககாலப் புலவன் ஒருவன், தன்னுடைய புரவலனுகிய வள்ளல் ஒருவனை நோக்கி 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே!' என்று தன் உள்ள உணர்வினை வெளிப்படுத்தி ஞன். 1952ஆம் ஆண்டு, சென்னையில், அனைத்துக் கல்லூரித் தமிழ் மாணவர் பேரவை நடத்தியப் பொங்கல் விழாவில் பேராசிரியர் மு. வரதராசனர் கலந்துகொண்டார். அப்பொழுது, ''தமிழ் மாணவர் ஒவ்வொருவரும் 'என் நெஞ்சம் திறப்போர் தமிழைக் காண்குவரே!' எனக் கூறத்தக்க உணர்வும், தாய்மொழிப் பற்றும் உடையவர்களாக விளங்க வேண்டும்'' என்று அவர் அறிவுறுத் தியமை, இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டுள்ளன.

### பழமையிலே புதுநினைவு

என்றுமே, தாம் ஒரு பெரிய கல்வியாளன் என்று அவர் கருதியது இல்லை! ஆனால், பழம்பெரும் கல்விக் கோட்பாடுகளுக்கு அவருடைய கல்விச்சிந்தனைப் புதுவடிவமும், புதுப்பொலிவும் கொடுக்கத் தவறியது இல்லை! புதுமை எண்ணப் போக்குடைய மரபுவழி வந்த தமிழ்ப் புலவர் மு. வரதராசனார் என்பதை நாம் மறத்தலாகாது! எப்பொழுதும் அவர், பழமையைக் கண்மூடிப் போற்றவில்லை! அறிஞர் அண்ணா, 1948ஆம் ஆண்டு ''புலவர்கள் பழமைப் பாசறையின் காவலர்கள் எனும் நிலை மாறவேண்டும்'' என்று தெரிவித்த செய்தியை, டாக்டர் மு. வ. அவர்கள் எங்களுக்கு எடுத்துரைத்துள்ளார். இயன்ற வழிகளில் எல்லாம், தமிழ்ப் புலவர்கள் (எம். ஏ. பட்டதாரிகள் உட்பட), பண்டைத் தமிழ் அறிவுச்சுடரினைப் புதிய அறிவியல் மனப்போக்கு எனும் எண்ணெய் வார்த்துப் பேரொளிப் பிழம்பாக ஒளிரச் செய்ய வேண்டும் என்று அவர் அடிக்கடி அறிவுறுத்தி வந்தார்.

### எத்தகைய கல்வி ?

டாக்டர் மு வ. அவர்களின் கல்விக் கொள்கை எளிமையானது; முற்போக்கு இயல்பு வாய்ந்தது; நடைமுறையில் செயல்படுத்தத் தக்கது. ''கல்வி மனித குலத்திற்கு நலம் பயப்பதாக அமைய வேண்டும். மனித இனம் நேற்றுப் பட்ட துன்பத்திலிருந்து தப்பி, அமைதியையும் இன்பத்தையும் காண உதவுவதாகக் கல்வி இருக்க வேண்டும்'' என்பதில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். மாணவர் சமூகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, தீவிரமான சீர்த்திருத்தங்களை, நம்முடைய கல்விமுறையில் செய்ய வேண்டும் என்று அக்காலத்தில் அவர் எழுதியும் பேசியும் வந்தார். ''அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு உதவுவதோடு, மனிதனுடைய ஆளுமையை வளர்க்கத் தூண்டுவதாகவும் கல்வி அமைய வேண்டும். ஒவ்வொரு கல்வி நிலையத்தையும் விட்டு இளைஞர்கள் வெளியே செல்லுகின்றபொழுது பல்வேறு உணர்வுகளும், பண்புகளும் இணைந்தும் இயைந்தும் உருவாக்கப்பட்ட ஆளுமை உடையவர்களாக அவர்கள் விளங்க வேண்டும். இந்த நோக்கத்தோடு கல்வி நிறுவனங்கள் செயல்பட வேண்டும். தனிப்பட்ட ஒரு துறையில் சிறப்புமிகு அறிவைப் புகட்டுவதே கல்வி நிறுவனங்களின் தலையாய நோக்கமாக இருத்தல் கூடாது. தனிப்பட்ட முறையில் சிந்திக்கவும், தீர்வுகாணவும் உதவக்கூடிய அறிவுத் திறனை வளர்ப்பதே கல்வியின் முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டும். மாணவர்கள் உறுதிப் பேறுகளை – புயன்மதிப்புகளை – உணர்ந்து போற்றத்தக்க

அறிவும் சிந்தனைத் திறனும் பெறுவதே கல்வி கற்பதனால் அடையக் கூடிய முடிந்த பயனாக இருக்க வேண்டும்'' என்பதே மூதறிஞர் மு. வ. அவர்களுடைய கல்விக் கொள்கையின் சாரமாகும்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, எளிதில் அடைவதற்கு, தம்முடைய மக்களின் காலமும் உழைப்பும் வீணாகாமல் விரைவில் அடைவதற்குத், தாய்மொழிவழியே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்னும் தெளிவு உடையவராக- அதைச் செயல்படுத்துவதில் உறுதி யுடையவராக–அவர் விளங்கினார்.

## தமிழ்க் கல்வியின் காவலர்

பழந்தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள சிறப்புமிகு சிந்தனை களையும், அறவுரைகளையும் நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு அவர் அரும்பாடு பட்டார். தம்முடைய ''விருந்து'' ''செல்வம்'' எனும் நூல்களின் மூலம், சங்க இலக்கியக் சல்விக்கு அவர் புதிய தொரு கவர்ச்சியை ஊட்டினார். தமிழ்க் கல்விக்கு, அவர் புதிய துறைகள் பலவற்றைத் தோற்றுவித்தார். தமிழ்நாட்டில் B. O. L. (Hons) எனும் தமிழ்ப் பட்ட மேல்படிப்பைத் தொடங்குவதற்கு மூலகாரணமாக மு. வ. அவர்கள் விளங்கினார். தமிழ்ப் பட்ட மேல் படிப்பான B. O. L. (Hons) ஐ, மற்ற B. A. (Hons) B.Sc., (Hons) பட்டங்களோடு ஒத்த தகுதியுடையதாக மதராஸ் அரசுப்பணி அலுவலர் தேர்வுக் கழகத்தை (M. P. S. C.) ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு அவர் அயராது முயன்றார்; வெற்றியும் பெற்றார். அதன் பிறகு, பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் தமிழ் B. A. (Hons) பட்டப் படிப்புப் புகுத்தப்பட்டு, B. O. L. (Hons) பையப்பைய நீக்கப்படுவதற்கும் அவர் வழிவகை செய்தார்.

## தனிநிலைக் கல்வியின் முன்னோடி

எவ்வாறாகிலும் உயர் கல்வி கற்று, மக்கள் முன்னேறுவதற்கு அரசு வாய்ப்பு அளிக்க வேண்டும் எனும் எண்ணம் உடையவராக அவர் விளங்கினார். எனவே, தனிநிலைக் கல்விக்கு அவர் பேராதரவு தந்தார். பள்ளி இறுதி வகுப்பிற்குப் பிறகு, வித்துவான், பி. ஓ. எல். (B. O. L.), எம். ஓ. எல். (M. O. L.), பிஎச்.டி. (Ph. D.) ஆகிய பட்டங்களை அவர் தனிநிலைக்கல்வியின் வழியாகவே பெற்றார். இதனால், தனிநிலையில் படித்துத் தேர்வு எழுதும் மாணவர்களிடம் அவர் பரிவுமிக்கவராக விளங்கினார். இப்பரிவும் இரக்கவுணர்வும் மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல்வழிக் கல்வி யைத் தொடங்கத் தூண்டியது எனலாம். ஒருமுறை, அஞ்சல்வழிக் கல்விமுறைப் பரிசோதனையில் தாம் வெற்றி பெற்றுவிட்டதாகக்

கூறிப் பூரிப்பு அடைந்தார். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் இருந்தும் அஞ்சல் வழிக் கல்விக்கு ஊக்குவிப்பும் ஆதரவும் தரப்படுவதாகத் தெரிவித்தார். ஒரு குடும்பத்தில் மாமனார், மகன், மகள், மருமகள், பேரன் ஆகிய மூன்று தலைமுறையினர் ஒரே சமயத்தில் அஞ்சல்வழிக் கல்வி கற்பதாகவும், அக்குடும்பத்தினர் விரைவில், பட்டமேற்படிப்பினை இக்கல்விமுறையில் கொண்டுவருமாறு வேண்டி, கடிதம் எழுதியுள்ளதாகவும் மகிழ்ச்சியுடன் அவர் குறிப்பிட்டார்.

## ஒப்பியல் ஆராய்ச்சிக்கு வழிகாட்டி

உயர் கல்வியில், சிறப்பாக ஆராய்ச்சி நிலையில், அவர் ''ஒப்பியல் ஆராய்ச்சி'' முறையைப் பெரிதும் போற்றி ஆதரித்தார். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கிய பொழுது, அவருடைய அறிவுநலங் கனிந்த தலைமையின் கீழ், திருக்குறள் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றும் பேற்றினை யான் பெற்றேன். அப்பொழுது 'உலகச் செம்மொழிகளில் உள்ள நீதி இலக்கியங்களோடு, நடுவுநிலையில் நின்று திருக்குறளை ஒப்பிட்டு, ஆராய்ந்து, அதனால் புலனாகும் உண்மைகளை உலகிற்கு உணர்த்துமாறு' என்னைப் பணித்தார். என்னுடைய அறிவாற்றல் குறைபாடுடையது; குறுகிய வரம்புக்கு உட்பட்டது என்பதை நன்கு உணர்ந்திருந்த நான், முதலில் அப்பணியில் ஈடுபடத் தயங்கினேன். என் நிலையை உணர்ந்த பேராசிரியர், ஒருநாள் என்னை அவருடைய அறைக்கு அழைத்தார். ''அறிவாற்றலும் ஆராய்ச்சித் திறமையும் ஓரிரு நாள்களில் வந்தடையக் கூடிய பேறு அல்ல. தன் நம்பிக்கையோடு தொடர்ந்து முயன்றால், உறுதியாக உனக்கு வெற்றி கிடைக்கும். என்னிடம் இதுவரை படித்தவர்களில், ஆழ்ந்த புலமையோடு பரந்துபட்ட அறிவும், ஆராய்ச்சி நோக்கும் உடையவர்கள் மிகமிகக் குறைவு. உன்னிடம் இந்த இயல்புகள் ஒன்றாகச் சேர்ந்துள்ளதனால்தான், உன்னைத் திருக்குறள் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்தோம். வடமொழி தெரியாதே! கிரீக்கும் இலத்தீனும் புரியாதே! என்று கவலைப்படாதே! உன்னுடைய ஆங்கில அறிவைக் கொண்டு, தேவையானவற்றைத் தெரிந்து கொள்ளலாம். அதற்குமேல் தெளிவு பெற விரும்பினால், லயோலா கல்லூரியில் உள்ள டாக்டர் ஞானப்பிரகாசம் போன்ற பாதிரிமார்களின் உதவியை நாடலாம். அவர்கள் எல்லாம் கிரேக்க, இலத்தீன் மொழிகளில் பெரும்புலமை வாய்ந்தவர்கள்'' என்று கூறிய அறிவுரை, எனக்கு நல்லதொரு 'டானிக்'காக அமைந்தது. ஆர்வத்தோடு அப்பணியில் ஈடுபட்டேன். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், பேராசிரியரிடம் ஒப்பாய்வுப் பணியைப்பற்றிக் கலந்து கூறையாடி

வந்தேன். 1969ஆம் ஆண்டு, கோடை விடுமுறைக்குப் பின்னர், அவரைச் சந்தித்தேன். உரையாடலுக்கு இடையே, யாதோ நினைவு வந்ததைப் போன்று, அவர் முகத்தில் புத்தொளி தவழ்ந்தது. ''இலக்கியம் இன்புறுத்துவதாக மட்டும் அமையாமல் அறிவுறுத்துவதாக, வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதாக இருக்க வேண்டும்' எனும் நம்முடைய (தமிழருடைய) கொள்கையை இங்கிலாந்தின் இக்காலப் பேராசிரியர் ஒருவர் விரிவாக எழுதியுள் ளார். விடுமுறையில், பெங்களூர் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் அந்நூலைப் படித்தேன். உனக்குப் பயன்படும் என்று அதைப் பற்றிய செய்திகளை ஒரு சிறு தாளில் குறித்துக்கொண்டு வந்துள் ளேன்'' என்று சொன்னார்.

சில நாள்கள் கழிந்த பிறகு, அவரே எங்கள் திருக்குறள் துறை யின் அறைக்கு வந்து என்னை அழைத்து, வருத்தத்தோடு ''அந்த நூலைப் பற்றிய குறிப்பினைத் தேடினேன்; வைத்த இடம் நினைவிற்கு வரவில்லை. எவ்வாறாயினும் அந்தப் புத்தகத்தை நீ தேடிப் படித் தால், உனக்குப் புத்தொளி கிடைக்கும்!'' என்றார். நான், சிறிது தயக்கத்துடன் 'நூலின் பெயரோ, ஆசிரியரின் பெயரோ தெரியாமல் எப்படி ஐயா அதைக் கண்டு பிடிப்பது?'' என்றேன். சிறிது நேரம் நின்றநிலையிலேயே ஆழ்ந்து சிந்தித்தார். இடையில் நான் டி. எஸ். எலியட் போன்ற பல திறனாய்வாளர்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். தம் தலையை அசைத்து மறுத்த வண்ணம் சிறிது நேரம் நின்றார். பிறகு ''எனக்கு ஒன்றேயொன்று தான் நினைவிற்கு வருகிறது. அந்த நூலாசிரியர் அண்மைக் காலத்தில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இலக்கியப் பேராசிரிய ராக இருந்தவர். நீ முயன்று பார்! இரண்டு நாள்கள் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் உள்ள திறனாய்வு நூல்களைப் புரட்டிப் பார்! கிடைக்கும்'' என்று அறிவித்தார்.

அந்த வார இறுதியில், கிரகம் ஹவுஷ் (Graham Hough) என்னும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் எழுதிய 'திறனாய்வு பற்றிய கட்டுரை' (An Essay on Criticism) எனும் நூலோடு அவருடைய அறையின் வாயிலில்போய் நின்றேன். என்னைக் கண்டவுடன், தம் இருக்கையைவிட்டு எழுந்து வாயிலுக்கு வந்து கொண்டே, என் கையிலிருந்த புத்தகத்தைச் சுட்டிக்காட்டி, ''இதே புத்தகம் தான் நான் சொன்னது!'' என்று சொல்லிய வண்ணம் அந்த நூலை என்னிடம் இருந்து வாங்கிக் கொண்டார். நூலின் சில பக்கங்களை இங்கும் அங்கும் புரட்டினார். என்னை இருக்குமாறு சொல்லிவிட்டு, அந்த நூலில் எனக்குத் தேவையான இயலில் இருந்து பல பகுதிகளைப் படித்து விளக்கினார். 'இருவகை

இலக்கிய அமைப்புகள்' எனும் பகுதியில் இருந்த பல சிக்கலான செய்திகளைப் பேராசிரியர் மு. வ. அவர்கள், தமக்கேயுரிய பாணியில் தெளிவாகப் பகுத்துப் பகுத்துக் கூறினர். பின்னர் 'இலக்கியமும் சமூகவியல்புகளும்' எனும் பகுதியை என்னைப் படிக்குமாறு சொல்லி, பிறகு, அதன் திரண்ட பொருளை எனக்கு எடுத்துரைத்தார்: இதற்கு இடையில், மணி (மாலை) ஐந்தாகி விட்டது. ஊழியர் இரண்டுமுறை உள்ளே வந்து நினைவு படுத்திவிட்டுச் சென்றார்; அவருடைய ஊர்தியின் ஓட்டுநர் வந்து, 'வண்டி வந்துவிட்டது' என்றார். ஆனல், அவர், அந்நூலிலே கருத்தைச் செலுத்திய வண்ணம் எனக்கு விளக்கிக்கொண்டு இருந்தார்.

பிறகு அந்த நூலை என்னிடம் கொடுத்து, "அண்மையில் வெளி வந்த நூல்; நம் நூலகத்தில் இருக்காது! ஆழ்ந்து படித்துப்பார்! நம் நீதி நூல்களுக்கு இந்தப் பின்னணியில் விளக்கம் கொடு! 'கவிதை கவிதைக்காக' என்பாரின் கற்பனைக் கோட்டையை ஆசிரியர் எவ்வாறு தகர்த்து, பொடியாக்குகிறார் பார்! இந்த உணர்வை அமெரிக்கர் இடத்தில் காண இயலாது!" என்று அறிவுரை கூறினர். நான் விடை பெற்றுக் கொண்டு என் அறைக்குச் சென்றேன்.

சிறிது நேரத்திற்கு எல்லாம், வண்டி ஓட்டுநர் வந்து, "ஐயா உங்களைக் கூப்பிடுகிறார்" என்று சொன்னர். நான, என்னுடைய கடையைக் கட்டிக் கொண்டு சென்றேன். அவரோ, வண்டிக்கு வெளியே கதவைப் பிடித்துக் கொண்டு, நின்று கொண் டிருந்தார். என்னைப் பார்த்தவுடன் "அந்த நூலை எப்படிப்பா கண்டுபிடித்தே! பெரிய சாதனையைச் செய்து இருக்கிறயே! ஊர் பேர் நினைவில்லாமல் நூலின் கருத்தை ஏதோ சொன்னேன். எப்படியோ தேடிப்பிடித்துக் கொண்டு வந்துவிட்டாயே!" என்று வியந்து பாராட்டினர். பிறகு "இன்றைக்கு ஏதோ பசியாக இருக் கிறது! வா போய் ஏதாகிலும் சாப்பிடுவோம்!" என்று அழைத்தார்.

ஓட்டுநரிடம் யாதோ சொன்னர். வண்டி எழுமூரில் இருந்த 'வேகா' எனும் சிற்றுண்டி விடுதியின் முன்னர் நின்றது. உள்ளே சென்றோம். "சென்னையில் வேறெங்கும் கிடைக்காத வடநாட்டுச் சிற்றுண்டி இங்குக் கிடைக்கும்" என்று சொல்லியவண்ணம், யாதோ கொண்டுவரச் சொன்னர். ஒரு தட்டில் பச்சைபூரி போன்ற ஒன்றும், மற்றொரு தட்டில் தேங்காய்ப்பால் போன்ற ஒரு குழம்பும், வேறுசில பொருள்களும் வைக்கப்பட்டன. நான் இதற்கு முன்னர்; அந்தச் சிற்றுண்டியைச் சாப்பிட்டது இல்லை. நான், தோசையைப் பிட்டுச் சாப்பிடுவதுபோல, அதை உண்பதற்கு முயன்றேன். உடனே, அவர் என் குழம்பை எடுத்து, பூரிபோன்ற பொருளில்

ஊற்றிப் பிசைந்து தந்தார்; அப்பொழுது அதன் பெயரைச் சொன்னார். அப்பெயர் என்ன என்பதை இப்பொழுது நினைவுபடுத்திப் பார்க்கிறேன். என்ன என்பதே நினைவுக்கு வரவில்லை. அந்த உணவு விடுதிக்குச் சென்று தெரிந்து கொள்ளலாமே என்று, சென்ற வாரம் அங்குச் சென்றேன். அந்த உணவு விடுதியும் இப்பொழுது இல்லை என்பதை அறிந்தேன். ஐயாவும் இல்லை! உணவு விடுதியும் இல்லை! ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றமாகப் போயிற்று!

நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம், ஒப்பியல் ஆராய்ச்சிப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த பேராசிரியர், எவ்வாறு எல்லாம் எங்களுக்கு உறுதுணையாக, தூண்டுகோலாக விளங்கினர் என்பதைத் தெரிவிப்பதற்காகவேயாகும். இதற்கு மேலாக ஒப்பு இலக்கியத் திறனாய்வு நூலான 'திருக்குறள் நீதி இலக்கியம்' இன்று சாகித்திய அக்காதமி பரிசைப் பெற்ற நிலையில், அதை உருவாக்க உதவிய-வழிகாட்டிய-நெறிப்படுத்திய-எங்கள் பேராசிரியர் கண்டு மகிழ்வதற்கு நான் கொடுத்து வைக்கவில்லையே! என்னும் என் ஆற்ருமையைப் புலப்படுத்துவதற்கே யாகும்.

அந்நூல் வெளிவந்த சிலவாரங்களுக்குள் எனக்கும், அவருக்கும் ஐந்தாறு கண்டனக் கடிதங்கள் வந்தன. திருவள்ளுவரின் தனிப் பெருஞ்சிறப்பினை உணராது, அவருடைய புகழிற்குக் களங்கத்தை உண்டாக்கிவிட்டதாகக் கண்டித்து எழுதப்பட்ட கடிதங்களாக அவை இருந்தன. பேராசிரியரிடம் என்னுடைய அதிர்ச்சியைப் புலப்படுத்தினேன். புன்முறுவலோடு, "உனக்கு மட்டுமா வந்துள்ளன? எனக்கும்தான் வந்துள்ளன. வருத்தப்படாதே! நாம் என்ன வள்ளுவரின் விரோதிகளா? நமக்கு அவருடைய பெருமையில் பங்கு இல்லையா? காலம் பதில் சொல்லும். நீ பதில் எழுத வேண்டா! இதோ! இந்தக் கடிதங்களோடு அவற்றையும் சேர்த்துக் கிழித்து இந்தக் கூடையில் போடு!" என்று அவர் பணித்தார். அந்தக் காட்சி என் மனத்திரையைவிட்டு இன்றும் நீங்கவில்லை.

## தமிழர் இயல்பு

டாக்டர் மு. வ. தமிழ்ப் பண்பாட்டின் முழுநிறை வடிவமாக விளங்கினர். "ஓர் இனத்தின் பண்பாட்டு வளர்ச்சி உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றின் ஒருமித்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. நாம் உயிர் வாழ இந்த ஒருமித்த சமநிலை வளர்ச்சியைப் போற்றிக்காக்க வேண்டும்; நாம் முன்னேற்றம் காண, அதை மேன்மேலும் செம்மைப்படுத்த வேண்டும்" என்பது அவருடைய நம்பிக்கை. இந்த நோக்கில், தமிழ்ப்பண்பாட்டினைப் பேணிக்காத்து, போற்றி வளர்க்க அவர் அரும்பாடுபட்டார்.

அடிக்கடி. அவர் தமிழ் நாட்டு இளைஞர்களுக்குக் கூறிய அறிவுரை ஒன்று, என் உள்ளத்தில் அலைமோதுகிறது. ''அயலாரிடத்து-தமிழர் அல்லாதப் பிற இனத்தவரிடத்து எப்பொழுதும் தமிழ்மக்கள் அன்போடும் பண்போடும், உண்மை உள்ளத்தோடும் நட்புணர்வோடும் பழகுவதில் நாட்டம் செலுத்துகின்றனர். ஆனால், தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி இடத்தோ, தங்கள் நாட்டு மக்களாகிய தமிழரிடத்தோ பற்றும் பாசமும் கொண்டு பழகுவதும் இல்லை! உண்மை அன்பை வெளிபடுத்துவதும் இல்லை! பெருமைப் படுவதற்கு மாறாகப் 'பல் குழுவையும் பாழ் செய்யும் உட்பகையையும்' வளர்த்து வருகின்றனர். என்றைக்குத்தான், 'தமிழர்கள் தங்கள் தமிழ்மொழியைக்கண்டு வெட்கப்படத் தேவை இல்லை! தங்கள் பண்பாட்டைக்கண்டு தலைகுனியத் தேவை இல்லை!' எனும் டாக்டர் ஜி. யூ. போப்பின் பொன்மொழியைப் புரிந்து கொள்ளப் போகின்றனரோ?'' என்று வருத்தம் தொனிக்கக் கூறுவார்.

தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த அடிப்படைக் குறைபாடுகளை நீக்காமல்/போக்காமல் வாழ்வதால் பயனில்லை என்பதை அவர் நன்குணர்ந்து இருந்ததை, மேலே கண்ட அவருடைய நொந்த உள்ளத்து எழுந்த சிந்தனைச் சிதறல் வெளிப்படுத்துகிறது.

சான்றோர்

பண்டைத் தமிழரின் சிறப்புமிகு இலட்சியம், தங்கள் மகனைச் சான்றோன் ஆக்குவதாகும்.

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே!

என்பது புறநானூற்று (312)ப் பொன்மொழி!

'சான்றோன்' என்பவன் யார்? மனிதப் பண்புகளின் நிறைகுடமாக விளங்குபவனே சான்றோன் என்று நம் முன்னோர்கள் கருதினர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து அடிப்படைப் பண்புகள் நன்கு வளர்ச்சியுற்ற நிலையில் எண்ணத்தால், சொல்லால், செயலால் என்றும் உலகத்தின் நன்மையை நாடுபவரே சான்றோர். இத்தகைய சான்றோர்கள் பலர் வாழும் ஊரே, சிறந்த ஊராக அக்காலத்தில் கருதப்பட்டது.

ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான்வாழும் ஊரே!

என்று புலவர்கள் தங்கள் ஊரைப்பற்றிப் பெருமைப்பட்டனர்; இதனால்தான் திருவள்ளுவர்,

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (திருக். 69)

எனத் தாய் அடையக் கூடிய பெரும் மகிழ்ச்சியைச் சித்திரித்துள்ளார்.

பேராசிரியர் மு. வரதராசனார், ஒரு சான்றோராக விளங்கினார். அவருடைய அன்புகனிந்த உள்ளமும், மனித நலன் நாடும் மனப்போக்கும், தமிழகத்து மக்கள் சான்றோர்களாக வாழக் கூடியப் புதியதோர் உலகைப் படைக்க – உருவாக்க விரும்பியது. தனி மனிதன் ஒவ்வொருவனுடைய உரிமைகளும் இயல்புகளும் போற்றிக்காக்கப்படும் புதிய சமுதாயத்தை அவர் காண விரும்பினார்.

### வாழ்க்கைத் தத்துவம்

இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் இன்னல்களை நீக்க, கேடுகளைப் போக்க, புதுவாழ்வளிக்க, புதியதொரு வாழ்க்கைத் தத்துவத்தை அவர் உருவாக்கித் தந்தார். அந்த வாழ்க்கைத் தத்துவம் துன்பியல் நோக்குடையதாகவோ, மோட்சத்தைப்பற்றியதாகவோ அமையாமல், இன்றைய உலகின் நடைமுறைக்கு உகந்த ஒன்றாகவே அமைந்து அவருடைய சிந்தனைத் திறத்தின் சிறப்பை வெளிப்படுத்தியது. அவருடைய வாழ்க்கைத் தத்துவம் 'சோசலிச'த்தை அடிப்படையாகக் கொண்டது; அனைத்துலக நோக்கு உடையது; செயல்முறைப் பாங்கு உடையது. மனித வாழ்க்கையின் சிறப்புமிகு பயன்மதிப்புகளை நினைவுபடுத்தியதோடு, எதிலும் இரு எல்லைக்குச் செல்லாது நடுநிலையில் நின்று அளவாக வாழும் முறையை-வாழ்க்கை நெறியை அவர் அறிவுறுத்தி வந்தார். 'எதிலும் நன்மை தீமை உண்டு; அளவோடு எதையும் பயன்படுத்த வேண்டும்; அளவுக்கு மீறினால், எதிலும் தீமை உண்டாகும்' என்பது அவருடைய சித்தாந்தமாகும்.

### பண்பாட்டின் காவலர்

டாக்டர் மு. வரதராசனார், எழுத்தராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார்; படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக உயர்ந்து சிறந்தார். அவருடைய படைப்புகளில் இருந்து, அவருடைய மன வளர்ச்சியின் போக்கை நாம் அறிய முடிகிறது. இந்நூற்றாண்டின் இடைப்பகுதியிலேயே அவருடைய சிந்தனைத் திறன், அறிவின் கொடுமுடியை எட்டி விட்டது எனலாம். சாதி, சமயம், இனம், மொழி, நாடு எனும் குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து, மனித இனத்தவர் அனைவரையுமே தம்

மூட்டிய சகோதரர்களாகக் கருதும் பரந்த உள்ளத்தை, விரிந்த உள்ளத்தை, ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் பெற்றவராக அவர் விளங்கினர். 'யாதும் ஊரே யாரும் கேளிர்!' எனும் இந்த 'ஓர் உலக' இலட்சியத்தை அடைவதற்குரிய சூழ்நிலையை, தம்முடைய படைப்புகளின் மூலம் உருவாக்க, ஓயாமல் அவர் முயன்றார்! அதனல் அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டார்! இவ்வாறு முற்போக்கு எண்ணமும் எழுச்சியும் கொண்ட சான்றோராக, தமிழ்ப் பேராசிரியராக, தமிழ்ப் பண்பாட்டின் காவலராகப் பேராசிரியர் வரதராசனர் வான்புகழ் பெற்றார்.

# மு. வ. வின் முன்னுரைகள்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கு நாட்டுக் கல்வியின் தாக்கமும், சங்க இலக்கியக் கண்டு பிடிப்பும், தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோல்களாக அமைந்தன. தமிழ்ப் பண்பாட்டுப் பூங்காவில் நறுமணமிக்க வண்ண மலராகத் தமிழ்க் கல்வி மாட்சியுற முப்பது முதல் நாற்பது ஆண்டுகள் ஆயின.

தொன்மைச் சிறப்புவாய்ந்த தங்கள் பண்பாட்டின் இயல்புகளைப் புரிந்துகொண்டு, அவற்றை உணர்ந்து போற்றி வாழ்வதன் மூலம், 'புதுவாழ்வை' அடைவதற்குத் தமிழ் மக்களைத் தூண்டியது ஓர் இயக்கம். அவ்வியக்கம் இமயம் முதல் குமரிவரை அலைமேல் அலையாக வீசிய வண்ணம் இருந்தது. அது எது? தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாய் எழுச்சியுற்ற மறுமலர்ச்சி இயக்கமே அது!

மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் - அரசியல், சமூகம், சமயம், கலைகள் - அவ்வியக்கத்தின் அலைகள் முட்டி மோதின; அதனால், சமுதாய அமைப்பில் மாற்றம் உண்டாகத் தொடங்கியது. மக்களுடைய எண்ணப்போக்கில் புதுமை நாடும் வேட்கையும், புரட்சி எண்ணங்களும் அரும்பலாயின. இந்த மறுமலர்ச்சி இயக்கத்தால், முதலில் பேரளவிற்குத் தாக்குண்டது இலக்கியப் படைப்புகளேயாகும்.

## மறுமலர்ச்சியின் குழந்தை

பேராசிரியர் மு. வரதராசனார் தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் குழந்தை யாவார். அவர் தமிழ்க் கல்வியின் 'புதுமைப் பண்டிதராக'த் தோன்றினார். இக்காலத்திய தேவைகளுக்கு ஏற்ற வகையில், அவர் பண்டைத் தமிழரின் மாண்புமிகு இலட்சியங்களுக்கும், கொள்கைகளுக்கும் புதுமெருகு கொடுத்துப் 'புத்தொளி' வீசச் செய்தார்.

டாக்டர் மு. வ. பன்முகத் திறன்கள் வாய்ந்த ஆளுமையுடையவர். அவர் பெரிதும் ஆசிரியராகவே சிறப்புற்றார். வாழ்க்கையில் பல்வேறு உயர் பதவிகளைப் பெற்றுச் சிறந்த நிலைகளை அவர் அடைந்தார். எனினும், முதலில் நம் மனத்தில், அவர் ஒரு 'நல்லாசிரியராகவே' தோன்றுகிறார்; இதற்கு அடுத்த நிலையில் ஆற்றல்மிகு தமிழ் எழுத்தாளராகக் காட்சி தருகிறார். இவற்றிற்குப் பிறகே, மனிதநலப் பற்றாளர், புதின ஆசிரியர், மொழியியல் அறிஞர், கட்டுரையாளர் எனப் பலவாறாக அவரை நினைக்கத் தோன்றுகிறது. 'மனிதம் எனும் நெடுஞ்சாலையின் தொலைவை உணர்த்தும் குறிப்புக் கல்லாக' அவர் வாழ்ந்தார். தமிழ்ப்பண்பாட்டின் பேரொளியை, நம்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் ஒளிவீசச் செய்தார். இதற்கு மேலாகக் கடல்கடந்த,நாடுகளில் வாழும் அறிஞர்களை, தமிழ்ப் பண்பாட்டின் சீரையும் சிறப்பையும் உணர்ந்து போற்றுமாறு செய்தார்.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில், தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் போற்றி வளர்த்தவர்களுள் முதன்மையானவர் மு. வரதராசனார் எனில், அது மிகையாகாது. தெளிவுமிகு தமிழ் அறிஞர், பெருமைமிகு எழுத்தாளர், பண்புமிகு சான்றோர் எனும் பேரையும் புகழையும் அவர் பெற்றார். இதனால், நூல்கள் எழுதிய புலவர்கள், அறிஞர்கள், இளைஞர்கள் அவருடைய 'அணிந்துரையை', 'அறிமுகத்தை'ப் பெற்றால் தங்களுக்கும், தங்கள் நூல்களுக்கும் நாட்டில் நல்ல வரவேற்பு இருக்குமென நம்பினர். மற்றும், அவருடைய கனிந்த அனுபவமிகு அறிவுரையைப் பெற்றால், தம் நூல்களைச் செம்மையாக எழுதவும், வெளியிடவும் இயலும் என்று அவர்கள் கருதினர். பேராசிரியர் மு. வ., அவர்களுக்கு அன்பான ஆதரவும், ஆர்வம் ஊட்டும் அறிவுரையும், பயன்மிகு நல்லுரையும் அயராமல் அளித்து வந்தார். எனவே தம்மை நாடிவந்தோரின் விருப்பத்திற்கு இணங்க, 'முன்னுரைகள்' வழங்க அவர் முனைந்தார். அந்நிலையில் இளைஞர்களுக்கு 'அறிமுக' உரையும், வளர்ந்தவர்களுக்கு 'அணிந்துரையும்', பெரியோர்களுக்குப் 'பாராட்டுரையும்' முன்னுரையாக வழங்குவதை வழக்கமாகக் கொண்டார். அவருடைய நாற்பது ஆண்டுகாலப் பொதுவாழ்வில், அவர் இருநூற்றுக்கு மேற்பட்ட 'முன்னுரைகளை' வழங்கியுள்ளார். இதனை, அவரே, "ஷா அளித்த முன்னுரைகளை விடப் பல நூல்களுக்கு யான் முன்னுரை தந்துள்ளேன். என் சிறு ஓய்வு நேரத்தில் பாதி இவ்வகையில் செலவிட வேண்டியுள்ளது"[1] என்று குறிப்பிட்டுள்ளமை கருதத் தக்கதாகும்.

---

1. முத்துச் சண்முகம் & இரா. மோகன், டாக்டர் மு.வ.வின் கடிதங்கள், பக். 58.

மு. வ. வும் முன்னுரையும்

"முன்னுரை என்பது என்ன? முன்னுரை எழுதுவது எப்படி?" என்பனவற்றைப் பற்றி, அவர் கொண்டிருந்த கருத்துகள் மரபுவழிப் பட்டன. எனினும், புதுமைப் போக்குடையன; நம் சிந்தனையைத் தூண்டுவன.

> ஒரு நூல் என்றால் அதற்கு ஓர் அறிமுகம் இருப்பது நல்லது. பழங்காலத்திலேயே நூலுக்குப் பாயிரம் சேர்த்து அறிமுகப்படுத்தும் பழக்கம் இருந்தது. மிகப் பழைய தமிழ் நூலாக விளங்கும் தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் என்பவர் பாயிரம் இயற்றியுள்ளார். பாயிரம் இல்லாதது நூல் என்ற சிறப்பு இல்லாதது என்று முன்னோர் கருதினார்கள். நூலை எழுதிய ஆசிரியரே ஒரு பாயிரம் எழுதி, நூலின் அமைப்பு முதலியவற்றைச் சுருக்கமாக விளக்குவது உண்டு. அவரோடு பழகிய ஒருவர் அந்த நூலைப் பற்றிச் சிறப்புப் பாயிரமாக எழுதி அறிமுகப் படுத்துவதும் உண்டு. அவ்வாறு மற்றவர்கள் அறிமுகப்படுத்தும்போது, நூலை இயற்றியவரின் ஆசிரியர், அல்லது அவருடன் கற்றவர், அல்லது அவரிடம் கற்ற மாணவர் ஆகியோரும் சிறப்புப் பாயிரம் எழுதுவது உண்டு. சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான காப்பியங்களுக்கு அவ்வாறு மற்றவர்கள் எழுதிய சிறப்புப் பாயிரங்கள் இருந்தனவோ, என்னவோ இன்று ஒன்றும் கிடைக்கவில்லை! திருக்குறளுக்கு மட்டும் பிற்காலத்துப் புலவர் சிலர் இயற்றிய பாடல்களைச் சேர்த்து 'திருவள்ளுவ மாலை' என்ற பெயரால் ஓர் அறிமுகம் அமைந்துள்ளது.
>
> ஒரு பெரிய மாளிகைக்குச் சித்திரமும், ஒரு நகரத்துக்குக் கோபுரமும், மகளிர்க்கு அணிகலமும்போல், ஒரு நூலுக்கு அணிந்துரையாகிய பாயிரம் தேவையானது என்று முன்னோர்கள் கருதினார்கள்[1]

என்பது பேராசிரியர், நூல்களுக்கு 'முன்னுரை' வழங்கும் வரலாற்றையும்: அதன் தேவையையும் குறித்துத் தெரிவித்துள்ள கருத்துகளாகும்.

முன்னுரை எழுதும் கலை எளிமையானது அன்று! நூலாசிரியர்

---

1. மு. வரதராசனார், 'நூல்களுக்கு அறிமுகம்', வானொலிப்பேச்சு, நூலகம், ஜூலை, 1974, சென்னை; பக். 5.

தெரிவித்துள்ள கருத்துகள் அனைத்தையும், ஒப்புக்கொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ இயலாத நெருக்கடி உண்டாவதும் உண்டு. அத்தகைய நிலையில், 'முன்னுரை' எழுதுவோர், நூலாசிரியரின் அனுமதியின் பேரில், அந்நூலில் உள்ள 'குற்றங்குறைகளைச்' சுட்டிக் காட்டுவது உண்டு; சில சமயங்களில், தாம் உடன்பட இயலாத நூலாசிரியரின் கருத்துகளை வெளிப்படையாகவே எடுத்துக் காட்டுவதும் உண்டு. ஆனால், நூலின் சிறப்பு இயல்புகளை புறக்கணித்துவிட்டு, அதிலுள்ள குறைகளையே பெரிதுபடுத்திக் காட்டுவது, 'முன்னுரை' வழங்குகின்றவருக்கு அறமாகாது.

இதைப்பற்றி; டாக்டர் மு. வ. அவர்கள் கொண்டுள்ள கருத்தைக் காண்போம். அது மற்றவர்கள் பின்பற்ற பெரிதும் பயன் படும்.

> நம் நாட்டு மக்களின் மனப்பான்மையை நன்கு உணர்ந்து, பிறர் சீர் எல்லாம் தூற்றிச் சிறுமை புறங் காத்து வாழ்ந்த சான்றோர் திரு. வி. கலியாணசுந்தரனார். அதனால், யார் கேட்டாலும் அவர் முன்னுரை எழுதி ஊக்கப் படுத்துவார். எதிலும் குறை கூறமாட்டார். நல்லதை மட்டுமே சுட்டிக்காட்டுவார். அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் மிகப் பல. அவருடைய அணிந்துரையில் பண் பாடும் உண்டு; புதுமையும் உண்டு.[1]

## முன்னுரைக்குப் பல பெயர்கள்

முன்னுரையைச் சுட்டுவதற்கு, இன்று தமிழில் பல சொற்கள் வழங்கிவருகின்றன. 'முன்னுரை' என்பதும் 'முகவுரை' என்பதும் பொதுவான பெயர்கள். அதை நூலாசிரியரே எழுதுவது பெருவழக்கு. மற்றவர்கள் எழுதி அறிமுகப்படுத்துவதும் உண்டு. 'அறிமுகம்' என்பது முதன்முதல் நூல் எழுதுபவரையோ, போதிய அளவிற்கு நாட்டுமக்களால் தெரிந்து கொள்ளப்படாத எழுத் தாளரையோ அறிந்து கொள்ளுமாறு செய்வதற்குப் பயன்படுத்தப் படுவதாகும்.

> 'அணிந்துரை' என்பது நூலிற்கு அழகை ஊட்டும் உரை யாகும். 'அழகிய சிறப்புகள் பலவற்றைக் கொண்ட முன்னுரையே அணிந்துரை' என்பாரும் உண்டு. 'பாராட் டுரை' என்பது நூலின் சிறப்பு இயல்புகளைப் போற்றிப் பாராட்டும் உரையாகும். 'மதிப்புரை' என்பது நூலின்

1. மு. கு. நூல், பக், 9,

*சிறப்பு இயல்புகளையும் குற்றங்களையும், 'குணம் நாடிக் குற்றமும் நாடி, மிகை நாடி மிக்க' கொள்ளும் முறையில் சீர்தூக்கிப் பார்த்தும், திறன் ஆய்வு செய்தும் மதிப்பிடுவது.*

இப்பெயர்கள், தமிழில் முன்னுரை எழுதுவதற்குப் பின்பற்றப் படும் பல்வேறு முறைகளைத் தெரிவிக்கின்றன. காலப் போக்கில், முன்னுரை எழுதுவதில் நல்லதொரு மரபு, தமிழில் உருவாகியிருப் பதைக் காணுகின்றோம். முன்னுரையையும் முகவுரையையும் நூல் ஆசிரியர் எழுதலாம். அல்லது அவரை அறிமுகப்படுத்த விரும்பும் மற்றவர்களும் எழுதலாம் என்பது ஒருவகை மரபாகும். அணிந் துரை, பாராட்டுரை, மதிப்புரை என்பனவற்றை நூல் ஆசிரியர் அல்லாதாரே எழுத வேண்டும் என்பது மற்ருெரு மரபாகும். இவற்றிடையே காணப்படும் நுட்பமான வேற்றுமைகள், முன் னுரைகள் எழுதப்படும் முறைகளைத் தெளிவு படுத்துவனவாக உள்ளன.

## முன்னுரையின் பகுதிகள்

தமிழ் இலக்கண நூலாரின் கருத்துப்படி, ஒரு சிறப்பு முன்னுரை (பாயிரம்), (1) ஆசிரியரின் பெயர், (2) நூலின் தோற்றம், (3) வழங்கும் நாடு, (4) நூலின் பெயர், (5) சிறப்பு இயல்பு களும் யாப்பும், (6) நூல் நுவல் பொருள் (7) கற்பதற்கு உரியவர், (8) கற்பதனால் பெறக்கூடிய பயன், (9) நூல் இயற்றப்பட்ட காலம், (10) அரங்கேற்றப்பட்ட அவை, (11) நூல் இயற்றப் பட்டதன் நோக்கம் என்னும் பதினொரு பகுதிகளை யுடையதாகும்.[1]

இவற்றுள், இக்காலத்திற்குப் பொருந்தாத அல்லது தேவை இல்லாதவற்றை விட்டுவிட்டு, மற்றவற்றை மரபுவழிப் போற்றிப் பின்பற்றும் இயல்புடையவர் மு. வ. என்பதை, அவருடைய முன் னுரைகள் தெரிவிக்கின்றன.

## முன்னுரை வேண்டுமா ?

உலக அறிஞர் பலர், முன்னுரையின் முதன்மையையும், அதனால் உண்டாகும் பயனையும் நன்கு உணர்ந்துள்ளனர். வாச கருக்கு வழிகாட்ட, வாசகரின் அறிவுப் பசியைத் தூண்ட நல்ல தொரு முன்னுரை தேவைப்படுகிறது. நூலின் சிறந்த பகுதி களையும், சிறப்பு இயல்புகளையும் எளிதில் அறிவதற்கு நூலின் முன்னுரை பயன்படுகிறது. 'உணவிற்குக் குழம்புபோல நூலுக்கு

1. நன்னூல், 47, 48.

முன்னுரை' என்பது இத்தாலிய நாட்டுப் பழமொழி. நடுவுநிலைமையோடு தெளிவாக எழுதப்படும் முன்னுரை, நூலின் பிழம்பாக-சாரமாக அமையும்.

இதுவரை, 'முன்னுரை'யைப் பற்றி நாம் பொதுவாகக் கண்ட கருத்துகள் யாவும், முன்னுரையின் பல்வேறு இயல்புகளை எடுத்துரைக்கின்றன. அதாவது முன்னுரையின் நோக்கம், உணர்த்தும் முறை, வடிவம் ஆகியவற்றை அறிவிக்கின்றன. சுருங்கச் சொல்லுவதானல், முன்னுரை என்பது அறிமுகமாகவும், நூலில் பொதிந்துள்ள கருத்துகளின் சாரமாகவும் அமைகிறது எனலாம்.

பேராசிரியர் மு. வரதராசனரின் முன்னுரைகளைக் கூர்ந்து நோக்குகின்றபொழுது, முன்னுரையின் இயல்புகளையும், பயன்மதிப்பையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பது புலனுகின்றது. பெரிதும் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் முன்னுரை (பாயிரம்) எழுதுவதற்குப் பின்பற்றிய நெறிமுறைகளையே, அவர் முன்னுரைகள் வழங்குவதில் பின்பற்றியுள்ளார். ஆனல், அதே சமயத்தில் மறைமுகமாக மேற்கு நாட்டு அறிஞர்களின் 'முன்னுரை' பற்றிய எண்ணங்களையும் அவர் தழுவிச் சென்றுள்ளார். 'முன்னுரை' எழுதுவோரின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை மறைக்காமல் வெளிப்படுத்துதல், திறன் ஆய்வுக்கருத்துகளை வெறுத்து ஒதுக்காமல் ஏற்றுக்கொள்ளுதல் எனும் மேற்கு நாட்டு அறிஞர்களின் இருவகை நெறிமுறைகளை, டாக்டர் மு. வ. பொன்னேபோல் போற்றியுள்ளார்.

டாக்டர் மு. வ. அவர்கள், பிறருடைய நூல்களுக்கு வழங்கியுள்ள முன்னுரைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(1) ஆராய்ச்சி நூல்களுக்கு முன்னுரை
(2) ஆராய்ச்சிப் பதிப்புகளுக்கு முன்னுரை
(3) இசைப் பாடல்களுக்கு முன்னுரை
(4) இசை ஆராய்ச்சி நூல்களுக்கு முன்னுரை
(5) இயற்கை மருத்துவ நூல்களுக்கு முன்னுரை
(6) இலக்கண நூல்களுக்கு முன்னுரை
(7) இலக்கியத் திறனாய்வு நூல்களுக்கு முன்னுரை
(8) கவிதை நூல்களுக்கு முன்னுரை
(9) சிறுகதை நூல்களுக்கு முன்னுரை
(10) சிறுவர் இலக்கியங்களுக்கு முன்னுரை
(11) நாடக நூல்களுக்கு முன்னுரை

(12) பயண நூல்களுக்கு முன்னுரை
(13) புதினங்களுக்கு முன்னுரை
(14) வரலாற்று நூல்களுக்கு முன்னுரை
(15) ஆங்கில நூல்களுக்கு முன்னுரை

இவ்வகைப்பாட்டுப் பட்டியல் முழுமையானது அன்று. எனினும், அவருடைய ஆர்வத்திற்குரிய துறைகள் விரிவும், சுவையும் வாய்ந்தவை என்பதை இப்பட்டியலால் அறிய முடிகிறது.

**நயமிகு தலைப்புகள்**

மு. வ. அவர்களுடைய 'முன்னுரை' களின் சிறப்பு இயல்புகளை ஆராய்வதற்கு முன்னர், 'முன்னுரையைச்' சுட்ட அவர் வழங்கியுள்ள தொடர்மொழிகளின் சொல்நயத்தையும், பொருள் நயத்தையும் காண்போம். அணிந்துரை, அறிமுகம், ஆசியுரை, ஆய்வுரை, கருத்துரை, கலைக்கவியுரை, சிறப்புரை, நன்மொழி, பாராட்டுரை, பொன்னுரை, மதிப்புரை, மாண்புரை, முகவுரை, முன்னுரை, வாழ்த்துரை என்பன அவருடைய முன்னுரைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளாகும். 'ஆசியுரை' என்பது ஒரே வொரு நூலில் காணப்படுகிறது. இப்பெயரை டாக்டர் மு. வ. வழங்கியிருப்பாரா எனும் ஐயம் தோன்றுகிறது. தலைப்பு இல்லாமல் அனுப்பப்பட்ட முன்னுரைக்கு, அந்த நூலின் ஆசிரியரே இட்ட பெயராக இது இருத்தல் வேண்டும்.

'முன்னுரை', 'முகவுரை' எனும் பெயருடைய முன்னுரைகளைப் பெரிதும் தம்மைவிட மூத்த அறிஞர்களின் நூல்களுக்கும், தம்மோடு ஒத்த வயதுடைய எழுத்தாளர்களின் நூல்களுக்கும் பேராசிரியர் மு. வ. அணிந்துரையாக வழங்கியுள்ளார். இராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், நீதிபதி எஸ். மகராஜன் போன்ற பெரியோர்களின் நூல்களுக்கும் மற்றும் சிலருடைய நூல்களுக்கும் அவர் 'முன்னுரை'யை அளித்துள்ளார்.[1] தஞ்சை எஸ். இராமையதாசின் சிறப்புமிகு திருக்குறள் இசைப்பாடலான 'திருக்குறள் இசை அமுதம்' எனும் நூலிற்கு, மு. வ. அவர்கள் 'முகவுரை' வழங்கியுள்ளார். 'அறிமுகத்'தை மிகவும் அருகிய வழக்காகவே அவர் பயன்படுத்தியுள்ளார். தம்முடன் பணியாற்றிய ஆசிரியர் ஒருவருக்கும், மிகுந்த ஈடுபாடு கொண்ட மாணவர் ஒருவருக்கும் அவர்

1. கு. கோதண்டபாணிப்பிள்ளை, முதற்குறள் உவமை. கி. ஆ. பெ. விசுவநாதம், வள்ளுவரும் குறளும். எஸ். மகராஜன், ஒலிச்செல்வம்.

'அறிமுகம்' தந்துள்ளார்.[1] அணிந்துரை[2] பாராட்டுரை[3] ஆசியுரை,[4] வாழ்த்துரை[5] என்பனவற்றை இலக்கிய நூல்களுக்கும் ஆராய்ச்சி நூல்களுக்கும் அவர் வழங்கியுள்ளார். அவற்றைப் பெரிதும் அவருடைய மாணவர்களும் நண்பர்களுமே எழுதியுள்ளனர். தம்மை விட மூத்த தமிழ் அறிஞர்களின் நூல்களுக்கு 'மதிப்புரை',[6] 'மாண்புரை',[7] 'சிறப்புரை'[8] என்பனவற்றை முன்னுரையாக அளித்துள்ளார். இத்தகைய 'முன்னுரை' வழங்கும் முறைக்கு ஓரிரு விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால், மேலே கோடிகாட்டிய நெறி முறையைக் கருத்தில் கொண்டே பேராசிரியர் மு. வரதராசனார், பெரும்பாலான நூல்களுக்கு முன்னுரை வழங்கியுள்ளதை, அவருடைய 'முன்னுரைகளை'த் தொகைவகைப்படுத்தி நோக்குவோர் எளிதில் உணர்வர்.

## முன்னுரையில் இடம்பெறும் செய்திகள்

அவருடைய முன்னுரைகளில் இடம்பெறும் செய்திகளைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம். முதலில் அந்நூலின் சிறப்பு இயல்புகளைச் சுட்டிக் காட்டுவார்; அடுத்து ஆசிரியரை அறிமுகப்படுத்துவார்; பின்னர், தமக்கும் ஆசிரியருக்கும் இடையே உள்ள உடன்பாடான கருத்துகளைச் சுட்டுவார்; நான்காவதாக ஆசிரியரைப் போற்றிப் பாராட்டுவார்; இறுதியாக நூலாசிரியரின் முயற்சியை வாசகர்கள் பாராட்டும் வகையில், அந்நூலை வாங்கிப் படிக்கும்படி வேண்டுவார். அவ்வாறு செய்வதன் மூலம், தமிழில் சிறப்புமிகு நூல்கள் பெருகுதற்கு அவர்கள் தூண்டுகோலாக அமைவர் என்பதைத் தெரிவிப்பார். பெரிதும் அவருடைய முன்னுரைகளில், நூலின் சிறப்பு இயல்புகளைக் காணலாமே ஒழிய, நூலின் குறைபாடுகளைக் காண இயலாது. ஆனால், உலகில் உள்ள குறைகள், நூலாசிரியர்

1. அ. ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை. மின்னூர் சீனிவாசன், மழலைக் கனவுகள்.
2. கா. வேழவேந்தன், நெஞ்சில் பூத்த மலர். இரா. சாரங்கபாணி, பரிபாடல் திறன் முதலியன.
3. இ. சு. முத்துசாமி, காதல் காவியம். கு. இன்னாசி, எழுத்தியல் முதலியன.
4. ஜே. ஜி. என். தாசன், சிலம்பில் மெய்ப்பாடுகள் முதலியன.
5. க. பெருமாள், இன்பவெள்ளம். அ. அருணாசலம், வள்ளுவர் வகுத்த பொருள் வாழ்வு முதலியன.
6. அ. கு. ஆதித்தர், முப்பது குறளின் மெய்ப்பொருள். எஸ். என். ஸ்ரீராம தேசிகன், ஏழு நாடகக் கதைகள் முதலியன.
7. நா. பசும்பொற்கிழார், ஒரு நூற்று உவமைக் குறள்.
8. மு. வை. அரவிந்தன், திருக்குறளும் சங்க இலக்கியமும் முதலியன.

களிடம் உள்ள குறைகள், அறிஞர்களின் எண்ணப் போக்கில் காணப்பெறும் குறைகள் போன்றவற்றை அவர் பொதுவாக எடுத்துரைப்பர்.

> தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் இசை இலக்கணம் கற்றுத் தேர்ச்சிப்பெற முடியாது என்னும் தவருன எண்ணம் நாட்டில் எப்படியோ தலைகாட்டியுள்ளது. என் இளமையில் அந்தப் பேச்சை அடிக்கடி கேட்டுமிருக்கிறேன். ஆனல், தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்புப் பெற்ற பிறகு, அந்தப் பேச்சு எவ்வளவு தவறு என்பதை நன்குணர்ந்தேன். தமிழ் நாட்டில், பலவகைக் கலைகளும் வளர்ந்து செழித்தது போலவே, இசைக் கலையும் செழித்து விளங்கியது; மிகச் சிறப்பாக ஆராய்ந்து போற்றப்பட்டு வந்தது. மற்றக் கலைகளுக்கு உரிய சான்றுகள் பலவும் படிப்படியாக இழக்கப் பட்டுப் போக, இலக்கியக்கலை மட்டும் உருவம் திரியாமல் நிற்கிறது: இசைக்கலையோ வெவ்வேறு பெயரும் வழக்கும் பெற்று மாறியிருக்கக் காண்கிரேம். அதனல்தான், தமிழுக் கும் இசைக்கும் உறவு குறைந்தது போல் சிலர் உணர்ந்து, மேற்கூறியவாறு தவருன பேச்சு எழுதற்கு இடந்தந்தனர்.[1]

என்பது தமிழ் உலகில் எழுந்தத்தவருன எண்ணத்தைச் சுட்டுகிறது.

மற்ருேர் 'அணிந்துரை'யில் நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டும் வகையில்,

> ...வீடுபற்றி திருவள்ளுவரின் கருத்துக்களை ஆராய்ந்து, 'வாஞேர்க்கு உயர்ந்த உலகு' என்ற தொடர் எதைக் குறிப்பது என்பதை முடிவு கட்ட இயலாமல் (இந்நூலாசிரியர்) விடுகிருர். எட்டிய மட்டும் செல்வதே ஆராய்ச்சி! எட்டாததை கற்பனை செய்து வலியுறுத்துவது ஆராய்ச்சி அன்று! ஆதலின், அவர்தம் போக்குப் போற்றற்குரியதே[2]

என்று மொழிந்துள்ளமையும் இங்குக் கருதத் தக்கதாகும்.

## முன்னுரைகள் : ஒரு கண்ணேட்டம்

மேற்கண்ட பல்வேறு வகையான முன்னுரைகளில், பொருட் சிறப்பும் கருத்துச் செறிவும், கலையழகும் வாய்ந்த சிலவற்றைக் காண்போம்.

---

1. ப. சுந்தரேசன் : முதல் ஐந்து இசைப் பண்கள், 'அணிந்துரை'
2. ஈசா. விசுவநாதன், கட்டுரை மலர், 'அணிந்துரை'

அணிந்துரை

தாம் வழங்கிய முன்னுரைகளுள், நாற்பதுக்கு மேற்பட்டவற்றிற்கு மு. வ. கொடுத்து இருக்கும் தலைப்பு, அணிந்துரை என்பதாகும். அவருடைய பழைய மாணவர்களுள் ஒருவர் கு. ராஜவேலு. அவருடைய புதினம் 'காதல் தூங்குகிறது' என்பதாகும். அதற்கு மு. வ. வழங்கியுள்ள 'அணிந்துரை' சிறப்புமிக்க வொன்றாகும். முதலில் நல்ல நூல்களைப் பற்றிய விளக்கம் அவ்வணிந்துரையில் இடம்பெறுகிறது. பிறகு, புதினத்தின் கருவமைப்பை அவர் சுட்டுகிறார். அதன் பிறகு நூலாசிரியரை அறிமுகப்படுத்தி வைக்கின்றார்.

> சில நூல்களைப் படித்து முடித்த பிறகு அவற்றின் ஆசிரியர்களைப்பற்றி எண்ணுவதே இல்லை! அவர்கள் யாராக இருந்தால் நமக்கு என்ன என்று பொருட்படுத்தாமல் விடுகிறோம். ஆனால், வேறு சில நூல்களைப் படித்துமுடித்த பிறகு, அவற்றின் ஆசிரியர்களைப்பற்றித் திரும்பத் திரும்ப எண்ணுகிறோம். அந்த ஆசிரியர்களின் அனுபவச் சிறப்பை நினைந்து வியப்படைகிறோம். அந்த நூல்களால் பெற்ற கலைப்பயனும் அதனை நினைந்து உணரும் நன்றியுணர்வுமே இதற்குக் காரணங்கள். அத்தகைய நூல்களே உயர்ந்த நூல்கள்! நின்று வாழவல்ல நூல்கள்![1]

என்று பொதுவாக, 'என்றும் வாழவல்ல நூல்களைப்' பற்றிய கருத்துரையை அவர் வழங்கியுள்ளார். அதன்பிறகு,

> திரு. ராஜவேலு எழுதிய "காதல் தூங்குகிறது" என்னும் நாவல் இந்த உயர்வகையைச் சார்ந்த நூல் ஆகும். நல்லவர்களும் கெட்டவர்களும் தம்தம் எண்ணங்களை வெளியிடும் வகையில் அமைந்துள்ள இந்த நூலில், ஆசிரியரின் பரந்த உலக அனுபவம் விளங்குகிறது. நல்ல எண்ணங்களின், தீய எண்ணங்களின் போக்கையும் ஆழ்ந்து உணர்ந்து, பிறருக்கு உணர்த்தவல்ல திறன், நூல் முழுவதும் விளங்குகிறது. இவ்வாறு உள்ளத்தின் ஆழமும், அகலமும் காணும் தன்மை, கதை ஆசிரியருக்கு இயல்பாக அமைந்திருக்கிறது.[2]

என்று புதினத்தின் மையக் கருத்தையும், அதை உணர்த்தும் ஆசிரியரின் திறத்தையும் பேராசிரியர் மு. வரதராசனார், நயமுற 'அணிந்துரையில்' எடுத்தியம்பியுள்ளார். இந்த முன்னுரை,

1. கு. ராஜவேலு, காதல் தூங்குகிறது, 'அணிந்துரை',
2. ஷெ., அணிந்துரை,

மு.வ. விற்கு அணிந்துரை வரையும் கலையில் உள்ள தேர்ச்சியையும், அவருடைய சிந்தனைத் திறத்தையும் புலப்படுத்துகிறது.

**அறிமுகம்**

நூலாசிரியரையும், அவர்தம் நூலையும் உலகிற்கு அறிமுகப் படுத்தும் வகையில், எழுதப்படுவதே அறிமுகமாகும். இருபது ஆண்டுகளுக்கு முன்னர், தம்முடைய இனிய நண்பரும், உடன் பணியாற்றியவருமான பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவருடைய நூலிற்குக் கொடுத்துள்ள 'அறிமுகம்' நம் கருத்தைக் கவருவதாகும்.

> தமிழ் நாட்டில் ஒற்றுமை இல்லை என்றும், ஒற்றுமை இல்லாத ஒரு குறையே தமிழ் நாட்டைச் சீர்குலைத்து வருகிறது என்றும் எல்லோரும் கூறுகின்றனர். வடிவு, நிறம், தொழில், பழக்கவழக்கம் முதலிய பலவற்றால் ஒரு தன்மையராக இருத்தலால், ஒரு நாட்டு மக்கள் ஒன்றுபட முடியாது; உள்ளத்து உணர்வால் ஒரு தன்மையராக மக்களே ஒற்றுமையுறுதல் கூடும்! 'உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' என்னும் பொய்யா மொழி இருவர் நட்புக்கு மட்டும் அல்லாமல், நாட்டு மக்களின் ஒருமைப் பாட்டுக்கும் பொருந்துவதாகும்.
>
> தமிழ் மக்களில் சிலர் ஒன்றை மிகமிகப் போற்றுபவ ராயின், உடனே வேறு சிலர் அதனையே மிகமிகத் தூற்றத் தலைப்படுகின்றனர். 'இதனினும் உயர்ந்தது, உலகில் இல்லை' எனச் சிலர் தலைமேற் கொண்டு புகழ்வதனையே, மற்றவர் 'இழிந்தவற்றுள் இழிந்தது' எனப் பழித்தும் ஒதுக்குகின் றனர். குற்றமற்றது என்று சிலர் பாராட்டுவதை, வேறு சிலர் வெறுப்புடன் ஆய்ந்து குற்றம் தவிர மற்றொன் றும் இல்லை என முடிவு காண்கின்றனர். இயக்கங்கள், கொள்கைகள், ஆட்கள், நூல்கள் முதலாய பலவற்றிலும் இவ்வாறு ஓர் எல்லையில் நின்று தூற்றுவோரும் மற்றோர் எல்லையில் நின்று போற்றுவோருமே தமிழகத்தில் பெரும் பாலோராக உள்ளனர். எல்லைகளில் நின்று எக்களிக்கும் உள்ளம், நடுநிலையான உண்மையை நாடுதல் அரிது. உள்ளத்தளவில், தமிழ் மக்கள் பெரும்பாலோர் துருவங் களில் வாழ விழைகின்றனரே அல்லாமல் கதிரவன் ஒளியை யும், தென்றலின் இன்பத்தையும் விரும்புவது இல்லை. அதனால்தான், தமிழ் நாட்டில் வேற்றுமை நாட்டமும்

> போக்கும் வீறு கொண்டு விளங்க, ஒற்றுமை நாட்டமும் வாழ்வும் தலையெடுக்கவில்லை.[1]

என்னும் அறிமுகத்தில் இடம்பெறும் பொது முன்னுரைப் பகுதி, தமிழ் மக்களின் இயல்பையும், எண்ணப் போக்கையும் எளிதில் உணரச் செய்கிறது.

## ஆசியுரை

வாழ்த்துதலோடு பொருந்திய முன்னுரையை 'ஆசியுரை' என்பர். பொருள் அளவில் வாழ்த்துரைக்கும் ஆசியுரைக்கும் வேறுபாடு இல்லை!

> கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை, டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், பல் வகை ஆராய்ச்சி நூல்களை அளித்து வருதல் நாடறிந்தது. திரு. ஜே. கி. என். தாசன் முதுகலைத் தேர்வுக்காகப் படைத்த 'சிலம்பில் மெய்ப்பாடுகள்' என்னும் இந்நூல், அவற்றுள் ஒன்றாக வெளிவருதல் மகிழத்தக்கதாகும். நூலின் முற் பகுதி தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலைப் பற்றிய ஆராய்ச்சியாக அமைந்துள்ளதைப் பாராட்டுகிறேன். அவ்வியலில் உள்ள மெய்ப்பாடுகளைப் பல விளக்கங்கள் துணைகொண்டு வகுத்துத் தந்துள்ளார் ஆராய்ச்சியாளர்; சிலம்பில் உள்ள பலவகை மெய்ப்பாடுகளையும் பாகுபாடு செய்து விளக்கிக் காட்டியுள்ளார். அவர்தம் தமிழ்த் தொண்டு மேன்மேலும் வளர்க என வாழ்த்துகிறேன்.[2]

என்னும் ஆசியுரை, மு. வ. வின் முன்னுரைகளில் சுருக்கமானது; எளிமையும் எழிலும் வாய்ந்தது.

## ஆய்வுரை

நுட்பமாகக் கூர்ந்து நோக்கி, நூலின் உட்பொருளை வகைப் படுத்திக் காட்டும் முன்னுரையை. 'ஆய்வுரை' என்பர். இத்த கைய முன்னுரையில், ஆராய்ச்சி மனப்போக்கு மேலோங்கி நிற்கும். திரு மது. ச. விமலானந்தம் அவர்களின் 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்னும் நூலிற்குப் பேராசிரியர் அவர்கள் தந்துள்ள 'ஆய்வுரை' செறிவும் செழுமையும் வாய்ந்தது.

---

1. அ. ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை.
2. ஜே. கி. என். தாசன், சிலம்பில் மெய்ப்பாடுகள், ஆசியுரை,

**கருத்துரை**

அறிவிலும் வயதிலும் மூத்தவர்கள் என்று மு. வ. போற்றிய அறிஞர் சிலருடைய நூல்களுக்குக் 'கருத்துரை' என்னும் முன்னுரையை வழங்கியுள்ளார்.

> உயர்ந்தோர் உள்ளத்தே கருவுற்றிருந்து உருப்பெற்றிலங்கி நலன் பயப்பது இலக்கியம் என்னும் உண்மையை விரிந்த நூலாக்கித் தந்துள்ளார் இதன் ஆசிரியர் திரு. முத்து வீராசாமி நாயுடு அவர்கள். இலக்கியச் செவ்வி என்னும் இந்நூல் இதுகாறும் போற்றப்பட்டு வந்துள்ள இலக்கியம் பற்றிய சிறந்த கொள்கைகள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சமயம், அறநெறி, கலை ஆகிய எல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படுமாறு அமையும் நல்லதொரு கலையே இலக்கியம் என்பதை ஆசிரியர் அழகுபட எடுத்துக்காட்டியுள்ளார்.[1]

என்பது கருத்துரையின் தொடக்கமாகும்.

**கலைக்கவியுரை**

கவிதை வடிவிலான முன்னுரையைக் 'கவியுரை' என்பர். 'கலை' எனும் அடைமொழி, இம்முன்னுரையின் கலைநயம்/அழகு ஆகிய மேம்பாட்டைத் தெரிவிக்கிறது. பாட்டில் அமையும் சந்த இன்பத்தையும், சொல்நயம், பொருள்நயம் போன்றவற்றையும் இந்த அடைமொழி வெளிப்படுத்துகிறது. இவ்வியல்புகள் தமிழ் மொழியின் இனிமைக்குரிய தலையூற்றுகளாகும்.

**பாலொத்த நற்றமிழில் பால்மூன்றில் அறத்தினொடு**
**பாகுபெறு பொருளும் ஆய்ந்தே**
**பான்மைவளர் காதல்எனும் பண்பினையும் தெளிவாக்கும்**
**பயன்மிக்க தமிழ்மறை யதாம்**
**காலத்தை வென்றகுறள் ஞாலத்தி னுக்கருள்செய்**
**கனிவாயின் வள்ளுவன் மேல்**
**கற்றவர்கள் உளமுருக மற்றையவர் மனந்தெளியக்**
**கருதரிய பிள்ளைத் தமிழாய்ச்**
**சாலச்சி றப்புடைய நூலைத்தந் தருளியவன்**
**தண்டமிழ்க் கவிதைவல் லோன்**
**சாற்றரிய நாவன்மை மாற்றரிய உரைவன்மை**
**சான்றோரின் நெறியின் வன்மை**

---

1. ஜே. முத்துவீராசாமி நாயுடு, இலக்கியச் செவ்வி, 'கருத்துரை'.

மேலத்து நாட்டவரின் கோலத்தின் அறிவாண்மை
மேவுபால சுப்பிர மணியம்
மெய்ம்மையுறு வாசகத்தின் செம்மைபெறு மணியாக
மேன்மையுறு புகழோங் கவே![1]

இதைப் போன்று, பாடல் வடிவில் அமைந்த வேறு சில முன்னுரைகள் மு. வ. அவர்களால் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும், இம்முன்னுரையே அவற்றைவிட கற்பனை வளமும், கவித்திறனும் வாய்ந்ததாகும்.

### சிறப்புரை

'சிறப்புரை' எனும் முன்னுரை, நூலின் தனிப்பண்புகளைச் சுட்டும் வகையில்—சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டும் வகையில்—அமைந்ததாகும். பெரிதும், இதற்கும், பிற முன்னுரைகளுக்கும் நடைமுறையில் அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. புகழ்மிகு புதினப்படைப்பாளர் நா. பார்த்தசாரதி அவர்களின் 'குறிஞ்சி மலரி'னை அணிசெய்யும் முன்னுரை, 'சிறப்புரை'யாக அமைந்து இருக்கிறது.

> நாவல் என்பது பொழுதுபோக்குக்கான வெறும் நூலாகவும் அமையலாம்; வாழ்க்கையின் உண்மைகளை உயர்த்த வல்ல இலக்கியமாகவும் அமையலாம். அவ்வாறு விழுப்பம் உடையதாக அமையும் போது, அது பழங்காலத்துக் காவியத்திற்கு நிகர் ஆகின்றது. காவியம் என்பது உரைநடை வளராத காலத்தில் செய்யுள் வடிவில் அமைந்த கலைச் செல்வம்; நாவல் என்பது உரைநடை வளர்ச்சியால் இவ் வடிவில் அமையும் கலைச்செல்வம். இதுதான் வேறுபாடு![2]

என்னும் கருத்துரை, அச்சிறப்புரையின் சிறந்த பகுதியாகும்.

### நன்மொழி

ஒரு நூலின் நல் இயல்புகளைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த முன்னுரைக்கு 'நன்மொழி'[3] என்று தலைப்பினைக் கொடுத்துள்ளனர். இப்பெயர் வழக்கு மிகவும் அருகிய ஒன்றாகவே காணப்படுகிறது.

### பாராட்டுரை

பெரிதும் அணிந்துரையோடும், முன்னுரையோடும் ஒப்புமை

---

1. கே. எம். பாலசுப்பிரமணியம், திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ். 'கலைக்கவியுரை'.
2. நா. பார்த்தசாரதி, குறிஞ்சி மலர், 'சிறப்புரை'.
3. கே. எம். பாலசுப்பிரமணியம், மாணிக்கவாசகர் மாலை, 'நன்மொழி'.

உடையதாக விளங்குவது 'பாராட்டுரை'. ஆனால், இதனுடைய நிறைவுறும் பகுதி, நூலாசிரியரைப் பாராட்டும் வகையில் அமைந்திருப்பதைக் காணுகின்றோம். கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களின், 'கவியின் கனவு' எனும் நாடகத்திற்குப் பேராசிரியர் மு. வ. அவர்கள் அளித்துள்ள 'பாராட்டுரை' சிறப்புமிக்கதாகும். முதலில் நாடகத்தையும், அடுத்து ஆசிரியரையும் மு. வ. அறிமுகம் செய்து வைக்கின்றார். பிறகு, நாடகத்தின் கரு, கலையழகு, உணர்த்தும் முறை போன்றவற்றை அவர் விரிவாக விளக்கியுள்ளார்.

> கலையின் வாயிலாக ஒரு நாட்டின் எழுச்சிக்கும் ஆக்கத்திற்கும் தொண்டு செய்ய முடியும். நாடகம் ஆற்றல் மிகுந்த கலை; கண்ணின் வாயிலாகவும் செவியின் வாயிலாகவும் உள்ளத்தைத் தொட்டு எண்ணத்தைச் செயற்படுத்தும் ஆற்றல்வாய்ந்த கலை. . .
>
> 'கவியின் கனவு' என்னும் இந்நாடகம், இவ்வகையில் ஆற்றிய தொண்டு பெரிது; இன்னும் ஆற்ற இருக்கும் தொண்டும் போற்றத்தக்கதாகும்.'

எனும் போற்றுதலோடு, டாக்டர் மு. வ. அவர்கள் தம் பாராட்டுரையை, முடிப்பதைக் காணலாம்,

## பொன்னுரை

பொன் போன்ற உயர்ந்த கருத்துகள் பொதிந்த உரை, 'பொன்னுரை'யாகும். தம்முடைய உரையைப் பொன்னுரையெனக் கூறும் தன் முனைப்பு உடையவராக மு. வ. வாழ்ந்தது இல்லை. எனவே, 'பொதுமை அறப்புரட்சி' எனும் நூலின் ஆசிரியரான கவிஞர் இளங்கம்பன் (பழனி சு. மு. சொக்கலிங்கம்) அவர்களே, ஐயாவிடம் அன்புடன் பெற்ற முன்னுரைக்குப் 'பொன்னுரை' எனத் தலைப்பு கொடுத்து இருப்பதாகத் தோன்றுகிறது. இதோ அப் 'பொன்னுரையைக் காண்போம்.

> 'பொதுமை அறப்புரட்சி' என்ற இப்பாடல்கள், காந்தி நெறி தழைக்கும் உள்ளத்திலிருந்து எழுந்த நல்ல பாடல்கள்; உலகம் அறநெறியில் தழைத்தோங்கத் தூண்டும் தூய பாடல்கள்
>
> அறவோர் வினோபா, இந்நூற்றாண்டில் உலகம் பெற்ற உயர்ந்த சான்றோர். அவருடைய கொள்கைகள் புதியன

1, எஸ். டி. சுந்தரம், கவியின் கனவு, 'பாராட்டுரை',

அல்ல; திருவள்ளுவர் முதலான சான்றோர்கள் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தவைகளே. ஆயின் அவர் தொண்டு செய்யும் முறைகள் புத்தம் புதியன; நினைந்து நினைந்து போற்றி யொழுக வேண்டியவை.

இந்த உலகத்துப் பட்டம், பதவி, புகழ் முதலான எதையும் மதியாமல், 'இவர்', 'அவர்', 'இந்தக் கட்சி', 'அந்தக் குழு' என்று எச்சார்பிலும் பற்றுமல், நடுநிலையாக நின்று, அறம் ஒன்றையே மதித்துத் தொண்டாற்றும் அவருடைய சொல்லும் செயலும் நாம் என்றென்றும் போற்றத் தக்கவை. அத்தகைய வீரர்—சீர்திருத்தச் சான்றோர்—உண்மைத் தொண்டர் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து ஆற்றிவரும் அறப்புரட்சியின் பல திறங்களை எடுத்துரைத்துப் பாடியுள்ள பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன[1]

என்பது வினோபா அடிகளுக்குச் செலுத்தும் வணக்கவுரையாகக் காணப்படுகிறது.

மதிப்புரை

நூலினிடத்தோ, ஆசிரியரிடத்தோ முன்னுரை வழங்குவோர் கொண்டுள்ள மதிப்பையும் பக்தியையும் புலப்படுத்துவது 'மதிப்புரை' என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தாகும். நடுவுநிலையில் நின்று ஒரு நூலின் நிறைகுறைகளை, அருமை பெருமைகளை மதிப்பிட்டு உரைப்பது 'மதிப்புரை' என்பது பெரும்பாலான அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். எல்லாவகையான முன்னுரைகளுமே, ஓர் அளவிற்கு மதிப்புரைகளாக அமைவதை நாம் நன்கு அறிவோம். பேராசிரியர் மு. வ. அவர்களுடைய 'மதிப்புரைகள்' யாவுமே, இவ்விருவகை இயல்புகளை உடையனவாக உள்ளன. இவ்விரு இயல்புகளும் இணைந்தும் இழைந்தும் உள்ளமையால் ஒருவகைக் கவின்மிகு வடிவினை மு. வ. வின் 'மதிப்புரைகள்' பெற்றுள்ளன.

புலவர் ச. கந்தசாமி முதலியாரின் 'உணவு மருத்துவம்' எனும் நூலிற்கும், கவிஞர் அ. கு. ஆதித்தரின் 'முப்பது குறளின் மெய்ப் பொருள்' என்னும் நூலிற்கும் டாக்டர் மு. வ. வழங்கியுள்ள 'மதிப்புரை'கள், அவர்களிடத்து முன்னுரை வழங்கிய அறிஞர் கொண்டுள்ள மதிப்பையும், நூற்களின் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன.

---

1. சு. மு. சொக்கலிங்கம் (இளங்கம்புன்), அறப்புரட்சி, 'பொன்னுரை',

**மாண்புரை**

இத்தொடர், 'பெருஞ்சிறப்பும் பயனும் வாய்ந்த முன்னுரை' எனும் பொருளைத் தருவதாகும். இத்தலைப்பு ஒரேவொரு நூலின் முன்னுரைக்குரியதாகக் காணப்படுகிறது. மு. வரதராசனார் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றத் தொடங்கிய பிறகு கொடுக்கப்பட்ட முன்னுரை இது. 'ஒரு நூறு உவமைக்குறள்' எனும் நூலிற்கு அளிக்கப்பட்ட முன்னுரையை, அதன் ஆசிரியரான பசும்பொறகிழார், 'மாண்புரை' என்று தலைப்பு கொடுத்துப் போற்றியதாகத் தெரிகிறது.

**முகவுரை**

'நூலின் முகத்தே—தொடக்கத்தில்—அமையும் உரை' எனவும், 'நூலிற்கு முகம் போன்று இன்றியமையாத சிறப்பினை அளிக்கும் உரை' எனவும் இதற்கு விளக்கம் கூறுவர். இந்தத் தலைப்பில் மு. வ. அவர்கள் வழங்கியுள்ள முன்னுரைகள் மிகச்சிலவாக உள்ளன.

மயிலை. சீனி. வேங்கடசாமி எனும் அறிஞரின் 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' எனும் நூலிற்குப் பேராசிரியர் அளித்த 'முகவுரை'யின் முதற்பகுதியைப் பார்ப்போம்.

> தமிழ் மக்கள் நாட்டின் வரலாற்றைத் தெளிவுறக் காக்கவில்லை எனின், தமிழ் நூல்களையும் அழியாமல் காக்கவில்லையே என்பது நினைந்து வருந்துவதற்குரியது. ''என் இளமையில் பெற்றோரின் கட்டளைக்கு இணங்கிக் காவிரிப் பெருக்கில் பல ஏட்டுச் சுவடிகளை விட்டுத் தொழுது வந்துள்ளேன்'' என்று முதிய நண்பர் சிலர் என்னிடம் கூறியுள்ளனர். நாட்டையும் காக்க முடியாமல், மொழி தந்த நூல்களையும் காக்க முடியாமல், முன்னோர் வாழ்ந்த 'இருண்ட காலம்' விளைத்ததீமைகள் பல. அதனால், நாம் இழந்து வாடும் இலக்கிய இலக்கணச் செல்வங்கள் பல. அவற்றின் பெயர்களை மட்டும் உரையாசிரியரின் குறிப்புக்களால் அறிந்து வருந்தும் நிலையிலும், ஒருசில நூல்களின் சிற்சில பாட்டுக்களை மட்டும் அவர்களின் மேற்கோள்களால் அறிந்து நோகும் நிலையிலும் இன்று உள்ளோம். மக்களுக்குத் தேவையற்ற நூல்கள் காலப் போக்கில் அழிதல் எல்லா நாடுகளிலும் உள்ளதே. ஆயினும், மக்களின் அறியாமையாலும் வாழ்க்கைச் சோர்வாலும் நூல்கள் அழிதல், ஒரு நாட்டின் வரலாற்றிற்கு மாசே ஆகும்.

என்னும் பகுதி, பேராசிரியரின் மன உலேச்சலே வெளிப்படுத்து கிறது.

முன்னுரை

முகவுரைக்கும், முன்னுரைக்கும் அடிப்படையில் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லே. 'முன்னுரை' என்னும் தலேப்பிலேயே டாக்டர் மு.வ. அவர்கள் மிக நீண்ட முன்னுரைகளே அளித்துள் ளார். அவருடைய முன்னுரைகளுள் பல, நான்கு ஐந்து பக்கங் களுக்கு மேற்பட்ட 'கட்டுரை' களேப் போன்ற வடிவில் உள்ளன. மதிப்புரைக்காகத் தம்மிடம் வந்துள்ள நூல்களின் பல்வேறு இயல்புகளேயும் சிறப்புகளேயும், மு.வ. தம் முன்னுரையில் விரி வாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். தம்முடைய எண்ணங் களேயும் கருத்துகளேயும் அவர், 'முன்னுரை'களில் முழுமையாக வெளியிட்டுள்ளார். மு. வ. வழங்கியுள்ள முன்னுரைகளுள் பெரும் பாலானவை திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப் பதிகாரம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களேப்பற்றிய ஆராய்ச்சி நூல்களுக்கு அளிக்கப்பட்டனவாகும்.

இப்பொழுது பேராசிரியர் அவர்கள் வழங்கிய மிகச் சுருக்க மான 'முன்னுரை' ஒன்றைக் காண்போம்:

> திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனே யோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசி யல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து, நமக் காக அறிவுரைகூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய் மொழிபோல் விளங்குகிறது.
>
> இவ்வளவு உயர்ந்த நூலேப் பற்றி ஒரு சொற்பொழிவு நடைபெறுகிறது என்றால், அது பலருடைய உள்ளத் தையும் கவர்தல் இயற்கை. சொற்பொழிவு ஆற்றுகின்ற வர் தேர்ந்த பேச்சாளர் என்றால், இச்சிறப்புப் பலமடங்கு ஆவது இயற்கையே!
>
> திருவாளர் கி.ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் எதை யும் சுவைபடப் பேசுவதில் வல்லவர். நுண்ணிய கருத்துக் களுக்கும் அழகிய வடிவம் தந்து, வினவிடை புகுத்திக்

> கேட்போருக்கு வேட்கையை வளர்த்து, விருந்து நல்குவது அவர்தம் பேச்சு![1]

என்று தொடங்கி, அந்நூலின் அருமை பெருமைகளை எல்லாம் முன்னுரையில் சுட்டிக் காட்ட மு. வ. முயன்றுள்ளார். பிறகு, இந்நூலினை வெளியிட்டுள்ள நிறுவனத்தைப் போற்றிப் பாராட்டு வதன் மூலம், தம்முடைய முன்னுரையை ஒரு முடிவிற்கு அவர் கொண்டுவந்துள்ளார்.

இத்தகைய முன்னுரைகளை ஒரு முறை நோக்கினாலேயே, டாக்டர் மு. வ. அவர்கள் வழங்கும் முன்னுரைகளின் அமைப்பையும் அழகையும் உணர்ந்து கொள்ள இயலும்.

**வாழ்த்துரை**

நூலாசிரியர் நெடுங்காலம் வாழ்ந்து, அரிய பணிகள் பல செய்யுமாறு வாழ்த்துவதோடு கூடிய 'முன்னுரையே' வாழ்த்து ரையாகும். இத்தகைய முன்னுரை, படைப்பு இலக்கியத் துறை யில் முதன்முதலாக ஈடுபட்டுள்ள இளைஞர்களையும், குறிப்பிட்ட ஒரு பொருளையோ, செவ்விய இலக்கியம் பற்றியோ முறையான ஆராய்ச்சியை முதன்முதல் மேற்கொண்டுள்ள அறிஞர்களையும் ஊக்குவித்து, வாழ்த்துவதாகக் காணப்படுகிறது.

இத்தகைய முன்னுரைகள் அல்லாமல், தலைப்பே இல்லாமலும் சில நூல்களுக்கு மு. வ. வின் முன்னுரைகள் வழங்கப்பட்டுள்ள தைக் காணுகின்றோம். புலவர் செ. சதாசிவம் அவர்களுடைய 'சேரநாடும் செந்தமிழும்' என்னும் நூலையும், பண்டிதர் சு. அருளம்பலவனாரின் 'பதிற்றுப்பத்து 'ஆராய்ச்சி' என்னும் நூலையும் இதற்குச் சிறந்த சான்றுகளாகக் காட்டலாம். அவற் றின் முன்னுரைகளைக் கூர்ந்து நோக்குகின்ற பொழுது, அவை தனிப்பட்ட வகையில் எழுதப்பட்ட முன்னுரைகளாகத் தோன்றவில்லை; அந்நூலாசிரியர்களுக்கு மு. வ. அவர்கள் எழுதிய கடிதங்களில் இருந்து எடுக்கப்பட்ட வாசகங்களாகத் தோன்றுகின்றன.

இதுவரையில் நாம் கண்ட 'மு. வ. வின் முன்னுரைகளை'ப் பற்றிய செய்திகளிலிருந்து, அவர் வழங்கிய முக்கியமான முன்னுரை களின் வகைகளையும், வடிவத்தையும் நன்கு புரிந்து கொள்ள இயலு

1. கி. ஆ. பெ. விசுவநாதம், வள்ளுவரும் குறளும், 'முன்னுரை'

கிறது. கா. ஸ்ரீ. ஸ்ரீயின் 'அன்னபூரணி' எனும் சிறுகதைத் தொகுப்பிற்குச் சிந்தனையைத் தூண்டும் சிறப்புமிகு முன்னுரை ஒன்றை மு. வ. அளித்துள்ளார். இந்தியில், ஜயஷங்கர் பிரசாத் படைத்துள்ள 'காமாயணி' எனும் காப்பியத்தின் தமிழாக்க நூலுக்கு நல்லதொரு முன்னுரையைத் தந்துள்ளார். விடுதலைப் போராட்ட வீரரும் பன்மொழிப் புலவருமான ஜமதக்கினி என்னும் தமிழர், அக்காப்பியத்தைக் 'காமன் மகள்' என்று தமிழாக்கம் செய்துள்ளார்.

## ஆங்கில முன்னுரைகள்

மு. வ. வின் முன்னுரைகளைத் தொகைவகைப் படுத்திப் பார்க்கின்ற பொழுது, அவர் ஆங்கிலத்தில் வழங்கியுள்ள முன்னுரைகள் பத்திற்கும் குறைவாக உள்ளமை புலனாகின்றது. 1968 ஆம் ஆண்டு, டாக்டர் ஜி.யூ. போப்பினுடைய 'நாலடியார்' ஆங்கில மொழிபெயர்ப்பினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. அதற்கு ஆங்கிலத்தில் அரியதோர் ஆராய்ச்சி முன்னுரையை (Foreword) மு. வ. வழங்கியுள்ளார்.

அதற்குப் பின்னர், டாக்டர் டி. பி. சித்தலிங்கையாவின் 'தமிழின் அ ஆ இ' (A B C of Tamil) என்னும் ஆங்கில நூலிற்கு, 1968 இல் முன்னுரையை அவர் அளித்துள்ளார். மற்றவை எல்லாம், அவர் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்ற பிறகு அளித்தனவாகும். திருமதி ஜெயா கோதைப் பிள்ளை என்பவரின் 'பண்டைத் தமிழரின் கல்வி முறை' (Educational System of the Ancient Tamils ) என்னும் நூலிற்கு மு. வ. அவர்கள் கொடுத்துள்ள முன்னுரை (Foreword) அமைப்பாலும், கருத்துகளை உணர்த்தும் முறையாலும் தலைசிறந்த ஒன்றாகும்.

## முன்னுரையும் ஆளுமையும்

ஒருவர் வழங்கியுள்ள முன்னுரைகளை வகைப்படுத்தி ஆராய்வதன் மூலம், முன்னுரை வழங்கியுள்ள எழுத்தாளரின் பண்பு நலனையும் ஆளுமையையும் நாம் அறிய இயலும். முன்னுரை எழுதுவோர், தங்கள் விருப்பு வெறுப்புகளையோ, நோக்கங்களையோ, இலட்சியங்களையோ, தம் ஆளுமையையோ மறைக்க வேண்டிய தேவை இல்லை. டாக்டர் மு. வ. வின் பிற படைப்புக்களான புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் போன்றவற்றால் அறியப்படும் ஆளுமைக் கூறுகளைவிட, அவருடைய முன்னுரைகளில் இருந்து புலனாகும் ஆளுமைப் பண்புகள் மிகுதியானவை ; சிறந்தவை ; தெளிவானவை. பல்வேறு முன்னு

ரைகளிலிருந்து, தேர்ந்து எடுக்கப்பட்ட பின்வரும் பகுதிகள், அவருடைய ஆளுமையைப் புரிந்துகொள்ள உதவும்.

**தமிழ்**

உலகத்தில் இன்று பேசப்பட்டுவரும் மொழிகளுள் தொன்மையானது தமிழ்மொழி. அது, தென்னிந்தியாவில் வழங்கிவரும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது; ஈராயிரம் ஆண்டுகள் பழமையுடைய சிறப்புமிகு இலக்கிய மரபினையுடையது. தொல் பழங் காலத்தில் தோன்றிய மொழியாக இருந்தாலும், இன்றைய புதிய சிந்தனையைப் புலப்படுத்துவதற்குரிய கருவியாகவும் அது பயன்பட்டு வருகிறது. இன்றும் பல எழுத்தாளர்கள், தங்கள் பாட்டாலும், புனைகதைகளாலும், அறிவு நூல்களாலும் அதை இலக்கிய வளமிக்க மொழியாகச் சிறப்புற்று விளங்குமாறு செய்துவருகின்றனர்.[1]

**திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள்**

திருவள்ளுவர் இயற்றிய அரிய நூல் தமிழில் அமைந்தது தமிழர்தம் நற்பேறு ஆகும். அவர், தம் வாழ்வில் பெற்ற அனுபவங்களையும் அறிந்த அறிவுநலங்களையும் பிறர்க்கு உணர்த்த விழைந்த நன்னோக்கமே, திருக்குறளாக உருக்கொண்டது. இத்தகைய விழுமிய நூலைப் பெருஞ்செல்வமாகப் பெற்றுள்ள நாம், இதனை வாழ்க்கையோடு இயைத்து ஆய்ந்து ஆய்ந்து, அரும் பொருள் பலவும் காணுதல் வேண்டும். இத்தகைய ஆய்வின் பயனாக, ஆய்வுநூல்கள் பல வெளிவருதல் வேண்டும். காலப் போக்கில், ஒவ்வோர் ஊரின் நூல் நிலையத்திலும், திருக்குறள் பற்றிய நூல்கள் நூற்றுக் கணக்காக இடம் பெறல் வேண்டும். திருவள்ளுவப் பயனைப் பெற்ற நாம், நன்றியுணர்ச்சியோடு போற்றிச் செய்ய வேண்டிய கடமை இது.[2]

**பாரதியார்**

பாரதி வெறுங் கவிஞர் அல்லர்; உயர்ந்த நோக்கங்கள், உயர்ந்த பண்புகள், உயர்ந்த செயல்கள் எல்லாம் செழித்தோங்கப் பாடிய உயர்ந்த கவிஞர் அவர். அவர் பாடிய பாடல்களுள் உணர்ச்சிச் செல்வமும் கற்பனை மெருகும் இழைந்து விளங்கும் சிறுகாவியம் குயில்பாட்டு. அதைப் பாடி முடித்தபின்,

1. டி. பி. சித்தலிங்கையாவின் 'ABC of Tamil' எனும் நூலிற்கு, ஆங்கிலத்தில் தரப்பட்ட முன்னுரையின் தமிழாக்கம்.
2. பூ. அமிர்தலிங்கன், வள்ளுவர் கண்ட உயிரினங்கள், 'முன்னுரை',

அதனுள் ஆழ்ந்த பொருள் வேறு இருப்பதாக அவரே உணர்ந்தார். "கற்பனையே ஆனாலும் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க" இடம் இருப்பதாக உணர்ந்தார். அதனால், 'ஆன்ற தமிழ்ப் புலவர்!' என்று விளித்து, ஒரு வேண்டுகோளும் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துப் பொருள் விரித்து உரைக்க முற்பட்ட புலவர் பலர்.[1]

### எழுத்தாளன்

சொல் வடிவாக வாழும் கலைகளுக்குத் தனிப்பட்ட பெரிய ஆற்றல் உண்டு. வாழ்வுக்காகக் கொண்ட வில்லையும், வாழ்க்கைப் பண்பாட்டுக்காகக் கொண்ட சொல்லையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் ஒரு சிறந்த உண்மையை உணர்த்துகிறார். வில்லைக் கருவியாகக் கொண்டவர்கள் பகையானாலும் கவலை இல்லை; சொல்லைக் கருவியாகக் கொண்டவர்களின் பகை பொல்லாதது என்கிறார்.

> வில்லேருழவர் பகைகொளினும், கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை!

என்று அறிவுரை கூறுகிறார். இந்த அறிவுரை அரசனுக்குக் கூறப்பட்டது என்று விட்டுவிடக்கூடாது. அரசன் என்று ஒருவன் இல்லாத குடியரசு முறைக்கும் இந்த அறிவுரை பொருந்தும்; சமூகம் என்ற அமைப்புக்கும் இந்த அறிவுரை பொருத்தமுடையதே! கவிதையாலும் கதையாலும் கலைத்தொண்டு செய்யும் சொல்லாளரின்—எழுத்தாளரின்—பகையைக் கொண்ட அரசன் அழிவதுபோலவே, அவர்களின் பகையைத் தேடிக் கொண்ட சமூக அமைப்பும் அழியும். இன்றுள்ள சமூக அமைப்பு நீடிக்காது; விரைவில் மாறிவிடும் என்பதற்குச் சோதிடம் கேட்க வேண்டியதில்லை! சொல்லேருழவராகிய இன்றைய தமிழ் எழுத்தாளரின் கவிதைகளையும் கதைகளையும் படித்தால் போதும். "திருவள்ளுவரின் அறிவுரையைக்கேட்டுத் திருந்தாத சமூக அமைப்பே! நீ நிலைகுலைந்து அழியப் போகிறாயே!" என்று இரக்கம் பிறக்கிறது.[2]

### நாடகம்

நாடகம் என்னும் நுண்கலை நாட்டில் வளர்ந்து வருகிறது. ஆயின், நாடகம் என்னும் இலக்கியவகை அவ்வளவு வளர்ச்சியுடன் காணப்படவில்லை! காரணம் நாடகம் பார்த்து மகிழ விரும்புவோர் பலர்! படித்து மகிழ விரும்புவோர் ஒரு சிலரே! காவியம், தொடர்

1. கு. ராஜவேலு, வான்குயில், 'முன்னுரை'.
2. விந்தன்: எத்தன் ஏகாம்பரம், 'முன்னுரை'.

கதை, சிறுகதை கட்டுரை முதலியனபோல, நாடகம் என்னும் இலக்கிய வகையும் வளர்ச்சி பெற்றால், ஒரு மொழியின் ஆக்கத்திற்கு உறுதுணையாகும்.[1]

### கல்விமுறை—அன்றும் இன்றும்

அமைதியும் ஓய்வும் மிக்கது பழங்காலம்; ஆதலின், அக்காலத்தே நூல்களை ஆழ்ந்துணர்ந்து நுணுகிக் கற்கும் வாய்ப்பு உளதாயிற்று என்பர். பரபரப்பும் வேகமும் மிக்க இக்காலத்தே கருத்துக்களை விரைந்துணர்ந்தும் ஓடிக் கற்பதற்கும் போதிய வாய்ப்பு இல்லை என்பர். ஒரு சில நூல்களைத் தொடர்ந்து பல ஆண்டுகள் தேர்ந்துதேர்ந்து கற்பது பழங்காலக் கல்விமுறை; பற்பல நூல்களை ஒவ்வோராண்டிலும் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகக் கற்று, அவ்வப்போழ்தே மறந்து வெவ்வேறு நூல்களுக்குத் தாவுவது இக்காலக் கல்விமுறை. பெரும்பாலும் இந்நிலையே எங்கும் காணப்படினும், ஒவ்வொரு நூலில் ஈடுபாடு மிக்கவராய் நுண்பொருள் உணரத் தலைப்படுவோர் சிலர், பழங்காலப் புலவர் பெருமக்களைப்போல ஆழ்ந்து கற்கும் கல்வியினராய் விளங்கக் காண்கிறோம்.[2]

### வரலாற்று அறிவு

தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்பு உடையது; ஏறக்குறைய முப்பது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அமைந்து வருவது. ஆதலின் இலக்கியம் கற்பவர், அதன் வரலாற்றை அறிதல் இன்றியமையாதது ஆகும். வரலாற்று அறிவு இல்லாமலும் இலக்கியம் கற்கலாம். ஆயின், எந்த நூல் முந்தியது, எது பிந்தியது என்ற தெளிவு பெற்று, இலக்கியம் கற்பதால் பெரும் பயன் உண்டு. கற்பனைச் சுவையும் உவமை நயம் முதலியனவும் எவ்வெவ்வாறு வளர்ந்துள்ளன என்று அறிவதில் இன்பம் உண்டு; புலவர் உணர்த்தும் நல்லுணர்வுகளும் அருங்கருத்துக்களும் அவ்வக் காலத்தில் எவ்வெவ்வாறு வளர்ந்து அமைந்துள்ளன என்பதை அறிவதிலும் பயன் உண்டு. ஆதலின், வரலாற்று அறிவு இலக்கிய இன்பத்திற்கு உதவுவதாகும்.[3]

### உன் கடமை!

தமிழ் உன்னை வளர்த்தது! தமிழை நீயும் வளர்க்க வேண்டும்![4]

---

1. ஏ. என். பெருமாள், பனிமொழி, 'அணிந்துரை'.
2. கு. கோதண்டபாணிபிள்ளை, முதற்குறள் உவமை, 'முன்னுரை'.
3. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, 'அணிந்துரை'.
4. இரா. மோகன், யான் கண்ட மு. வ., 'அணிந்துரை'.

இவையாவும் அவருடைய பண்பு நலனையும் ஆளுமையையும் அறிந்துகொள்ள உதவுகின்றன. டாக்டர் மு. வ. வின் முன்னுரைகள் பற்றிய இவ்வாய்வுரையினால் அவருடைய வாழ்நாளில், பிறருடைய நூல்களுக்கு 'முன்னுரை', வழங்குவதில் கணிசமான காலத்தை அவர் ஒதுக்கியுள்ளார் என்பதை அறிகிறோம். வளர வேண்டிய இளையதலைமுறையினரைப் பாராட்டி ஊக்குவிப்பதில் எத்துணை ஆர்வம் காட்டினாரோ, அத்துணை ஆர்வத்தை, நாடறிந்த நல்லறிஞர்களின் அறிவுவளத்தினையும் ஆராய்ச்சித்திறனையும் போற்றிப் பரப்புவதிலும் அவர் பேரார்வம் கொண்டு இருந்தார் என்பது புலனாகின்றது. அவருடைய அன்பு கனிந்த ஆதரவும், பரிவு மிகுந்த பாராட்டுதலும் தமிழ் எழுத்தாளர்களின் உள்ளங்களை எளிதில் கவர்ந்தன. இவ்வாறு, தமிழ் நாட்டின் இளைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் தம் அறிவின் திறத்தாலும், இனிய பண்புகளாலும் வழிகாட்டும் ஒளிவிளக்காகப் பேராசிரியர் மு. வரதராசனார் பொன்றாப் புகழ் பெற்றார்.

# இனிக்கும் நினைவுகள்

'எங்கள் பேராசிரியர் மு. வ.!' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தோம்! அப்படிச் சொல்லிக் கொள்ளுவதன் மூலம், நாங்கள் அடைந்த பூரிப்பிற்கும் பெருமிதத்திற்கும் எல்லையே கிடை யாது! பச்சையப்பன் கல்லூரியில், கலை இளவல் சிறப்பு வகுப்பில் [B.A. (Hons)] தமிழைப் பயின்ற மாணவர்கள் எல்லாருமே, பிற கல்லூரி மாணவர்களையோ, பொதுமக்களையோ கண்டு அளவளாவும் பொழுது எல்லாம், 'எங்கள் பேராசிரியர் மு. வ.! நாங்கள் மு. வ. வின் மாணவர்கள்!' என்று ஓயாமல் கூறிச் செருக்குடன் தலை நிமிர்ந்து நடந்தோம். எப்பொழுது? அவரிடம் தமிழைப் பயிலும் மாணவர்களாகச் சேர்ந்த காலத்திலேயே (1951) இந்தச் 'செருக்கு' எங்களுக்கு உண்டு!

இன்றும் (1974), அப்படிச் சொல்லிக் கொள்ளுவதில் பெருமைப் படுகிறோம்! ஒருவகைப் புத்துணர்ச்சியைப் பெறுகிறோம்! ஆனல், எங்கள் பேச்சிலும் மூச்சிலும் இன்று ஒருவகை ஏக்கம் இழையோடிச் செல்லுகிறது. 'தாயை இழந்த பிள்ளைகளைப் போன்று ஏங்கு கிறோம்! 'இன்று ஐயா இல்லையே!' என்று எண்ணுகின்றபொழுது, உள்ளம் வேதனைப்படுகிறது! துக்கம் நெஞ்சை அடைக்கிறது! கண்கள் கலங்குகின்றன! 'அந்த நாளும் வந்திடாதோ?' எனும் ஏக்கத்தோடு கடந்த காலத்தில் 'அவருடன்' இருந்து, பழகிய, தமிழைப் பயின்ற நாள்களையெண்ணி, இதயம் குமுறுகிறோம். நெஞ்சத்திரையில் பல்வேறு 'இனிக்கும் நினைவுகள்' கவர்ச்சிமிகு காட்சிகளாகத் தோன்றி மறைகின்றன. அக்காட்சிகளுள் சில வற்றை, எழுச்சியூட்டும் எண்ணங்கள் சிலவற்றை இவ் அவையினர், இடையே பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

**விடுதலைக்கு முன்னர்**

இந்தியா விடுதலை அடைவதற்கு முந்திய ஆண்டுகள் சில, தமிழக வரலாற்றில் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரிதும் சிறப்பு

வாய்ந்த ஆண்டுகளாகும். இரண்டாவது உலகப்போருக்குப்பின்னர், உலகம் முழுவதிலுமே ஒருவகை விழிப்புணர்ச்சி உண்டாயிற்று! போர்க் காலத்தில் பல்வேறு இன்னல்களை அனுபவித்ததனால், மக்கள் 'நடமாடும் பிணங்கள்' ஆக மாறிக்கொண்டிருந்தனர்! ஹிரோஷிமா, நாகசகி நகரங்களின்மீது வீசப்பட்ட அணுக்குண்டுகளால் உண்டான உயிர்ச் சேதமும் பொருட்சேதமும், மனித குலத்திற்கு மலைப்பையும் திகைப்பையும் உண்டாக்கிற்று! இந்நிலையில் 'மனிதன் எங்கே போகிறான்? நாகரிகத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?' என்பனவற்றைப் பற்றி அறிஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். மனித இனத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்ட நல்லோர்கள், சான்றோர்கள், அறிஞர்கள் 'புதியதோர் உலகத்தை' உருவாக்க முனைந்தனர். அவர்கள் முயற்சியை ஆர்வத்தோடு உலகம் வரவேற்றுப் போற்றியது!

## பேராசிரியரின் ஆளுமை

அத்தகைய முயற்சியில், தமிழகத்து அறிஞர்கள் சிலர் ஈடுபட்டனர். அவர்களுள் தமிழ்ப் பேராசிரியராகிய டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடத் தக்கவராவர். முற்போக்குக் கருத்துகளை, அஞ்சாமல் எடுத்துரைப்பதில்—வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில், வரதராசனார் வல்லவராக விளங்கினார். அவருடைய ஆழ்ந்த புலமையும், தெளிந்த அறிவும், ஆராய்ச்சி மனப்போக்கும் இளைஞர்களுடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. அவருடைய எளிய வாழ்க்கையும், நேர்மையாக வாழ முயலும் மனப்போக்கும், இனிமையான இயல்புகளும் இளைஞர்களுடைய உள்ளத்தே, 'இவர் ஒரு வியத்தகு மனிதர்' என்னும் எண்ணத்தை எழுப்பின. இவற்றிற்கு மேலாகத் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளை, இன்றைய வாழ்க்கைக்கு ஏற்றவகையில் பொருத்திக் காட்டி, விளக்கம் கூறும் பான்மையைப் பேராசிரியரிடம் கண்டவர்கள், அவருடைய ஆளுமையால் ஈர்க்கப்பட்டனர்.

கண்மூடித்தனமாகப் பழமையைப் போற்றாது, அதில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியதோடு, அதன் நல்ல இயல்புகள் இவை யென உணர்ந்து, போற்றுமாறு செய்த பெருமைக்குரியவர் மு. வரதராசனார். இதைப் போன்றே, புதுமையைக் கண்டு அருவருக்காமல், அதன் பயன்மிகு பண்புகளைப் போற்றி வரவேற்கும் பண்பும் அவரிடம் குடிகொண்டிருந்தது. இவ்வாறு, நடுநிலையில் நின்று, சிந்திக்கத் தூண்டிய சான்றோரை, இளைஞர் உலகம் ஆவலோடு பின்பற்றத் தொடங்கியதில் வியப்பு இல்லை!

### சிந்தனை மாற்றத்திற்கு வழிவகுத்தவர்

சமுதாயத்தில் உண்டாகும் மாற்றங்களை, மக்கள் உணர்ந்து, அதற்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ளும் மனப்பக்குவம் அக்காலத்தில், நம்மவரிடத்து அமையவில்லை! அதை மு. வ. நன்கு அறிந்திருந்தார். மாற்றமுறும் சமுதாயத்தின் போக்கிற்கேற்ப, தமிழர்களும் தங்கள் மனநிலையை, பழக்க வழக்கங்களை, வாழ்க்கைப் போக்கினை மாற்றியும் திருத்தியும் அமைத்துக் கொள்ளுமாறு தூண்டுவதற்கு அவர் அரும்பாடு பட்டார்; அதற்குரிய வகையில், வாழ்க்கைப் பிரச்சினைகள் பலவற்றை அலசி ஆராய்ந்தார். அதனால், மக்களுடைய எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் வகையில், கதைகளையும், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளையும் அவர் எழுதலானார்.

முதன் முதலாகச் சமயச்சார்பற்ற நிலையில், வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவும், செயல்படவும் அவருடைய நூல்கள் தூண்டு கோல்களாக அமைந்தன. இளைஞர்களுக்கு மு. வ. வின் படைப்புகள் நல் விருந்தாயின. மாணவர் சமுதாயம் அவரிடத்துப் பேரீடுபாடு கொண்டது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும், நடுவயதைச் சேர்ந்தவர்களும் அவருடைய எழுத்தாற்றலுக்கு அடிமைகளாயினர். இவ்வாறு சமுதாய மாற்றத்திற்குத் தேவையான மன மாற்றத்தை—அறிவு நிலைமாற்றத்தை (Intellectual Change), எந்த அரசியல் கட்சியையும் சாராமல், தனித்து நின்று விரைவுபடுத்திய சிறப்பிற்குரிய தனிமனிதர் மு. வரதராசனார் ஒருவரேயாவர்.

எனவே, இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1950), தமிழகத்திலே தனிப்பெருஞ் சிந்தனையாளராக—தத்துவஞானியாக—விளங்கிய மு. வரதராசனாரை, இந்நாட்டு இளைஞர்கள், பெருந்தகையாளராக, சான்றோராக, பேரறிஞராக, மாண்புமிகு மனிதராகக் கருதிப் போற்றினர். அவருடைய மாணவனாகப் பயிலுவதற்குப், பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து, தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொண்டு படிப்பதற்கு விரும்பிய இளைஞர்கள் பலராவர். இவ்வாய்ப்பைப் பெற இயலாதவர், அவருடைய நூல்களைப் படித்தும், கடிதத் தொடர்பு கொண்டும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

### முதல் காட்சி

1944 அளவில், சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் பத்துப்பாட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது.

அப்பொழுது, அந்தப் பள்ளியில், நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். முதன்முதலாக, அம்மாநாட்டில்தான் மு. வ. அவர்களைக் கண்டேன்! அவர் நக்கீரரைப்பற்றிப் பேசிய பேச்சு, என் மனத்தில் ஆழப்பதிந்தது!

பிறகு ஒரு முறை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள வேதாந்த சங்கத்தில், கோ. வடிவேலு செட்டியாரின் குருபூசை விழாவில், மு. வ. அவர்கள் தாயுமானவரைப் பற்றிப் பேசினார். அக்கூட்டத்தில்தான், அவருக்கு நேராகக் கீழ் இருந்து, முழுமையாக அவருடைய பேச்சைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

## முதல் சந்திப்பு

என்னுடைய சிறிய பாட்டனார் ஆர்க்காடு குழந்தைவேலு அவர்கள் என்னை அக்கூட்டத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார். கூட்டம் முடிந்ததும், என்னுடைய பாட்டனார், என்னை அழைத்துக் கொண்டுபோய் ஐயாவின் முன்னிலையில் நிறுத்தி, உடன் வந்திருந்த திரு. வி. க. அவர்களை வாழ்த்துமாறு வேண்டினார். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. புன்முறுவலோடு, என்கைகளைப் பிடித்து, மு. வ. அவர்களிடம் கொடுத்து, என் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டே, "இவரைப் போல நீயும் பேராசிரியராக வரவேண்டும்! இவரைப் போல ஆகவேண்டுமானால் நன்றாகப் படிக்கனும்!" என்று வாழ்த்தினார். உடனே 'உன் பெயர் என்ன அப்பா? எந்த வகுப்பில் படிக்கிற?' என்று மு. வ. கேட்டார். என் பெயரையும் படிக்கும் வகுப்பையும் தெரிவித்தேன்! அவர்களோடு இருந்த காவியுடை சாமி ஒருவர் (சண்முகானந்த அடிகளாக இருக்கலாம்) 'நம்ம அப்பரா? நல்ல பெயர்! நன்றாகப் படி!' என்று சொல்லிக் கொண்டே, தம் கைப்பையில் இருந்த 'திருவருட்பா திரட்டு' ஒன்றைக் கொடுத்தார். மு. வ. அவர்கள் 'திருக்குறள் தெரியுமா?' என்று கேட்டார். என் சிறிய பாட்டனார், "நம்ம செட்டியார் உரையோட நான் வைத்திருக்கிறேன். அது, இந்த சிறுசுகளுக்குப் புரியுங்களா" என்று கேட்டார்.

இதற்குள் திரு. வி. க. அவர்களை, மவுண்ட்ரோட்டிற்கு அழைத்துச் சென்று, 'டிராம்' வண்டியில் ஏற்றுவதற்குப் புறப்பட்டோம். மு. வ. அவர்களும், சாமியாரும் உடன் வந்தனர். அவர்கள் 'உலகப் போரைப்' பற்றியும், நேத்தாஜியைப் பற்றியும் பேசிக் கொண்டு வந்தனர். மிகப் பெரிய புலவர்களோடு முதன்முதல் எனக்கு உண்டான முதல் சந்திப்பு இதுதான். இதை, என்

இளமைப் பருவத்தில் பலமுறை நினைத்துப் பார்த்து, மகிழ்ந்திருக்கிறேன். 'அந்த நினைவே' எனக்குத் தமிழ்ப் பற்றை ஊட்டி வந்தது.

### பரிசு பெற்ற கதை

பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், எங்கள் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலாளராக இருந்தார். அதனால், எங்கள் பள்ளியில், பல தமிழ் விழாக்கள் நடத்தப்படும். நான்காம் படிவத்தில் நான் படித்தபொழுது, எங்கள் பள்ளியில் 'திருவள்ளுவர் திருநாள்' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவை ஒட்டி, நடைப்பெற்ற பேச்சுப் போட்டியில், 'உலக அமைதிக்குத் திருவள்ளுவர் காட்டும் வழி' எனும் பொருள் ஆராயப் பெற்றது. அப்பேச்சுப் போட்டியில், எனக்கு முதற்பரிசு கிடைத்தது.

பொங்கல் விடுமுறைக்குப் பிறகு, திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடினோம்! அவ்விழாவிற்குப் 'புது உலகம்' ஆசிரியர் இராசகோபாலன் தலைமை தாங்கினார்! பேராசிரியர் மு. வரதராசன் M A.,M.O.L. பரிசு வழங்கி, சொற்பொழிவு ஆற்றினார். பரிசினைப் பெற மேடைக்குச் சென்றேன். ஐயா அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து நின்றேன். "திருக்குறளையே பரிசாகக் கொடுக்கிறார்கள்! நன்றாகப் படி! அறத்தை நம்பு! குறள் நெறி ஓம்புக!'' என்று வாழ்த்தி, பரிசைக் கொடுத்தார்கள்! பிறகு, 'திருவள்ளுவர் கண்ட உலகம்' எனும் பொருள்பற்றி எங்களுக்கு எல்லாம் புரியும்படி அவர் பேசினார்!

### திருக்குறளும் திருநாவுக்கரசும்

ஐயா அவர்களிடம், 1946இல் நான் பரிசாகப் பெற்ற நூல், திருக்குறளேயாகும். பரிமேலழகர் உரையைத் தழுவி, களத்தூர் வேதகிரி முதலியார் எழுதிய உரை விளக்கத்துடன் கூடிய திருக்குறளை, இரத்தின நாயகர் கம்பெனி (& சன்ஸ்) யார் வெளியிட்டு இருந்தனர். அது எனக்குக் கிடைத்த இரண்டாவது பரிசு நூல். ஐயா அவர்கள் கையால் பெற்ற பரிசு.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், வேதாந்த சங்கத்தின் வாயிலில், 'திருக்குறளைத் தெரியுமா?' என்று கேட்டவரே, தம் கையால், திருக்குறள் நூலைப் பரிசாகக் கொடுத்து வாழ்த்தியமை, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது; திருக்குறளைக் கற்பதில் தனியார்

வத்தை உண்டாக்கியது. விழாவின் முடிவில், எங்கள் பள்ளியில், என் தமிழாசிரியர்களாக விளங்கிய திரு. க. சின்னப்பா பிள்ளை, திரு. திருவேங்கடம் பிள்ளை என்பார் இருவரும் என்னுடைய பரிசு நூலைத் தங்கள் கைகளில் வாங்கிக்கொண்டு, ''இன்றைக்கு ஓர் அரிய செல்வத்தைப் பெற்றிருக்கிறாய்! இந்த நூலை நன்றாகப் படி! உன் வாழ்க்கைக்கு வழிகாட்டும்!'' என்று சொல்லி, அதை என்னிடம் கொடுத்தனர்.

அப்பரிசு பெற்ற அன்று, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு முன்னால் 'திருக்குறள் நீதி இலக்கியம்' எனும் என்னுடைய ஆராய்ச்சி நூலுக்குச் சாகித்திய அக்காதமி 1974இல் பரிசு அளித்த பொழுது அடைந்த மகிழ்ச்சி, சிறு கடுகாகும். திருக்குறள் பரிசு பெற்றதி லிருந்து, நாள்தோறும் இரண்டு குறட்பாக்களை மனப்பாடம் செய்யத் தொடங்கினேன். அக்காலத்தில் தமிழகத்தின் மறுமலர்ச்சி இயக்கம் திருக்குறளைப் பரப்புவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தது.

சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரி ஈசுவரர் கோயில் வசந்த மண்டபத்தில், எங்கள் பள்ளியின் தமிழாசிரியரான புலவர் திரு. சக்கரபாணி அவர்கள் 1948இல், ஞாயிற்றுக்கிழமை மாலைதோறும் திருக்குறள் வகுப்பு நடத்தினார். அவ்வகுப்பில் பாடம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன். பின்னர் வேதாந்த சங்கத்தில் வெள்ளிக்கிழமை தோறும், ஒவ்வோர் அறிஞரைக் கொண்டு, திருக்குறளின் அதிகாரம் ஒவ்வொன்றும் சொற்பொழிவாக விளக்கப்பட்டது. அவ்வகுப்பு களிலும் கலந்துகொண்டு பாடம் கேட்டேன். அவ்வகுப்புகளில், தெ. பொ. மீ. அவர்கள் 'தவம்' எனும் அதிகாரத்தை மூன்றுமணி நேரம் விளக்கியுரைத்ததையும், டாக்டர் மு. வ. அவர்கள் 'மெய் யுணர்வு' எனும் அதிகாரத்தை எங்களுக்கு எல்லாம் புரியுமாறு எளிமையாக எடுத்துரைத்ததையும் நான் என்றும் மறக்க இயலாது!

1952ஆம் ஆண்டு, பச்சையப்பன் கல்லூரியில் கலைஇளவல் (சிறப்பு) வகுப்பில் தமிழைப் படித்துக் கொண்டு இருந்தேன். அப்பொழுது மின்சார ரயில் வண்டியில், பேராசிரியர் மு. வ. அவர் களிடம் பரிசாகப் பெற்ற திருக்குறளைத் தவறவிட்டுவிட்டேன். அன்றிரவு எல்லாம் உறக்கம் இல்லை! மறுநாள் காலையில், மு. வ. அவர்கள் கல்லூரிக்குப் புறப்படுவதற்கு முன்பே, அவருடைய வீட்டிற்குச் சென்றேன். என்னைக் கண்ட உடனே, அவர் முதலில் என்னைக் கேட்ட கேள்வி, 'உடம்பு சரி இல்லையா?' என்பதாகும். 'ஒன்றும் இல்லையே! நன்றாக இருக்கிறேனே!' என்றேன். 'அப்படியா! ஏதோ வருத்தமாக இருக்கிறதாகத் தெரிகிறது' என்று

அவர் சொன்னார். முந்திய நாள் நிகழ்ந்ததைச் சொன்னேன். உடனே! ''இதற்காகவா வருத்தப்படுவது! இந்த மாதிரி மூட நம்பிக்கை உனக்கு எல்லாம் இருக்காது என்று நினைத்தேனே!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றார்! கல்லூரிக்குப் புறப் படும் நிலையில் அவர், திரும்பி வந்தார்; கையில் ஒரு சிறிய நூலுடன் நின்றார். அதை என் கையில் கொடுத்து, ''அப்பொழுது உனக்கு அந்த உரையோடு கூடிய திருக்குறள் தேவைப்பட்டது! இப்பொழுது இந்த உரையோடு படித்து, சிந்தித்துப்பார்!'' என்று சொன்னார். நான், மகிழ்ச்சியோடு அந்நூலைப் பெற்றுக் கொண்டு, அவருடைய 'திருக்குறள் தெளிவுரை' எனும் நூலாக இருக்கும் என்று நூலைப் புரட்டினேன். ஆனால், அது பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய ''திருக்குறள் தெளிபொருள் விளக்கப் பொழிப் புரை''யாக இருந்தது. நான், அந்நூலில் கையெழுத்திட்டுத் தருமாறு அவரை வேண்டினேன். "படிப்பதற்குக் கொடுத்தேன்! கையெழுத்து எதற்கு?" என்று அவர் மறுத்துவிட்டார்.

பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு, அவருடைய தலைமையின் கீழ், திருக்குறள் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றும் பேற்றினைப் பெற்றேன். அப்பொழுது ஒருநாள், அவரிடம் திருக்குறள் பரிசு பெற்றதையும், அதைத் தவறவிட்டதையும், அந்த இழப்பை ஈடு செய்யும் வகையில், வேறொரு திருக்குறளை அவர் எனக்கு அன்பளிப் பாகக் கொடுத்ததையும் சொன்னேன். "நினைவு இல்லையே!" என்று சொன்னதோடு அமையாது, ''உனக்கும் திருக்குறளுக்கும் ஏதோ ஒருவகைத் தொடர்பு இருக்கிறது! அதனால்தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறாய்'' என்று புன்முறுவலோடு கூறினார். 'திருக்குறள் தான் உங்களோடு என்னைத் தொடர்பு படுத்தியது' என்றேன். 'திருக்குறள் மட்டும் அல்ல! தமிழும்' என்று சொல்ல வேண்டும் என்று பேராசிரியர் கூறிய சொற்கள், இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டு உள்ளன.

### தமிழாசிரியர்களின் துக்கவாரம்

1947ஆம் ஆண்டு, தமிழாசிரியர்கள் 'துக்கவாரம்' நாடு முழுவதி லும் கொண்டாடினார்கள். தமிழாசிரியர்களின் நிலையினைப் பள்ளி களிலும் கல்லூரிகளிலும், மக்கள் மன்றத்திலும் உயர்த்திய பெருமைக்குரியவர், அப்பொழுது சென்னை மாநிலத்தின் கல்வி அமைச்சராக இருந்த திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் ஆவார்கள். அவரைச் சந்திப்பதற்குச் சென்ற தமிழாசிரியர் குழு வினரிடம், அவ்வமைச்சர் கடுமையாக நடந்துகொண்டதையும்,

சுடுசொல் சொல்லியதையும் கண்டிக்கும் வகையில், நாடு முழுவதி லும் தமிழ்ப் புலவர் பேரணி திரண்டு எழுந்தது!

சென்னை நகரத்தில் ஒவ்வொரு நாளும், மாலையில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலோ, பொது மன்றத்திலோ கண்டனக் கூட்டம் நடைபெற்றது. நான் எல்லாக் கூட்டங்களுக்கும் சென்று வந்தேன். மூன்றும் நாள் கூட்டம் என்று நினைக்கின்றேன். அக்கூட்டத்தில் பேசிய புலவர் ஒருவர், பேராசிரியர் மு. வ. அவர்களைக் கண்டபடி தாக்கிப் பேசினார்! "சோரம் போகும் தமிழாசிரியன்! தமிழாசிரியர் களிலே ஒரு விபீஷணன் தோன்றிவிட்டான்! கல்லூரியில் பணி யாற்றுகிறவர்களுக்கு எங்கள் துன்பம் என்ன தெரியும்? பட்டம் பதவிக்காக ஆளவந்தாரிடம் பல்லைக் காட்டுபவர்" என்பது போன்ற வசைமாரியை வாரி வீசினார்.

முதல் கடிதம்

எனக்கு அதிர்ச்சியோடு, வருத்தமாகவும் இருந்தது. மறுநாள் பேராசிரியர் அவர்களுக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதினேன். "நீங்கள் ஏன் துக்கவாரத்தை ஆதரிக்கவில்லை? கூட்டங்களில் ஏன் கலந்து கொள்ளவில்லை? நீங்கள் ஒருநாள் கூட, கூட்டத் திற்கு வராமையால், புலவர்கள் உங்கள்மீது ஐயுறவு கொண்டுள் ளார்களே!" என்று பண்டிதர் தமிழில் எழுதித் தள்ளினேன்.

இரண்டு நாள்களில் அவரிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்தது. "செய்தி தெரிவித்தமைக்கு நன்றி. கவலைப்பட வேண்டா! இன்றைக்குத் தாக்குகின்றவரே நாளைக்குப் புகழ்வார்! இதனால், இரண்டும் ஒன்றே! சுடுசொல் சொன்னவர் நம்மவர். நம்முடைய குறைகளைச் சுட்டிக் காட்டவே அவர், அப்படிச்சொல்லி இருக்கலாம் இதைப் பெரிது படுத்தக் கூடாது. ஊர்தோறும் கூட்டம் கூட்டி, கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதால் என்ன பயன்? இதைவிட, நம்முடைய அறிவையும் ஆற்றலையும் நம்முடைய (நீங்கள் தமிழாசிரியரா?) முன்னேற்றத்திற்கு உதவத்தக்க வழி களில் பயன்படுத்துவதே நல்லது" என்பது அவருடைய கடிதத்தின் சாரமாகும். பேராசிரியர் திரு. அன்புகணபதி அவர்கள், மு. வ. அவர்களின் பிரதிநிதியாக, அக்கூட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு, அவ்வப்போது அவரிடம் செய்திகளைத் தெரிவித்து வந்தார் என்பதைப் பின்னர் அறிந்தேன்.

மு. வ. வின் கடலைச் சொற்பொழிவு

1950-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினைந்தாம் நாள், பல்லா வரத்தில் வாழ்ந்துவந்த தமிழ்க்கடல் மறைமலையடிகளார் மறைந்

தார். மறுநாள் மாலை 5½ மணி அளவில் அவருடைய கடைசி ஊர்வலம் புறப்பட்டது. பேராசிரியர் மு.வ. அவர்கள் ஊர்வலத்தை முன்னின்று நடத்திச்சென்றார். தமிழ் முனிவரின் பரு உடலுக்குத் தீ மூட்டினர். ஒரு பக்கம் புலம்பலும் அழுகையுமாக இருந்தது. மற்றொரு பக்கம் துன்பம் தொண்டையை அடைக்கத் தழுதழுத்த குரலில், மு. வ. சுடலைச் சொற்பொழிவு ஆற்றத் தொடங்கினார்.

''நாம் எல்லாம் சேர்ந்து தமிழிற்கு, தமிழ் உணர்விற்கு, தமிழ் அறிவிற்கு, தமிழ் ஆராய்ச்சிக்கு, தமிழ்ப்பண்பாட்டிற்குத் தீ மூட்டி விட்டோம்! கொழுந்துவிட்டு எரியும் தீயின் நாவுகள் நாகப் பட்டினத்து வேதாசலம் அவர்களைத் தழுவவில்லை! ஈராயிரம் ஆண்டு களாக நம் முன்னோர்கள் போற்றி வளர்த்த பைந்தமிழை அல்லவா செந்தழல் தீண்டுகிறது! தன் தலைமகனை இழந்த தமிழன்னை அழு கிறாள். ''இனி யாருளர் எனக்கு வாழ்வு நல்க'' எனும் ஏக்கம் தோய்ந்த அவளுடைய குரலைக் கேட்கின்றோம். 'இந்தப் பொன் னுடலை இப்படியா அடக்கம் செய்வது? என் திருமகனை இப்படியா எரியூட்டுவது?' என்று அவள் விம்மி விம்மியழுகிறாள்!'' என்று எல்லாருடைய உள்ளமும் உருகுமாறு அவர் பேசிக்கொண்டிருந் தார்.

இதற்குள் கதிரவன் மறைந்துவிட்டான்; காரிருள் சூழ்ந்து விட்டது! ஒருவர் முகம் மற்றொருவருக்குத் தெரியவில்லை! சிதை யின் தீப்பிழம்பு சுவாலை விட்டு எரிகிறது! அருகே நின்றவண்ணம் மு. வ. பேசுகிறார்.

''நாம் மக்கள் ஆட்சி நடைபெறும் நாட்டில் தான் வாழுகிறோமா என்பதே ஐயப்பாடாக இருக்கிறது! நடைபெறுவது மக்களாட்சி யாக இருந்தால், இந்த மண்ணின் மக்கள் பேசும் மொழிக்குத், தம் ஓயாத பணியால் புதியதோர் வலிவையும் பொலிவையும் தேடித் தந்த பெருமகனாரை, அரசாங்கம் அல்லவா அரசமரியாதைகளோடு அடக்கம் செய்து இருக்க வேண்டும்? தமிழ் மணக்க வேகின்ற இந்தத் திருவுடலை, அடக்கம் செய்ய அரசு அல்லவோ முன்வந் திருக்க வேண்டும்? அரசின் வணக்கத்தையோ, பாராட்டையோ, மறைமலை அடிகளாரே பெறவில்லை என்றால், இதற்கு என்ன பொருள்? தமிழ் அன்னை, அரசு கட்டிலில் அமர்த்தப்படாததனால் அல்லவா இந்த அவலநிலை! நாம் எல்லாம் தமிழர் என்று சொல்லிக் கொண்டு வாழ்வதால் என்ன பயன்?'' என்று கல்நெஞ்சமும் கரைந்து உருகுமாறு, தழுதழுத்த குரலில் அவர் பேசினார்.

பிறகு பல்லாவரம் இரயில் நிலையத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் புடைசூழ நின்று கொண்டிருந்தார். அருகே சென்றேன். "இன்று நமக்கு ஒரு கரிநாள்! பறிகொடுக்கக் கூடாத செல்வத்தை நாம் பறிகொடுத்துவிட்டோம்! தமிழிற்கும் தமிழர்க்கும் ஏற்றத்தை உண்டாக்குவதற்கு இன்னும் எத்தனை மறைமலை அடிகள் தோன்ற வேண்டுமோ?" என்று கூறியவண்ணம் தம்முடைய ஆற்றாமையை என்னிடம் புலப்படுத்தினார்.

## மாணவர் போராட்டம்

இவ்வாறு பலமுறை அவரைக் காணவும், பேசவும் வாய்ப்புகளை நானே உண்டாக்கிக் கொண்டேன். அவருடைய நூல்கள் எங்கள் உறவிற்கு உரமூட்டி வந்தன, 'அவரிடம் தமிழைக் கற்க வேண்டும்' என்னும் ஆவல், என் உள்ளத்தே தோன்றி வளர்ந்து வந்தது.

அப்பொழுது விவேகானந்தர் கல்லூரியில், இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டு இருந்தேன். கல்வி நிலையங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வந்தனர். அதற்காகச் சென்னை மாநிலத்தில் நீதிக்கட்சியினர் ஆட்சி புரிந்தபொழுது, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது. முன்னேற்றமுற்ற வகுப்பினர், 'அச்சட்டத்தை (Communal G. O.) இந்திய அரசியல் சாசனத்திற்கு முரணானது' என்று இந்தியத் தலைமை நீதிமன்றம் (Supreme Court) தீர்ப்பு அளிக்குமாறு செய்தனர்.

உடனே, இத்தீர்ப்பை எதிர்த்து நாடு எங்கும் கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரத்து அனைத்துக் கல்லூரி மாணவர்கள் 1951ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம் 11ஆம் நாள், மாபெரும் கிளர்ச்சி நடத்துவதற்குத் திட்டமிட்டு, பச்சையப்பன் கல்லூரியில் இருந்து கோட்டையை நோக்கி ஊர்வலம் புறப்பட ஏற்பாடு செய்தனர். விவேகானந்தர் கல்லூரியில் பயின்ற, பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் பதினறு பேரும் என் தலைமையில் பச்சையப்பன் பாசறைக்கு வந்து சேர்ந்தனர்.

தடையுத்தரவு போடப்பட்டமையால், ஊர்வலம் புறப்பட தாமதமாயிற்று. அப்பொழுது, பேராசிரியர் மு. வ. அவர்கள் கலைப்பகுதிக் கட்டிட வாயிலில், வேறு சிலருடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். அவரிடம் செல்லுவதா? வேண்டாமா? என்று தயங்கியவண்ணம் அப்பகுதியை நோக்கி நடந்தேன். அந்நிலையில் வேதியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த அண்ணன்

திரு. ஆ. கோவிந்தராசன் கலைப்பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரிடம் சென்றேன். அவர் டாக்டர் மு. வ. அவர்களிடம் அழைத்துச் சென்று, அறிமுகப்படுத்தினார். வேறு ஏதோ, என்னைப்பற்றி அவரிடம் சொன்னார். புன்முறுவலோடு எனக்குத் "தெரியுமே! சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கிற பிள்ளை இல்லையா? உலகம் மிகவும் பொல்லாதது! நீங்கள் உங்கள் கல்லூரியிலிருந்து வந்திருக்க வேண்டாமே! நிருவாகத்தினருக்குத் தெரிந்தால் தீங்கு செய்வார்களே!" என்று வருத்தத்தோடு வினவினார். "நான் என்ன மாணவன்தானே? இன்னும் பத்து நாட்களே கல்லூரி! அப்புறம் தேர்வு வரப்போகிறது! என்ன செய்துவிடுவார்கள்?" என்றேன். "இந்த சமயத்தில்தான் விழிப்பாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகத் தேர்வு எழுத வொட்டாமல் செய்து விடுவார்கள்!" என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

### தமிழைப் படிக்க வரவேண்டா

1951ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத் தேர்வில் வெற்றி பெற்றவுடன், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ச் சிறப்புக்கலைஇளவல் [B.A. (Hons)] வகுப்பில் சேர, விண்ணப்பம் செய்தேன். ஐயாவை நேரில் கண்டு, என் விருப்பத்தைத் தெரிவித்தேன்! அவர் "தமிழைப் படிக்க வரவேண்டா?" என்று மறுத்தார். "தமிழைப் படிப்பதால் என்ன தீமை?" என்று என் அறியாமையால் அவரைக் கேட்டேன். அவர் புன்முறுவல் பூத்தார். "நல்ல வேலை கிடைக்காது! இல்லை ...! வேலை கிடைப்பதே அரிது! வேலை கிடைத்தாலும் வளர விடமாட்டார்கள்! வாழவிடமாட்டார்கள்!" என்று அவர் சொன்னார். "நீங்கள் எல்லாரும் இருக்கும்பொழுது, எங்களுக்கு வேலை கிடைக்காதா?" என்று கேட்டேன். "ஆசிரியர் வேலையை மட்டும் எதிர்பார்க்கக் கூடாது! எந்த வேலைக்கும் போகத் தயாராக இருக்க வேண்டும்! வெளி ஊருக்குப் போகவும் தயங்கக் கூடாது! இவற்றைக் கருத்தில் வைத்துக்கொண்டு, மூன்று நாள்கள் தொடர்ந்து சிந்தித்துப்பார்! அதன் பிறகும், தமிழைத்தான் படிக்க வேண்டும் எனத் தோன்றினால், இங்கே வரவும்" என்று அவர் அறிவுரை கூறி அனுப்பினார்.

### கல்லூரியில் சேர்ந்த கதை

மறுநாள், விவேகானந்தர் கல்லூரியில், பொருளாதாரக் கலை இளவல் சிறப்பு வகுப்பில் சேருமாறு கடிதம் வந்தது. என்னை வளர்த்த எங்கள் தாய் மாமன், உடனடியாகப் போய் விவேகானந்தர் கல்லூரியில் சேரும்படி வற்புறுத்தினார். எப்படியோ மூன்று

நீர்களைக் கழித்துவிட்டு, பேராசிரியர் மு. வ. அவர்களின் முன்னால் போய் நின்றேன். வேதியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த எங்கள் அண்ணனும் உடன் வந்திருந்தார். அவரிடம் என் மதிப்பு எண்களைக் கேட்டார். ''வாங்கியுள்ள மதிப்பு எண்களுக்கு B.Com. (Hon)ல் இடம் கிடைக்குமே! 'டிரஸ்டிகள்' யாரையாகிலும் போய்ப் பார்க்கக் கூடாதா?'' என்று எங்கள் அண்ணனிடம் அவர் சொன்னார். ''தம்பி தமிழ்ப் படிக்கனும்னு ஆர்வமா இருக்கிறது. நீங்கள் வேறிடம் காட்டக் கூடாது!'' என்று அண்ணன் தயக்கத்தோடு பதில் சொன்னார். உடனே, என்னை ஏற இறங்கப் பார்த்தார்! ''வேறு எதற்கும் விண்ணப்பம் செய்யவில்லையா?'' என்று பேராசிரியர் என்னைக் கேட்டார். விவேகானந்தர் கல்லூரியில் பொருளாதாரம் படிக்க இடம் கிடைத்திருப்பதைச் சொன்னேன். ''நல்லது ஆயிற்றே! உடனே போய்ச் சேரலாமே! நமக்கு எல்லாம் அங்கு இடம் கிடைப்பது அரிதாயிற்றே! என்ன தயக்கம்?'' என்று வினவினார்.

நான் பேசாமல் நின்றேன். எங்கள் அண்ணன் 'திருநாவுக்கரசு நல்ல மாணவராக உங்களுக்குத் தோன்றவில்லையா?' என்று சிரித்துக்கொண்டே கேட்டார். உடனே, ''நல்லவராக இருப்பதனால் தான், அவரைத் தமிழ்ப் படிக்க வேண்டாமெனச் சொல்லுகிறேன். நம்மவர்கள், நல்லவர்கள், தமிழ் உணர்வு மிக்கவர்கள் எல்லாம் தமிழைப் படித்துவிட்டு, வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கிச் சீர் அழிவதை நான் விரும்பவில்லை; மேலும், தமிழ் உணர்வு உடையவர்கள் எல்லாம் தமிழ்ப் படித்து, தமிழாசிரியர்களாகிவிடுவதால் என்ன பயன்? தமிழ் உணர்வும் திறமையும் உடையவர்கள் பிற துறைகளில் பயின்று பட்டம் பெற்று, பல்வேறு துறைகளில் அதிகாரிகளாகப் போனால், எங்களைவிட நன்றாகத் தமிழை வளர்க்க முடியும். பிற துறைகளில் தமிழ் உணர்வு இல்லாதவர்கள் இடங்களை அடைத்துக் கொண்டுள்ளமையால்தான், தமிழை வளர விடமாட்டேன் என்கிறார்கள்! இந்தநிலை மாற வேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா? அதற்காகத்தான் சொல்லுகிறேன்'' என்று தம் கருத்தைத் தெரிவித்தார்.

நான் மறுமொழி சொல்லாமல் தலைகுனிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன். அமைதியாக இருந்தார். எங்கள் அண்ணன் 'நாளைக்கு வரச் சொல்லட்டுங்களா?' என்று பேராசிரியரைக் கேட்டார். தலையை அசைத்துக் கொண்டே ''அவர் விடாப்பிடியாக இருக்கிறாரே, பணம் கொண்டுவந்திருக்கிறீங்களா? இப்பொழுதே சேர்த்துக் கொள்ளச் சொல்லுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே,

தம் சட்டைப்பையில் இருந்து ஒரு துண்டு காகிதத்தை எடுத்து, அதில் ''சேர்க்க'' எனவெழுதி, என்னைப்பற்றிய குறிப்புகளைக் கொடுத்து, கையொப்பம் இட்டார். அதை என் கையில் கொடுத்து, முதல்வரிடம் அனுப்பினார். பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நான் கொடுத்த காகிதத்தையும், என்னையும் மாற்றிமாற்றிப் பார்த்தார். 'ஏம்பா வேற B.A. (Hons) எதுவும் படிக்குமாறு புரொபசர் வரதராஜன் சொல்லவில்லையா? நிறைய மார்க்கு வாங்கி இருக்கிறேயே!'' என்று கேட்டார். நான், தயக்கத்துடன் நடந்ததைச் சொன்னேன். 'சரிப்பா' போய்ப் பணத்தைக் கட்டு!' என்று கையொப்பம் இட்டு, ஒரு தாளினைக் கொடுத்தார்.

## நான் பெற்ற அறிவுரை

நான் பணத்தைக் கட்டிவிட்டு, பேராசிரியரிடம் சொல்லுவதற்காக, இங்குமங்கும் தேடி அலைந்தேன். நூலகத்தில் அவரைக் கண்டு, பணம் கட்டிய ரசீதைக் காட்டினேன். ''பிடிவாதக்காரன் அப்பா நீ. நினைத்ததை முடித்துவிட்டாய்! இன்றைக்கு நான் சொல்லும் இரண்டு நெறிகளை ஒருமை மகளிரைப் போல, இடைவிடாது பின்பற்றினால், பல்கலைத் தேர்வில் சிறப்பாகத் தேறலாம்; பிற்கால வாழ்க்கையும் நன்றாக அமையும்! முதலாவது கூட்டங்களுக்குப் போவது, பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளுவது போன்ற ஆரவார முயற்சிகளில் ஈடுபட வேண்டா! மற்றொன்று தமிழுலகம் மிகவும் குறுகியது. அதில் ஒருவருக்கொருவர் பொருமையும், பகைமையும், பூசலும் கொண்டு இருப்பார்கள். யார் என்னைப்பற்றிக் குறைவாகப் பேசினாலும், அதற்காக வருந்துவதோ, அவர்களிடம் பகைமை பாராட்டுவதோ கூடாது. அதோடு, ஒருவர் சொல்லுவதை மற்றொருவரிடம் கொண்டுபோய், கோள் சொல்லக் கூடாது! அப்பொழுதுதான், நீ பிழைக்க முடியும். இதை உன்னிடம் வற்புறுத்திக் கூறுவதற்குக் காரணம், நீ சிந்தாதிரிப் பேட்டையில் இருந்து வருவதனால்தான்!'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

அந்நிலையில், என்னுடைய சிற்றறிவுக்கு, அவருடைய இரண்டாவது உபதேசத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலவில்லை! 'சிந்தாதிரிப்பேட்டையில் இருந்து வருவது தவறு? அங்குள்ளவர்களில் யார் இவரைக் குறைகூறப் போகிறார்கள்' என்று எண்ணி வருந்தினேன். ஆனால், சில ஆண்டுகளுக்குள். அவர் கூறிய இரண்டாவது அறிவுரையின் உட்பொருளை உணர்ந்து, எனக்கு அவ்வப்போது உண்டாகிய மனவருத்தத்தை மாற்றிக் கொண்டேன்,

பேராசிரியருடைய மாணவனாகச் சேருவதற்கு முன், நான் பெற்ற அனுபவம், எனக்குப் பலவகையில் உதவி புரிந்தது. இதை விட, அவருடைய அன்புள்ளத்தையும் பண்புள்ளத்தையும் கூர்த்த மதியையும், வருமுன் காக்கும் திறனையும் நினைந்து நினைந்து வியப் புற்றேன்.

## வகுப்பு அறையில் பெற்ற அறிவு

பேராசியர் மு. வ. அவர்கள் இடம் மாணவனாகத் தமிழைப் பயின்றபொழுது, நாங்கள் வெறும் ஏட்டு அறிவை மட்டும் பெற வில்லை! வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைப் பேரளவிற்குப் பெற்றோம். இவற்றோடு பண்பாடு என்ன என்பதைப் புரிந்து கொண்டோம். வகுப்பு அறையில் நாங்கள் பெற்ற அனுபவங்களை, இப்பொழுது (இருபது ஆண்டுகளுக்குப் பிறகு), எண்ணிப் பார்க் கின்றபொழுது நெஞ்சத்தில் ஒருவகைக் கிளுகிளுப்பு உண்டாகிறது!

வகுப்பு அறையில் சங்க இலக்கியத்துள் குறுந்தொகையை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து, இரண்டுமுறை முழுவதுமாகப்பாடம் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. 'இலக்கியம் கற்கும் முறையை'த் தனியாக எடுத்துரைக்காது, ஒரு பாட்டை நடத்துவதன் மூலம் அதைப் புரிந்துகொள்ளுமாறு அவர் செய்வார். சங்க இலக்கியப் பயிற்சிக்கு முதலாவதாகத் தொல்காப்பிய 'உரியியல்' பகுதியில் உள்ள சூத்திரங்களை மனப்பாடம் செய்துகொள்ளுமாறு சொல்லு வார். ஒருநாள், குறுந்தொகை வகுப்பில், இரண்டு மூன்று பாடல்களை படித்துக்காட்டி, அவற்றில் இடம்பெற்றுள்ள உறு, தவ, நனி, மழ, மாலை, ஆய்தல், கடி போன்ற சொற்களைச் சுட்டி அவற்றின் பொருளைச் சொல்லுமாறு, ஒவ்வொரு மாணவரையும் கேட்டார். பின்னர், உரியியல் சூத்திரங்களில் காணப்படும் சொற்களை அகர வரிசைப்படுத்தி, பொருள் எழுதிக்கொண்டு வருமாறு பணித்தார். அதன் பயனை நாங்கள் விரைவில் நன்குணர்ந்தோம்!

## பாடம் கற்பித்த முறை

ஒரு நாள் 'கரும்பின் பூ என்ன நிறம்?' என்பது பற்றிய ஐயம் உண்டாயிற்று. சங்க காலப் புலவன் 'தீங்கழைக் கரும்பின் நாரு வெண்பூ' (குறுந். 85) எனப் பாடியுள்ளான். ஆனல், அது தவறு என்று மாணவர்கள் வாதாடினர். பேராசிரியர் 'அரும்பாக இருக் கின்றபொழுது வெண்மையாகத்தான் இருக்கும்' என்றார். மாநிலக் கல்லூரி மாணவரான சாலை இளந்திரையன், 'எங்கள் ஊர் கரும்பு ஊதாப் பூக்களையே' பூக்கிறது என்று அடித்துப் பேசினர். அடுத்த

வாரம் குறுந்தொகை வகுப்பிற்குள் நுழைகின்றபொழுது, பேரா சிரியர் ஒரு கையில் மூன்று வகையான கரும்புப்பூக்களைக் கொண்டு வந்தார். அரும்பாக இருக்கும்பொழுது வெண்மையாகவும், மலராக இருக்கும்பொழுது சிறிது சாம்பல் நிறம் கலந்த வெண்மையாகவும், வாடத்தொடங்கிய பிறகு கருகி விடுவதையும் காட்டி, சங்கப் புலவர்களின் இயற்கை அறிவின் திறத்தைத் தெளிவுறுத்தினர்.

இதைப் போன்றே, காந்தள், பீர்க்கம்பூ, ஆவாரம்பூ, 'மயில் அடி அனைய ... நொச்சி' இலை போன்றவற்றை அவ்வப்போது வகுப்பிற்குக் கொண்டுவந்து காட்டி, பாடம் நடத்துவதில் அவர் பேரார்வம் கொண்டிருந்தார். இப்பூக்கள், இலைகள் எல்லாம் சென்னை நகரத்தில் கிடைக்கக் கூடியன அல்ல. அடுத்தவாரத்து வகுப்பிற்குத் தேவைப்படுவன யாவை என்பதை முன்கூட்டியே, தம் நாள்குறிப்பில் குறித்துக் கொண்டு சென்று, அவற்றைக் கொண்டு வருவதற்குக் கருத்தாக அவர் ஏற்பாடு செய்வார். 'பழந் தமிழ் இலக்கியத்தில் இயற்கை' எனும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்த பேராசிரியருக்கு, இயற்கைப் பொருள்களை மாணவருக்குக் கண் எதிரில் காட்டி விளக்க வேண்டும் என்ற பேரார்வம் இருந்ததில் வியப்பு இல்லை !

### ஆராய்ச்சி உணர்வை ஊட்டிய முறை

ஒரு நாள் வகுப்பில், 'அசுணமா' எனும் விலங்கைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டோம். "அது பறவையா? அல்லது விலங்கா?" என்பது முதல் ஐயம். "இனிய இசையைக் கேட்டு, பூரிப்பு அடையும் அசுணமா, பறை ஒலியைக் கேட்டால், அந்தக் கொடிய ஓசையைக் கேட்கமுடியாமல் உயிரைவிட்டு விடும் என்பது உண்மையா?" என்பது இரண்டாவது ஐயமாக எழுப்பப்பட்டது. மூன்றாவதாக "விசய நகர மன்னர் ஆட்சிக் காலத்தில் சிற்பக் கலையில் 'யாளி' எனும் விலங்கு பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. அது யானை முகத்தையும் சிங்கத்தின் உடலையும் உடையது. இத் தகைய வடிவம் உடைய விலங்கு உலகில் இல்லை. அது சிற்பக் கலைஞர்களின் கற்பனையில் உருவான விலங்கு. இதைப் போல, அசுணமாவும் புலவர்களின் இனிய கற்பனையில் தோன்றிய, உலகில் என்றுமே இருந்திருக்க இயலாத 'கற்பனை விலங்கு'" என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். சற்றேறக்குறைய இரண்டு மணிநேரம் இதைப்பற்றிப் பேராசிரியரும் மாணவர் களாகிய நாங்களும் கலந்து உரையாடினோம்.

வகுப்பு முடியும் நேரத்திற்கு மேலாகிவிட்டது. எனவே, இதைப்பற்றி அடுத்த பருவத்தில் ஆராயலாம் என்று அவர்

சொல்லியதோடு அமையவில்லை! தொல்காப்பியர் முதற்கொண்டு பாரதியின் காலம் வரையில் வளர்ந்து வந்துள்ள தமிழ் இலக்கியங்களில் அசுணமாவைப் பற்றிவரும் குறிப்புகளைத் திரட்டி, அவற்றால் அறியப்படும் அசுணமாவின் இயல்புகளைத் தொகைவகைப் படுத்திக் கொண்டுவருமாறு பேராசிரியர் என்னைப் பணித்தார்.

ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு, சங்க இலக்கியச் சிறப்புப் பாட வகுப்பு தொடங்கியது. மாநிலக் கல்லூரி மாணவர்களும் வந்திருந்தனர். என்றால், குமரகுருபரருடைய இலக்கியங்கள் (பதினேழாம் நூற்றாண்டு) வரையிலேயே படித்து குறிப்பு எடுக்க முடிந்தது. இயன்றவரை அதை ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதியிருந்தேன். முதலில் அதைப் படிக்குமாறு பேராசிரியர் சொன்னார். என் ஆய்வுரையை மாணவத் தோழர்கள் அலசி ஆராய்ந்தனர். அவ்வாய்வின் பயனாக, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் அத்தகைய விலங்கு ஒன்று இருந்ததைப் புலவர்கள் நேரில் கண்டிருக்க வேண்டும் எனும் முதல் முடிவிற்கு வந்தோம். கி. பி. ஆறாம் நூற்றாண்டை ஒட்டி அசுணமாவை, விலங்காக மட்டும் அல்லாமல், பறவையாகக் கருதும் வழக்கம் உண்டானது எனும் இரண்டாவது முடிவிற்கு வந்தோம். காடுகள் பல அழிக்கப் பட்டதன் காரணத்தாலும், தட்பவெப்பநிலைகளில் உண்டான மாற்றத்தாலும் அவ்விலங்கு இனம் இந்திய மண்ணில் அழிந்துபோய் இருக்கக் கூடும் எனும் மூன்றாவது முடிவிற்கு வந்தோம்.

பின்னர், தாம் அசுணத்தைப்பற்றித் தொகுத்து வந்துள்ள குறிப்புகளை அவர் முறையாக விளக்கினார். புத்த சாதகக் கதைகளிலும், ஹாலாவின் சப்தசதீயிலும், அசுணம் பெற்றிருக்கும் இடத்தை அவர் விளக்கினார். அதன் பிறகு, வடமொழி இலக்கியங்களில், சிறப்பாகக் காளிதாசனின் படைப்புகளிலும், பாரவி நூல்களிலும், அமரகோசத்திலும் ‘அசுணம்’ என்னும் விலங்கு பேசப்படுவதையும், அதைப் ‘பறவை’ என்று வடமொழிவாணர் சில இடங்களில் சுட்டுவதையும் ஆங்கில மொழிபெயர்ப்புகளோடு படித்துக் காட்டினார்.

பிறகு, கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களிலும், ஆங்கிலம், பிரெஞ்சுமொழிகளின் இலக்கியங்களிலும் இத்தகைய விலங்கு ஒன்று வாழ்வு பெற்றிருப்பதை, இலக்கிய நயம் தோன்ற அவர் விளக்கினார். இதற்குள் இரண்டுமணி நேரம் ஓடியது தெரியவில்லை, எனவே, அத்துடன் வகுப்பு முடிந்தது.

இதற்குமேல், 'ஐயா என்ன சொல்லப் போகிறார்?' எனும் ஆவலோடு, நாங்கள் அடுத்தவாரத்தை எதிர்நோக்கி இருந்தோம். வகுப்பிற்குப் பேராசிரியர் வருமுன்னரே, மேசையின்மீது ஐந்தாறு அழகிய நூல்கள் வைக்கப்பட்டிருந்தன; கரும்பலகையில் ஒரு விலங்கின் படம் வரையப்பட்டிருந்தது.

அசுணமாவைப்பற்றி, இக்காலத்திய விலங்கியல் அறிஞர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அவர் தெளிவுறுத்தினார். வெப்ப மண்டலப் பகுதிகளில், பண்டைக் காலத்தில் இத்தகைய விலங்கு ஒன்று இருந்தது உண்மை. காலப் போக்கில் அதன் வாழ்விடங்கள் அருகிப்போயின. இக்காலத்தில் அதன் இனவழி வந்த ஒருவகை விலங்கு தென்ஆப்பிரிக்காவிலும், தென்அமெரிக்காவிலும் இருப்பதாகத் தெரிவித்தார். இக்கருத்திற்குரிய சான்றுகளாக மேசையின் மீது இருந்த நூல்களில் அந்த விலங்கைப்பற்றி உள்ள செய்திகளை அவர் படித்துக் காட்டினார். பின்னர், கரும்பலகையில் இருந்த படத்தின் பகுதிகளை விளக்கி, அதை ஏன் விலங்காகக் கருதுகிறார்கள் என்பதற்குரிய காரணத்தைத் தெளிவுறுத்தினார்.

இறுதியாக, "இச்செய்திகளை எல்லாம் தொகுத்துக் கொடுத்து, விளக்கம் தந்தவர் ஒரு தமிழ் மகனார். அவர் ஒரு விலங்கியல் வல்லுநர்; உலகப் புகழ் பெற்றவர்! மாநிலக் கல்லூரியின் முதல்வராக விளங்கிய அவர், இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்!" என்று அவர் மொழிந்தார். உடனே மாநிலக் கல்லூரி மாணவர்கள் 'எங்கள் டாக்டர் மணவாள இராமானுஜம்' என்று அவர் பெயரை உரிமையோடு உச்சரித்தனர்.

இந்த நிகழ்ச்சியை, நான் விரிவாக இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம், மாணவர்களுடைய ஐயத்தைப் போக்கிக் கசடறக் கல்வி கற்பிப்பதில், அவருக்கு இருந்த ஆர்வத்தை இந்த நிகழ்ச்சி காட்டுகிறது. ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முறையில், 'கற்பிக்க உதவும் கருவிகளோடு' (Teaching Aids), ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும் என்பது முதல் விதியாகும். அவர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் அல்லது கல்லூரியில் படித்தவர் அல்லர். மற்றும் கல்லூரிகளில், அறிவியல் பாடங்களையே விளக்கக் கருவிகளைக் கொண்டு, பரிசோதனைகளைச் செய்து காட்டித் தெளிவுறுத்துவர். ஆனால், இலக்கிய வகுப்பினை ஆய்வுக் கூடமாக மாற்றிய சிறப்பும், எதையும் தெளிவாக விளக்க வேண்டும் எனும்

ஆர்வமும் பேராசிரியர் மு. வ. அவர்கள் இடத்தில் தவிர வேறு எவரிடத்தும் நான் கண்டது இல்லை!

**கால ஆராய்ச்சியும் காழ்ப்புணர்ச்சியும்**

இன்றைக்குப் பலர் 'ஆராய்ச்சி! ஆராய்ச்சி!' எனப் பேசுகின்றனரே ஒழிய, உண்மையான ஆராயச்சி முறைகளைப் பின்பற்றி, உருப்படியான செயல்கள் ஒன்றையும் செய்வது இல்லை! பேராசிரியர் மு. வ. அவர்கள் தமிழ் ஆராய்ச்சியை, சிறப்புமிகு நெறிமுறைகளின் அடிப்படையில் நிறுவி, பிறரும் பின்பற்றுமாறு செய்துள்ளார்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சி என்ருல், பெரிதும் அது புலவர்களின் காலத்தைப் பற்றியதாகவோ, இலக்கியத்தைப் பற்றியதாகவோ இருக்கும். 'மணிவாசகர், தேவாரம் பாடிய மூவருக்கும் முந்தியவரா அல்லது பிந்தியவரா?' என்பதைப்பற்றிப் பல ஆண்டுகள் ஆராய்வர். முதல் கருத்தை ஆதரிப்போர், இரண்டாம் கருத்தை நிலைநாட்ட முயலுவோரைப் பகைவராகவே கருதி, இழித்தும் பழித்தும் பேசுவர். இதைப் போன்றே 'கம்பர் ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்தவரா? பன்னிரண்டாம் நூற்ருண்டில் இருந்தவரா?' என்பதைப் பற்றித் தீராத வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றவண்ணம் இருக்கும்.

**ஆராய்ச்சி நெறிமுறைகள்**

''ஆராய்ச்சி என்பது தற்சார்பற்ற முறையில் செய்யப்பட வேண்டும்! முன்கூட்டியே ஒரு முடிவிற்கு வந்துவிட்டு, பிறகு அதற்குக் காரணங்களைத் தேடக் கூடாது. கிடைக்கும் சான்றுகளைத் தொகை வகைப்படுத்தி, அவற்றை நுட்பமா்க ஆராய்வதன் மூலம் உண்மை காண முயல வேண்டும். பிறகு ஒரு முடிவிற்கு வர வேண்டும். அந்த முடிவு, அளவை இயல் அடிப்படையில் அமைந்ததா? மற்றவர்களால் "முரண்பாடு அற்றது; 'மலைவு' இல்லாதது என ஒப்புக்கொள்ள இயலுமா?" என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, அதன் பிறகு, அவ்வாராய்ச்சியின் முடிவினை வெளியிட வேண்டும். இவ்வாறு நெறிமுறைகளைப் பின்பற்ருமல், தம்முடைய 'விழைவார்ந்த விருப்பங்களை' நிலைநாட்ட, இல்லாத காரணங்களையும், பொருந்தாத காரணங்களையும் காட்டுவதும், வெறுப்பூட்டும் சொற்களைக் கூறுவதும் ஆராய்ச்சியாகாது. பாரதியார்

ஐந்துதலைப் பாம்பு என்பான்—அப்பன்
ஆறுதலை என்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்

என்று பாடியதைப் போல, நம் தமிழ் ஆராய்ச்சியாளர்கள், 'பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்' வளர்ப்பதிலேயே காலத்தைக் கழித்துவருகின்றனர். நீங்கள் எல்லோரும், கால ஆராய்ச்சியில் அதிகமாகக் கருத்தைச் செலுத்தாது, 'உண்மையே தெய்வம்' எனும் மனப்போக்குடையவராய், உண்மையை நாடும் ஆர்வத் தோடு தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்.

### பலதிற ஆராய்ச்சிக்கு வழிவகுத்தவர்

தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்குக் 'கால ஆராய்ச்சி' மட்டும் போதாது. ஆராய்ச்சி முறைகள் பல உள. அவற்றுள் 'வரலாற்று முறை ஆராய்ச்சி' என்பது ஒன்று. அதன் ஒரு பகுதியே கால ஆராய்ச்சி! எனவே, அதிலே தோய்ந்து விடாதீர்!

ஆராய்ச்சி வகைகள் பல. ஓர் இலக்கியத்தின் சிறப்பு இயல்பு களைப் புலப்படுத்தும் ஆராய்ச்சி, இலக்கியப் பாத்திரங்களின் பண்புநலனை மதிப்பிடும் ஆராய்ச்சி, ஆசிரியரின் ஆளுமையைப் புலப்படுத்தும் ஆராய்ச்சி, கருத்துநிலை ஆராய்ச்சி, விளக்கவியல் ஒப்பீட்டு ஆராய்ச்சி என்று பலவகையாக மேற்கு நாட்டு நல் அறிஞர்கள், ஆராய்ச்சியைப் பல துறைகளில் போற்றி வளர்த்து வருகின்றனர் என்று ஒருமுறை, தாங்கள் மேற்கொள்ளவேண்டிய ஆராய்ச்சி முறைகளைப் பேராசிரியர் அறிவுறுத்தினர்!

இவ்வாறு, 1952–1954 அளவில் ஆராய்ச்சி முறைகளைப் பற்றிச் சிந்தித்த தமிழ் அறிஞர்கள் ஒரு சிலரேயாவர். அவர் களுக்கு எல்லாம் டாக்டர் மு. வரதராசனர் ஒரு முன்னோடியாக விளங்கினர். அவருடைய 'ஓவச்செய்தி' ஓர் இலக்கியத்தின் - பாட்டின் சிறப்பு இயல்புகளைப் புலப்படுத்தும் ஆராய்ச்சி. சங்க இலக்கியத்தைக் கற்க விரும்புவோருக்கு நல்லதோர் அறிமுக நூலாக அது அமைந்திருக்கிறது. 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' முதல் வகை ஆராய்ச்சியைச் சேர்ந்ததாகும். கண்ணகி, மாதவி போன்றவை, பாத்திரப் பண்புநலன்பற்றிய ஆராய்ச்சி நூல்களாகும். இவருக்கு முன்பு இத்தகைய ஆராய்ச்சி யைத் தமிழில் செய்தவர்கள் இல்லை என்றே கூறலாம்.

"'எதைப் புலவன் சொல்லுகிருன் என்பதைவிட எப்படிச் சொல்லி இருக்கிருன்' என்பதை அறிய முயல்வதனுல், நாம்

இலக்கிய இன்பத்தைப் பேரளவிற்குப் பெற இயலும்'' என்பதைச் சொல்லிவிட்டு,

யார ணங்கு உற்றனை கடலே
நள்ளென் கங்குலும் கேட்கும் நின்குரலே!

என்னும் குறுந்தொகைப் பாடலின் அடிகளை எடுத்துக்காட்டி, அவர் விளக்கிய திறன் நினைந்து நினைந்து மகிழத்தக்கதாகும். இதைப் போன்றே,

'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!'

எனும் புறநானூற்றுப் பாடலின் அடியைச் சொல்லி, அதில் பொதிந்துள்ள கலையழகைப் புலப்படுத்துவர்; அளவிட்டுரைக்க இயலாத அவலச் சுவையை நாங்கள் எல்லாம் உணர்ந்து உருகுமாறு செய்வர்! ''நயமிகு பாடல் நேராகக் கருத்தை உணர்த்தாது; சுற்றிவளைத்துச் சொல்லுவதில்தான் சுவை இருக்கிறது'' என்பதை இந்த அடியைக் கொண்டு விளக்குவர். 'Poetry, Its Directness and Obliquity' எனும் நூலின் கருத்துகளை எல்லாம் சங்கப் பாடல்களில் பொருத்திக் காட்டி மூன்று நாள்கள் குறுந்தொகை வகுப்பை நடத்தியுள்ளார். பெயர்தான் குறுந்தொகை வகுப்பு. ஆனால், அது சங்க இலக்கிய வகுப்பாகவே இருக்கும்.

'கதிரவன் மறைந்தனனே! காரிருள் பரந்ததுவே' எனப் பாடும் இளங்கோவடிகள், 'இரவு' வந்துவிட்டது என்பதை,

''மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்தது
இம்மருண் மாலை''

எனக் கலைநயம் வெளிப்படும் வகையில், இலக்கிய இன்பத்தைப் பெருக்கும் வகையில் பாடியுள்ளதைக் காட்டி, ''சிறந்த புலவன் நல்ல கலைஞனாக இருப்பான்'' என்பதைத் தெளிவுறுத்துவார்.

ஆசிரியரின் ஆளுமையைப் புலப்படுத்தும் ஆராய்ச்சி முறையினைப் பின்பற்றியே ஆங்கிலத்திலும் தமிழிலும் 'இளங்கோவடிகள்' எனும் ஒரே பெயரைக் கொண்ட, இருவேறு வகையான நூல்களை அவர் படைத்துள்ளார்.

குறிப்பிட்ட 'ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு, காலந்தோறும் அக்கருத்து புலவர் பெருமக்களால் எவ்வெவ்வாறு போற்றப்பட்டுள்ளது? எவ்வெவ்வாறு வளர்ந்து வந்துள்ளது?'' என்பதை இலக்கிய நயம் புலனாகுமாறு ஆராய்வது ஒரு முறை. இம்முறையினைப் பின்பற்றியே 'முல்லைத்திணை,' 'கொங்குதேர் வாழ்க்கை' எனும்

நூல்களை ஐயா படைத்துள்ளார். இத்தகைய ஆராய்ச்சியை ஐயாவே, தமிழில் தொடங்கி வைத்துள்ளார்.

ஒரு நூலின், பாட்டின் அல்லது கருத்தின் இயல்புகளை விளக்கியுரைப்பது விளக்கவியல் ஆராய்ச்சியாகும். 'குறள் காட்டும் காதலர்', 'நடைவண்டி', 'மணல் வீடு', 'புலவர் கண்ணீர்', 'இலக்கியக் காட்சிகள்' 'தமிழ் நெஞ்சம்' என்னும் பேராசிரியரின் நூல்களை இவ்வகை ஆராய்ச்சியில் நாம் அடக்கிக் காட்டலாம். இந்த ஆராய்ச்சிமுறை, ஆராய்ச்சி வகைகளுள் தொடக்கநிலைச் சார்புடையது. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பேரின்பம் பயப்பது; மக்களின் கருத்தை எளிதில் கவருவது.

நம் பேராசிரியர் மூலபாட ஆராய்ச்சி (Textual study) யிலோ, ஒப்பீட்டு ஆராய்ச்சியிலோ கருத்தைச் செலுத்தவில்லை. எனினும், என்னை 'ஒப்பீட்டு ஆராய்ச்சியினை' மேற்கொள்ளச் செய்து, 'திருக்குறள் நீதி இலக்கியத்'தைப் படைக்குமாறு அவர் தூண்டினார்.

**ஆராய்ச்சியின் நோக்கும் போக்கும்**

ஆராய்ச்சியைப்பற்றி வகுப்பு அறையிலும், தனிமையிலும் ஐயா அவர்கள் கூறிய கருத்துகள் பல. அவற்றுள் இரண்டு இன்னும் என் மனத்தில் பசுமையாக இருக்கிறது. "எந்த ஆராய்ச்சியும் மக்களுக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும். நம்முடைய வறட்டு அறிவை, நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக மட்டும் இருக்கக் கூடாது! மக்களுக்குத் தெளிவை உண்டாக்கக் கூடியதாக நம் ஆராய்ச்சி இருக்க வேண்டுமே தவிர, அவர்களுடைய அறிவைக் குழப்புவதாக இருத்தல் கூடாது!'' என்பதை அடிக்கடி எங்களுக்கு அவர் அறிவுறுத்துவார்!

''ஆராய்ச்சி என்பது என்ன? உண்மை காணும் நோக்கில், நம் சிந்தனையை முறைப்படுத்தி வெளிப்படுத்துவது அல்லாமல், வேறு என்ன?'' என்று மிக எளிதாக ஆராய்ச்சிக்கு அவர் விளக்கம் தருவார். இக்காலத்தில், டாக்டர் பட்டம் பெற்ற சிலர், "ஆராய்ச்சி என்பது ஒரு பெரிய பூதம்! அந்தப் பூதத்தை அடக்குவது கடினம். அதை எல்லாரும் செய்ய இயலாது'' என்று நம்மை மிரட்டுகின்றனர்!

ஆனால், ஐயா, அந்தக் காலத்திலேயே ஆராய்ச்சியைப்பற்றித் தெளிவான வரையறையைத் தந்துள்ளார். அத்துடன், ''எல்லா ஆராய்ச்சிகளுமே மூன்றேமூன்று செயல்களை அடிப்படையாகக் கொண்டவை!'' என்பதை,

கருத்துகளைத் திரட்டுதல்
கருத்துகளை வகைப்படுத்துதல்
வகைப்படுத்திய கருத்துகளை விளக்கியுரைத்தல்

எனும் விதிகளாக வகுத்துரைப்பார்.

இவ்வாறு தமிழ் ஆராய்ச்சி உலகில், புதுமுறைகளைப் புகுத்தித், தமக்கெனப் புதுவழியை அமைத்துக் கொண்ட ஐயா அவர்களை, 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' எனப் போற்றுவது பொருத்தமாகும்.

**இலக்கணமும் எழுத்தாளர்களும்**

'இலக்கணத்தை முழுமையாகப் பின்பற்றி எழுதுவதுதான் சிறந்ததா?' என்பதைப்பற்றி, ஒருமுறை வகுப்பில் கலந்து உரையாடினோம். "மாணவர்கள் இலக்கண விதிகளைப் பின்பற்றித்தான் எழுதவேண்டும். ஆனால், பல ஆண்டுகள் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பிறகு, 'பழகு தமிழில்' எழுதிப் பழக வேண்டும். இலக்கண விதிகள், மொழி எனும் நெடுஞ்சாலையில் உள்ள கைகாட்டி மரங்கள் போன்றவை. நாம் போக வேண்டிய வழி எது என்பதை முடிவு செய்துகொண்டு அந்த வழியில் நாம் போக வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய பயணம் வெற்றியாக முடிவுறும். இதைப் போன்றே, நம்முடைய நோக்கங்களுக்கு ஏற்றவகையில், ஓரளவிற்கு இலக்கண மரபிற்குட்பட்டு, நாம் எழுத வேண்டும். அப்பொழுது தான், நமக்கென ஒரு நடை அமையும்" என்று தம் கருத்தைப் பேராசிரியர் தெரிவித்தார்.

உடனே ஒரு மாணவர், "நீங்கள் 'தேன்மொழி' என்றும், 'தமிழ்ப் பண்பாடு' என்றும் எழுதுகின்றீரே! அது சரியா? 'தேமொழி' என்றும், 'தமிழப் பண்பாடு' என்றும் எழுதுவதுதானே இலக்கண மரபு" என்று விளக்கம் கேட்டார்.

புன்முறுவலோடு ஐயா, "மொழி என்பது மக்களோடு சேர்ந்து வளர்ந்து வருவது, வளர்ச்சியில் மாற்றங்கள் உண்டாவது இயற்கை. காலத்தின் சூழலுக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்ப, மொழியில் அவ்வப்போது சிற்சில மாற்றங்கள் உண்டாகின்றன. நம் தமிழ், இலக்கிய மொழி மட்டும் அன்று! மக்கள் அன்றட வாழ்க்கையில், பல்வேறு நிலைகளில் பயன்படுத்திவரும் மொழி! எனவே, அதில் மாற்றங்கள்—புதுமைப் போக்குகள்—இடம்பெறுவது இயல்பு! அந்த இயல்பினை மதித்துப் போற்றும் வகையில், மக்களுக்குப் புரியும் வகையில், காலத்திற்கேற்ற முறையில் மொழியை—சொற்களை நான் பயன்படுத்துகிறேன்,

"தொல்காப்பியர் வகுத்த இலக்கண வழிகளைப் பெரிதும் பின் பற்றியே சங்கப்புலவர்கள் இலக்கியம் படைத்துள்ளனர்! ஆனால், அவர்கள் பாடல்களில் புதிய மொழி இயல்புகள் இடம்பெற்றுள்ள தைக் காணுகின்றோமே! அவை எதைக் காட்டுகின்றன? முதலில் மக்கள் பேச்சில் இடம்பெறும் புதிய இயல்புகள், ஆற்றல்மிக்கதாக இருக்குமானால், காலப்போக்கில் இலக்கியத்தில் இடம்பெற்றுவிடு கின்றன. சங்க இலக்கியங்களுள் குறுந்தொகை, அகநானூறு போன்றவற்றின் தமிழ்மொழி இயல்புகளுக்கும், கலித்தொகை பரிபாடல் ஆகியவற்றின் மொழி இயல்புகளுக்கும் இடையே குறிப் பிடத்தக்க அளவிற்கு வேற்றுமைகள் உள்ளன. அவை எவ்வாறு உண்டாயின? மொழியின் வளர்ச்சியில் உண்டான மாற்றங்களால் புதிய இயல்புகள் தோன்றி உள்ளன என்பதை அல்லவா அவை அறிவிக்கின்றன.

"இதைப் போன்றுதான் சங்கத் தமிழிற்கும், தேவார காலத் தமிழிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சங்கத் தமிழிற்கும் சோழர் காலத்திய தமிழிற்கும் எவ்வளவு வேறுபாடு? இதனால்தான், தொல்காப்பிய உரையாசிரியர்கள், புதிய இயல்பு களைப் பழைய விதிகளில் அடக்கிக் காட்ட முயன்றுள்ளனர். 'என்ற மிகையானே,' 'என்னும் இலேசால்,' 'என்னும் விதப்புக் கிளவி யான்' எனும் தொடர்களை அடுத்து, அவர்கள் கூறியுள்ள செய்திகள் அனைத்தும், தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு, தமிழில் தோன்றி யுள்ள புதிய இயல்புகளைப்பற்றியனவாக உள்ளதை ஆய்வுக் கண் ணோட்டத்தோடு காண வேண்டும்.

"தொல்காப்பியத்தின் வழிவந்ததுதான் நன்னூல். நன்னூல் தோன்றக் காரணம் என்ன? இரண்டு நூல்களுக்கும் இடையே ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டகால இடைவெளி இருக் கிறது. இந்தப் பதினைந்து நூற்றாண்டுகளில் தமிழ் மொழி வளர்ந்து இருக்கிறது அல்லவா? வடமொழியின் தாக்கம் தமிழில் பெருகி இருக்கிறது அல்லவா? அதனால் உண்டான மாற்றங்கள் பல. அவற்றை யெல்லாம் முறைப்படுத்தி, புதிய விதிகளாகச் சிலவற் றைப் படைத்து, பழைய விதிகளோடு அவற்றைக் கலந்து 'நன்னூல்' எனும் புதிய இலக்கணத்தைப் பவணந்தியார் இயற்றியுள்ளார். பன் னிரண்டாம் நூற்றாண்டுத் தமிழர்களுக்கு, இத்தகைய இலக்கணம் ஒன்று தேவைப்பட்டது. இன்றைக்கு நமக்குத் தமிழில் இடம் பெற்றுள்ள புதிய இயல்புகளைப் புலப்படுத்தும் புதியதோர் இலக்க ணம் தேவைப்படுகிறது! மற்றும், நீங்கள் ஓர் உண்மையை நினை வில் வைத்துக் கொள்ள வேண்டும். இலக்கணம் என்பது ஒரு மொழியின் கடந்தகால இயல்புகளைத்தான் காட்டுமே யொழிய,

நிகழ்கால இயல்புகளைச் சுட்டாது. இதனால்தான், மொழியியல் அறிஞர், 'இலக்கணத்தை ஒரு பழம்பொருள் காட்சியகம்' (Grammar is the museum of language) என்று சுட்டுகின்றனர்'' என்று மொழிந்தார்.

நான் எழுந்து,

> எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறுயர்ந்தோர்
> செப்பினர்? அப்படிச் செப்புதல் மரபே
>
> (நன். 388)

என்னும் சூத்திரப் பொருளை, நாம் பின்பற்ற வேண்டாம் என்பது தங்கள் கருத்தா?'' என்று கேட்டேன்.

''நம் மொழி, சிதைந்தும் திரிந்தும் கெட்டுவிடாமல் காப்பதற்கு நாம் மரபைக் கட்டாயம் போற்றித்தாளுக வேண்டும். பேச்சு மொழிகள் எளிதில் மாற்றமுறும்; சிதைந்துவிடும். தமிழைப் போன்ற இலக்கிய வளமுடைய மொழிகள், எளிதிலே மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாது; சிதைவுருது.

"இதனால்தான், நாம் பேசும் தமிழிற்கும் எழுதும் தமிழிற்கும் இடையே பெருத்த வேறுபாடு இருக்கிறது! கன்னியாகுமரிக்காரர் பேசுவது சென்னையில் வாழும் தமிழருக்குப் புரியாது! இதைப் போலவே சென்னைத் தமிழ் கன்னியாகுமரியில் வாழ்பவருக்குப் புரியாது! ஆனால், எழுத்தில் இந்தச் சிக்கல் இல்லை! கவிமணிதேசிக விநாயகம் பிள்ளையின் 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு!' எனும் பாட்டை எல்லா மாவட்டத்தினரும் படித்துப் புரிந்துகொள்ள முடியும். திரு. வி. க. வின் 'முதுமை உளறலே,' 'படுக்கை பிதற்றலே' இன்றைக்கு எங்குள்ள தமிழரும் புரிந்து கொள்ள இயலும்! எனவே, இலக்கியத் தமிழில் நிலையான இயல்புகள் நிறைய உள்ளன. பேச்சுத் தமிழ் கொச்சைத் தமிழாக கருதப்படு கிறது. ஆயினும், மக்கள் பேசும் தமிழின் புதுமைப் போக்குகள், நாளடைவில் இலக்கியத்தில் இடம்பெறத்தான் செய்யும். புதுமைப் போக்குகளை, இயல்புகளை நாம் எளிதில் புறக்கணித்துவிட இயலாது!

"எனவே, பழைய இலக்கணம் கூறும் விதிகள், வளர்ந்துவரும் மொழியைக் கட்டுப்படுத்தா. இலக்கியத்தைப் பொறுத்தவரையில் புலவர் வழக்கு நிற்கும். மக்களின் தமிழில் அது செல்லாது. 'மக்களின் குரலே கடவுளின் குரல்' என்பது மக்களாட்சியில் அரசிய லுக்கு மட்டும் உரிய உண்மை அன்று! மொழியின் வளர்ச்சிக்கும் அது பொருந்தும்!

"இங்கே ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது! 'எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறுயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே!' என்று அறிவுறுத்திய பவணந்தியாரே,

> பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல! கால வகையினுலே (நன். 462)

என்று கூறியுள்ளதை நினைத்துப் பார்க்க வேண்டும். நாமாகத் திட்டமிட்டுக் கழிக்கவோ, புகுத்தவோ கூடாது. ஆனுல், தாமாகப் புதிய இயல்புகள் மொழியில் இடம்பெறுமானுல், அவற்றைப் புறக் கணிக்கக்கூடாது எனும் உண்மை, மொழிக்கு மட்டும் அல்லாமல் நம் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளுக்கும் செயல்களுக்கும் பொருந்துவ தாகும்'' என்று அவர் அமைதி கூறியமை, நேற்றுத்தான் அவரிடம் கேட்டதைப்போல் தோன்றுகிறது!

### பண்பாளர்

பேராசிரியர் சிறப்புமிகு அறிஞராக மட்டும் விளங்கவில்லை. அன்பும் பண்பும் நிறைந்த நல்ல மனிதராகவும், இலட்சியக் குடி மகனுகவும் திகழ்ந்தார். மாணவர்களிடம் அன்பு காட்டுவதில் அவருக்கு இணையாக வேறு யாரையும் கூற இயலாது! பொருள் வேண்டுவோருக்குப் பொருளும், பரிந்துரை வேண்டுவோருக்குப் பரிந்துரையும் தந்து உதவுவதில் அவர் வல்லவர். ஆனுல், அவற் றைப் பிறருக்குத் தெரியாமல் கொடுத்து உதவுவார்!

### மாணவரிடம் காட்டிய பரிவு

பி. ஏ. (ஆனர்சு) தமிழ் வகுப்பில் படித்த மாணவர்களில் பலர், முதலாண்டில் தேர்ச்சியுற வேண்டிய ஆங்கிலப் பாடத்தில் முதல் முயற்சியில் வெற்றிபெற மாட்டார்கள். இதனுல், இரண்டாம் ஆண்டுத் தமிழ் வகுப்பில் கருத்தைச் செலுத்த இயலாமல் அவர்கள் அல்லல்படுவர். அவர்களை அழைத்து, ஆங்கிலப் பாடத்தில் கட்டு ரைகள் எழுதிவருமாறு ஐயா பணிப்பர். குறித்த நாளில் அக்கட்டு ரைகளைத் திரட்டிக் கொண்டுபோய், ஆங்கிலத்துறைப் பயிற்று ஆசிரியர்களிடம் கொடுத்துத் திருத்தித் தருமாறு வேண்டுவார். பின்னர், வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணிக்குமேல், தமிழ்த் துறை அறைக்கு மாணவர்களை அழைத்துத், திருத்தப்பட்ட கட்டுரை களில் காணப்படும் பிழைகளைச் சுட்டிக் காட்டி, அவற்றைப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் விளக்குவார். அவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுப்பார்.

இப்படிப் பலமுறை, அவர் தனிப்பட்ட முறையில் பலருக்கு ஆங்கிலப் பாடத்தில் சிறப்புப் பயிற்சி அளித்து வந்தார். இப்பயிற்சியாலும் ஆங்கிலத்தில் வெற்றிபெற முடியாமல், மூன்றும் ஆண்டின் முடிவில், தமிழ்த்தேர்வு எழுத இயலாது வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்ட மாணவர்களுக்காக அவர் பெரிதும் வருந்துவார். அவர்களில் ஒருவரை மவுண்ட் ரோடில் இருந்த அரசினர்க் கலைக்கல்லூரியில் கலைஇளவல் (பி. ஏ.) வகுப்பில் சேர்த்துப் படிக்குமாறு செய்து, அவ்வப்போது பண உதவியும் செய்து வந்தார். இதைப் போல, எத்தனையோ மாணவர்களுக்கு அவரவர்கள் தேவைக்கேற்ற உதவிகளைப் பரிவோடு பேராசிரியர் செய்துள்ளார்.

### சிறப்புமிகு அறிவுரைகள்

அடிக்கடி அவர் சில அறிவுரைகளை எங்கள் இளம் உள்ளங்களில் ஆழப்பதியுமாறு சொல்லுவார்! “ஒன்றைப் பெறுகிறபொழுது மற்றொன்றை இழக்க நேரிடும். அதுதான் இயற்கை! அறம்! அதற்காக வருந்தக் கூடாது” என்பர். “ஒருவனுக்குப் புகழ் உண்டாகிறது என்றால், அதே சமயத்தில் சிலருடைய பகையும் வந்து சேரும். அதைத் தவிர்க்க முடியாது” என்று விளக்கம் கூறுவார்.

### தமிழன் ஏமாளியானதை உணர்த்தும் கதை

தமிழ் மக்களுள் பெரும்பாலோர் ஏமாளிகளாக இருப்பதை ஒரு சிறுகதையாக அவர் அவ்வப்போது கூறுவார். ஒரு பெருமகனார் சொந்தமாகக் ‘கார்’ (Car) வைத்துக் கொண்டிருந்தாராம். எப்பொழுதும் காரிலேயே போவாராம். பல ஆண்டுகள் ஆன பிறகும் அவர், அந்தக் ‘காரை’ ஓட்டக் கற்றுக் கொள்ளவில்லையாம். நெடுங்காலமாக ஓர் ஓட்டுநர், அவர் இடத்தில் வேலை செய்துவந்தாராம். அவருக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்டபொழுது, உரிமையாளர் மறுத்துவிட்டாராம். இதனால், மனம் வருத்தமுற்ற ஓட்டுநர், உரிமையாளரை ஏமாற்ற முயன்றாராம்.

ஒரு நாள் அந்தப் பெருமகனார், தம் ‘காரில்’ வெளியூருக்குப் போனாராம். அங்குச் சென்று, அவருடைய பணிகளை முடித்துக் கொண்டு திரும்பியபொழுது, அவருடைய ‘காரைக்’ காணமல் திகைத்தாராம். காரைத் தேடியபொழுது, ஊர்மக்கள் கூடிவிட்டனராம். ‘ஓட்டுநரை’ யாரோ இழுத்து வந்தார்களாம். அந்த ஆள், தம்முடைய ‘கார்’ என்றும், அதற்கும் அந்தப் பெருமகனாருக்கும் எத்தகைய ‘தொடர்பும்’ கிடையாது என்றும் வாதிட்டானாம். “அவரு

டைய 'கார்' என்பது உண்மையானால், அவரை அந்தக் 'காரை' ஓட்டச் சொல்லுங்கள்!'' என்று அவன் அறை கூவினானும். அங்கிருந்த மக்களில் சிலர், அவனுக்கு ஆதரவாகப் பேசினார்களாம்.

அந்தப் பெருமகனாரைக் 'காரை' ஓட்டுமாறு சொன்னார்களாம். அவர் செய்வது அறியாது திகைத்தாராம், உடனே, ஓட்டுநர், "பார்த்தீர்களா! அவருடைய 'காரா' இருந்தால் இந்நேரம் ஓட்டிக் கொண்டு போய் இருக்க மாட்டரா? அவர் பொய் சொல்லுகிறார்!'' என்று பழித்தானும்! அந்தப் பெருமகனார் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டாராம். உடனே ஒரே குழப்பம் உண்டாயிற்றும். 'போலீசுகாரர்' அவ்விடத்திற்கு ஓடி வந்தார்களாம்; நடந்ததை விசாரித்துத் தெரிந்துகொண்டனராம். அந்தக் 'கார்', யார் பேரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சென்னைக்குத் தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு அறிந்தனராம். உடனே, நம்பிக்கை துரோகம் செய்ய முற்பட்ட 'ஓட்டுநரைக்' கைது செய்தனராம்.

இதைப் போன்றதுதான் தமிழன் வாழ்ந்துகெட்ட வரலாறும் என்பர் பேராசிரியர். வட (பிற) மொழியாளர் எல்லாவற்றையும் தமிழிலிருந்து, தம்மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டனர். அதன் மூலநூல்களைத் தமிழர் போற்றிக் காக்காததனால் அவை எல்லாம் அழிந்து போய்விட்டன. பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகு, 'ஓட்டுநர்' போன்ற வடமொழியாளர் "எல்லாம் எங்கள் மொழிக்கே உரியன! நீங்கள்தான் மொழிபெயர்த்துக் கொண்டீர்கள்!" என்று உரக்கக் கூறத் தொடங்கினராம். அதைக் கேட்ட அறிவு தெளிவு உடைய தமிழர் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனராம். சிந்திக்கத் தெரியாத தமிழர், வடமொழியாளருக்கு 'ஆமாம்' பாட்டுபாடும் 'தாசர்களாக' மாறினராம்.

அந்த நிலையில் போலீசுக்காரர்களைப்போல, இந்தியாவை ஆள வந்த ஐரோப்பியர் இனத்தைச் சேர்ந்த அறிஞர்கள், தமிழின் பெருமையை, உரிமையை, இலக்கியங்களை வடமொழியாளரிடம் இருந்து மீட்டுக் கொடுத்தனராம். இன்றைக்குத் திருக்குறளைப் பற்றியும், சிவஞான போதத்தைப்பற்றியும், திருவிளையாடல் புராணத்தைப் பற்றியும் கூறப்படும் கதைகளும் இதைப்போன்றவையே! 'நளபாகம்', 'பீமபாகம்' எனும் சமையற்கலை நூல்கள் வடமொழியில் இருப்பதாகச் சொல்லுவதோடு, அவை வடமொழிவாணர்க்கே உரியன என்று சொல்லுவதும் இத்தகைய பச்சைப் பொய்யே'' என்று பேராசிரியர் கூறுவார்.

"இதனால் தெரியவரும் உண்மை என்ன? தமிழன் சுவைக்கத் தெரிந்தவன்; அனுபவிப்பதில் வல்லவன். ஆனால், சுவைப்பதற்

குரிய பொருள்களைப் போற்றிக் காக்க மாட்டான். அதனால், மற்றவர்களிடம் எளிதில் ஏமாந்து விடுகிறான்! இதை இளைஞர்களாகிய நீங்கள் நன்கு உணர வேண்டும்'' என்று கதையின்மூலம் சில அரிய உண்மைகளை அவர் எடுத்துரைப்பார்.

## பட்டம் பெற்ற கதை

நான் பச்சையப்பன் கல்லூரியில் மாணவனாக இருந்தபொழுது, பொது நூல்களை மிகுதியாகப் படிப்பேன். அடிக்கடி நூலகத்தில் பலதுறை நூல்களைத் தேடுவேன். தமிழ்ப்பயிலும் மாணவருடைய நூலக அட்டைக்கு பிறதுறை நூல்களைக் கொடுக்க மறுத்தனர். நான் துணை நூலகரிடம் ஒரு நாள் மன்றாடிக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் ஐயா, அங்கு வந்திருக்கிறார். 'என்ன வேண்டும் திருநாவுக்கரசு?' எனும் குரலைக் கேட்டு, திரும்பிப் பார்த்தேன். சற்றுத் தொலைவில் பேராசிரியர் நின்று கொண்டிருந்தார். அருகில் சென்று நின்றேன். தயங்கியவண்ணம் கையில் உள்ள துண்டு காகிதத்தைக் காட்டி, ''இந்நூல்களைப் படிக்க விரும்புகிறேன். அவற்றைக் கேட்டால், தமிழ் B.A. (Hons) படிப்பவர்களுக்கு இவற்றைக் கொடுக்க மாட்டோம்' என்று சொல்லுகிறார் துணை நூலகர்'' என்று சொன்னேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்தார். ''கல்லூரிப் பாடங்களைப் படித்து விட்டாயா? அந்தப் புத்தகங்கள் எல்லாம் உன்னிடம் உள்ளனவா?" என்று பேராசிரியர் கேட்டார். ''எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கியுள்ளேன்; ஒழுங்காகப் படித்து வருகிறேன்!" என்று சொன்னேன். நான் காட்டிய துண்டு காகிதத்தில் குறிப்பிடப்பட்ட நூல்களை எல்லாம் பார்த்து "இவை உனக்கு எதற்கு?'' என்று அவர் வினவினார். ''நான் படிப்பதற்கு'' என்றேன். "உன்னால் புரிந்துகொள்ள முடியுமா?'' என்று அவர் கேட்டார். ''இயன்றவரையில் முயற்சி செய்கிறேன். புரியாவிட்டால் எங்கள் வீட்டுப் பக்கத்தில் M.A., B.L. படித்த பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் அப்பகுதிகளைக் காட்டி, தமிழில் விளக்கச் சொல்லுவேன். பெரும்பாலும் ஓய்வு கிடைக்கும்போது எல்லாம், அவர் எனக்கு உதவி செய்வார்'' என்று சொன்னேன்.

அவர் கையில் இருந்த தாளில் குறிப்பிடப்பட்டிருந்த நூல்களைப் படித்தார்.

(1) Wasteland

(2) The Use of Poetry and the Use of criticism

(3) Civilization on Trial
(4) A Guide to Modern Thought
(5) Systamatic Sociology
(6) Unpopular Essays
(7) Eastern Religions and Western Thought
(8) Counter Attack From the East
(9) The Great Literatures of the World
(10) Makers of the Modern World.

"இதில் இரண்டு ஒன்றைத் தவிர மற்றவை உனக்குத் தேர்விற்குப் பயன்படாதவை ஆயிற்றே! நம் கல்லூரி மாணவர் கையேட்டில், தமிழ் B.A. (Hons) பாடப்பகுதிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள நூல்களைப் படித்தாயா?'' என்று அவர் கேட்டார்.

நம் நூலகத்தில் ஆபர்கிராம்பியின் (Abercrombie) The Idea of Great Poetry இல்லை; மோல்ட்டனின் (Moulton), Modern study of Literature இல்லை; யெஸ்பர்சனின் Philosophy of Grammar இல்லை! சுந்தரம் பிள்ளையின் Some Mile Stones in the History of Tamil literature இல்லை! சீநிவாச அய்யங்காரின் Tamil studies இல்லை! என்று சொல்லிக்கொண்டே போனேன்.

இடையில் மறித்து, "சரி உனக்கு இந்த நூல்களைப்படிக்க நேரம் கிடைக்குமா?'' என்று கேட்டார். ''வாரத்தில் இரண்டு பொதுநூல்களைப் படிக்க முயன்று வருகிறேன்'' என்று அறைகுறையாகச் சொன்னேன்.

உடனே தலைமை நூலகர், திரு. செங்கல்வராயனிடம் அழைத்துச் சென்று, அவர், என்னை அறிமுகப்படுத்தினர். பிறகு, அவருடைய கணக்கில் ஒவ்வொரு முறையும் 10 நூல்களை எடுத்துச் செல்ல எனக்கு அனுமதி தருமாறு தெரிவித்தார். நூலகப் பேரேட்டில், தமிழ்ப் பேராசிரியர் மு. வ. அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தாள்களில், அடிக்கடி குறித்துவிட்டு, நான் நூல்களை எடுத்துச் சென்றேன். நான் இறுதியாண்டு வகுப்பில் படிக்கின்றபொழுது, சனவரி மாதத்தில் ஒரு நாள் என்னைப் பேராசிரியர் கூப்பிட்டு அனுப்பினர்; நூலகத்தில் இருந்தார். ''இனியுள்ள மூன்று மாதங்களுக்குப் பொதுநூல்களைப் படிக்காதே! பாடநூல்களை ஆழ்ந்துபடி? அதற்காகத்தான் அழைத்தேன்'' என்றார் அவர்.

1961ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியைவிட்டு அவர் புறப்படும் வரையில், அவருடைய பெயரில் நான் பத்துநூல்களை எடுத்துச் செல்லுவது வழக்கம். அப்பொழுது நான் வெளியூரில் வேலையில் இருந்தேன். எனினும், எங்கள் பேராசிரியரும், தலைமை நூலகரும் என்னுடைய அறிவுப் பசிக்குச் சிறந்த உணவினைத் தயங்காது கொடுத்து வந்தனர். ஒருமுறை, பச்சையப்பன் கல்லூரி முதல்வருக்கு, டிரவெலியனின் 'A Social History of England' எனும் நூல் தேவைப்பட்டதாம். நூலகத்தை அலசிவிட்டு, அப் புத்தகம் மு.வ. அவர்களிடம் இருப்பதாகக் கண்டு பிடித்தார்களாம். அவரிடம் போய்க் கேட்ட பொழுது, 'அப்படி ஒரு நூல் என்னிடம் இருப்பதாக நினைவு இல்லை! எதற்கும் வீட்டில் பார்க்கிறேன்!' என்று சொல்லிவிட்டாராம். தலைமை நூலகர், அந்நூல் என்னிடம் இருப்பதாக முதல்வரிடம் சொன்னாராம். 'அப்படியா! நம்ம பையன் எடுத்துக்கொண்டு போயிருக்கிறான்! நான் யூனிவர்சிடியில் எடுத்துக் கொள்ளுகிறேன்' என்று அவர் சொல்லி விட்டாராம். எனக்கு இது தெரியாது.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவிற்கு முன்னர், பல்கலைக் கழக ஆய்வுக்குழு ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட கல்லூரிகளுக்கு எல்லாம் சென்று வந்தது. அக்குழு ஒருநாள், நான் பணியாற்றிக் கொண்டிருந்த புதுக்கோட்டை அரசர் கல்லூரிக்கு வந்தது! அக்குழுவிற்கு பேராசிரியர் L.D. மர்பி தலைவர். பேராசிரியர் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி போன்றோர் அக்குழுவின் உறுப்பினர்களாக வந்திருந்தனர். மாலையில் தேநீர் விருந்திற்கு ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தோம். விருந்திற்குப் பிறகு, விருந்தினர்கள் பேசினர். பேராசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது 'என்னைப் பற்றி' அதிகம் பேசினார். எனக்கு வியப்பாக இருந்தது. புதுக்கோட்டை அரசர் கல்லூரியின் முதல்வரிடம் "நாங்கள் ஒரு மணியை உங்கள் கல்லூரிக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். தமிழில் மட்டும் அல்லாமல் ஆங்கில இலக்கியம், அரசியல், சமூகவியல், வரலாறு, தத்துவம் போன்ற பல துறைகளில் ஆழ்ந்த அறிவும் தெளிந்த புலமையும் உடைய என் பிள்ளையை இங்கே காணுகிறேன். எங்கள் நூலகர் செங்கல்வராயன் கணக்குப்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் 500 பொது நூல்களைப் படித்தும், குறிப்பெடுத்தும், அவற்றைப்பற்றி வல்லுநர்களிடம் கலந்து பேசியும் தெளிவு பெற்றுள்ளான் என் மகன் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன்" என்று அவர் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

கூட்டம் முடிந்ததும், அருகில் என்னை அழைத்து, அனைவரிடமும் அவர் அறிமுகப்படுத்தினார். பிறகுதான், சென்ற ஆண்டு அவர் ஒரு புத்தகத்தைத் தேடியதும், அது என்னிடம் இருப்பதாக அறிந்தபொழுது, என்னுடைய முழு சாதகத்தையும் விசாரித்துத் தெரிந்துகொண்டதாகவும் சொன்னார்.

அன்று இரவு முழுவதும் எனக்கு உறக்கம் வரவில்லை! பச்சையப்பன் கல்லூரியில் மூன்றுமாண்டு முடியும் சமயத்தில், நாங்கள் நடத்திய 'வழியனுப்பு விழா' மனக்கண்முன்னால் திரைப்படம் போல் ஓடியது. அவ்விழாவிற்கு, பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையேற்றார். எங்கள் முதல்வர் ஆர். கிருஷ்ணமூர்த்தி வந்திருந்தார். விழாவில் மாணவர்களும், முதல்வரும், தலைவரும், பிற பேராசிரியர்களும் கருத்துரை வழங்கினர். அவ்விழாவினை நிறைவுறச் செய்யும் வகையில், எங்கள் பேராசிரியர்—நம்முடைய பேராசிரியர்—டாக்டர் மு. வரதராசனார் பேசத் தொடங்கினார். பொதுவாக எங்களுக்குச் சில அறிவுரைகளை அவர் கூறினார். பின்னர், மாணவர்களாகிய எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் தாம் கொண்டுள்ள கருத்தினைச், சுருக்கமாகச் சில சொற்களால் வருணித்தார்.

மா. கி. தசரதன் — செயல்வீரர்
க. த. திருநாவுக்கரசு — நடமாடும் நூல் நிலையம்
திருமதி இராஜராஜேசுவரி — முயற்சியே வடிவானவர்
இரா. இராதாகிருஷ்ணன் — துடிப்பு மிக்கவர்
து. சீனிவாசன் — நல்லவர்; வல்லவர் இல்லை!
டேவிட் அதிசயநாதன் — கவலையற்ற புன்னகையாளர்
மு. திருநாவுக்கரசு — தன்னம்பிக்கை இல்லாதவர்
திரு. இமானுவெல் — வாழத்தெரிந்தவர்

இவ்வாறு, அன்று ஐயா எங்களுக்குப் பட்டம் வழங்கியதை நினைந்து நினைந்து அன்றிரவு எல்லாம் வியப்புற்றேன்.

ஐயாவைப் பற்றி நினைக்கும்போது எல்லாம், எத்தனையோ இனிக்கும் நினைவுகள் என் மனத்தில் அலையலையாக எழுகின்றன. அவருடைய திருவடிகளில் அமர்ந்து, கல்வி பயின்ற 'அந்த நாளும் வந்திடாதோ?' என என் உள்ளம் ஏங்கித் தவிக்கிறது.

# கடித இலக்கியம்

பேராசிரியர் மு. வரதராசனார், புதுமைப் போக்குடைய புதின ஆசிரியர்; சிறப்புமிகு சிறுகதையாசிரியர்; நயமிகு நாடக ஆசிரியர்; கவின்மிகு கட்டுரையாளர். அவருடைய கட்டுரைகள் யாவுமே சிந்தனைக் கட்டுரைகளாக அமைந்துள்ளன.

**கட்டுரை வகை**

கட்டுரையை முறைப்படி அமைந்த கட்டுரை (Formal), முறைப் படி அமையாத கட்டுரை (Informal) என இருபிரிவுகளாகப் பிரிப்பர். முறைப்படி அமைந்த கட்டுரை புறவயப் பண்புடைய தாகவும் (Objective), அறிவு நல ஆர்வம் வாய்ந்ததாகவும் இருக்கும். முறைப்படி அமையாத கட்டுரை அகவயப் பண்புடைய தாகவும் (Subjective), கற்பனைத் திறனும், அனுபவ உணர்வும் கலந்த கலைப்படைப்பாகவும் விளங்கும்.

புறவயப் பண்புடைய கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை, கருத்து விளக்கக் கட்டுரை, செய்திப் பதிப்புமுறை கட்டுரை, நூல் மதிப்புரை என நால்வகைப்படும். இவற்றுள் இரண்டாவதான 'கருத்து விளக்கக் கட்டுரை,' ஐந்து வகைப்படும். அவை வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை, அறிவியல் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை, விளக்கவியல் கட்டுரை, திறனாய்வுக் கட்டுரை என்பனவாகும்.

அகவயப் பண்புடைய கட்டுரையைப் பொதுக்கட்டுரை, யாத்திரப் பண்புநலன் உணர்த்தும் கட்டுரை, மனப்பதிவு இயல்புணர்த்தும் கட்டுரை, தனிமனிதர் இயல்பு விளையாட்டுச் சித்திரக் கட்டுரை என நான்குவகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றுள், 'மனப்பதிவு இயல் புணர்த்தும் கட்டுரை' (Impressionistic Essays) என்பது கலைஞன், தான் பெற்ற அனுபவத்தையும் உள்ள உணர்ச்சிகளையும் படிப் போர், தம்முடைய மனத்தில் மீண்டும் படைத்துணருமாறு தூண்டு வதே 'மனப்பதிவு இயல்புணர்த்தும்' கட்டுரைகளாகும். கடித

இலக்கியங்களும் பயண இலக்கியங்களும் இத்தகைய இயல்புடையனவாகும். கட்டுரைகளாக இருந்தாலும், அவற்றில் கலைநயம் மேம்பட்டு விளங்கும்.

**கடிதத்தின் வகை**

இரு மனிதர்களுக்கு இடையே, கருத்தைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் ஒரு கருவியே கடிதமாகும். கடிதம் எழுதுவோர், அதை ஒருவருக்கு அனுப்புகின்றபொழுது, அதைப் பெறுகின்றவர் அனுப்பியவரின் கருத்தை அறிய இயலுகிறது. பழங்காலத்தில் கடிதத்தை 'எடுத்துச் செல்லுகின்றவர்' எனும் ஓர் இடைநிலை மனிதரும் இருந்தார். ஆனால், இக்காலத்தில், அஞ்சல் துறை அப் பணியை ஆற்றி வருகிறது.

கடிதங்கள் (1) தனிநிலைக் கடிதம், (2) அலுவல் கடிதம், (3) பொதுநிலைக் கடிதம் என மூன்று வகைப்படும். தனிமனிதர், ஒருவருக்கொருவர் தங்கள் வாழ்க்கைத் தொடர்பாக எழுதிக் கொள்ளுவது 'தனிநிலைக் கடிதமாகும்.' ஓர் அலுவல் அல்லது செயல்பற்றி அமைப்புகளும் நிறுவனங்களும் எழுதும் கடிதங்களும், அவற்றிற்குத் தனிமனிதரோ, பலரோ சேர்ந்து எழுதும் கடிதங் களும் அலுவல் கடிதங்களாகும். பணித்துறைச் சார்பாக எழுதப் படும் கடிதங்கள் எல்லாம், 'அலுவல் கடிதங்களாக'க் கொள்ளத் தக்கன. பொதுவாக ஒருவரோ, பலரோ அறியத்தக்க வகையில் எழுதப்படும் கடிதங்கள் 'பொதுநிலைக் கடிதங்'களாகும். அவை செய்தித் தாள்களிலோ, நூல்களிலோ, மக்களிடையே கருத்தைப் பரப்பும் வானொலி போன்றவற்றின் மூலமோ வெளிப்படுத்தப் படுவனவாக இருக்கலாம். பேராசிரியர் மு. வரதராசனாரின் 'கடித இலக்கியங்கள்,' மூன்றாவது வகையான 'பொதுநிலைக் கடிதங்களாக' உள்ளன.

தனிப்பட்ட முறையில், நட்பு உணர்ச்சியைப் பேணி வளர்ப் பதற்குச் சிறந்ததோர் உரையாடல் கருவியாகக் கடிதம் பயன்பட்டு வருகிறது; திட்டமிட்டு எழுதப்படுகின்றமையால், கடிதம் நேர்மைப் பண்புடையதாக, எளிமையுடையதாக சுருங்கிய வடிவினதாக ஆனால், அதே சமயத்தில், எழில் உடையதாக விளங்குகிறது.

**தமிழ் இலக்கியத்தில் கடிதங்கள்**

சிலப்பதிகாரத்தில் மாதவி எழுதிய இரு கடிதங்களைத் தமிழ் மாணவர் நன்கு அறிவர்.[1] மாதவி எழுதிய இரு கடிதங்களுள்,

1. ந. மு. வேங்கடசாமி நாட்டார், 'முடங்கல்', கட்டுரைத்திரட்டு (முதற் பகுதி), பக். 62.

கோவலன் கண்ணகியோடு இரவோடு இரவாகப் பூம்புகாரை விட்டு வெளியூருக்குச் சென்றுவிட்டான் என்பதை அறிந்து, அதிர்ச்சி யடைந்த நிலையில் அவள் எழுதிய இரண்டாவது கடிதம், பண்டைக் காலத்திய கடித அமைப்பை அறிய உதவுகிறது.

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியுங் குலப்பிறப்பு ஆட்டியொடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி
(சிலப். 13:87-92)

எனும் கடிதத்தில் வணக்கவுரையும், வேண்டுகோளும், செய்தி அறிவிப்பும், போற்றுதலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

பக்திவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய எட்டாம் நூற்றாண்டில், மதுரையில் கோயில் கொண்டுள்ள சோமசுந்தரப் பெருமானே, சேரமான் பெருமாள் நாயனாருக்கு, 'இக்கடிதம் கொண்டுவரும் பாணபத்திரன் எனும் கலைஞனைப் போற்றிப் பொருள் கொடுத்து உதவுமாறு' எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்று, பதினோராம் திருமுறையில் சிறப்புற்று இலங்குகிறது.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான், மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே!
(பதினோ. திரு. திருமுகப்பாசுரம்)

எனும் இக்கடிதத்தைத் 'திருமுகப்பாசுரம்' எனப் போற்றுவது மரபு.

இக்கடிதத்தில், எழுதுபவர் ('சிவன் யான்') யார் என்பதும், யாருக்கு எழுதப்படுகிறது ('சேரலன் காண்க') என்பதும், இவற்றிற்கு அடுத்து, எதற்காக எழுதப்படுகிறது (பாணபத்திரன் தன்பால் காண வருகிருன், பொருள் கொடுத்து அனுப்புக) என்பதும் சுருக்கமாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

கி. பி. பத்தாம் நூற்ருண்டு அளவில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுவது 'சீவகசிந்தாமணி' எனும் செந்தமிழ்க் காப்பியம். அக்காப்பியத்தில், இரண்டு கடிதங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று, அக்காலத்தில் கடிதம் எழுதப்பட்ட முறையைத் தெரிவிக்கின்றது. காந்தருவதத்தை என்பாள், தன் கணவன் சீவகனுக்குக் கடிதம் எழுதிய முறையைக் காண்போம்.

''மைதோய்த்து எழுதும் ஊசியாலே, சிறப்புமிக்கதோர் பூவிதழ் மேல், கற்பொழுக்கம் காத்து வருகின்ற காந்தருவதத்தை மறைந்த (பலருக்கும் புரியாத) எழுத்திஞல், விரைந்து ஓர் ஓலையை எழுதி முடித்தாள். பிறகு அவ்வோலையின்மேல் உருக்கிய அரக்கை ஊற்றி, தன் அழகிய குழையால் அதன்மேல் இலச்சினையிட்டு, சீவகன் இருக்கும் திசையை நோக்கித் தொழுது, கொடுத்து அனுப்பினுள்''[1] என்பதனுல், திருத்தக்கதேவர் காலத்தில் கடிதம் எவ்வாறு எழுதப்பட்டது என்பதை அறிய முடிகிறது. அக்காலத்தில் கடிதம், 'ஓலை' என்னும் பெயர் பெற்றிருந்தது என்பதை மற்ருெரு பாட்டால் அறிகிருேம்.[2] இவையாவும், செய்யுள் வடிவில் எழுதப பட்டனவாகும்.

இடைக்காலத் தமிழகத்தில், 'சீட்டுக்கவி' எனும் 'கவிதைக் கடிதம்' பெருவாழ்வு பெற்று விளங்கியது. காளமேகப் புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார் போன்ற புலவர்களின் சீட்டுக் கவிகள் சிறப்புமிக்கன.

கொங்கு நாட்டை ஆண்ட செழிய தரையன் என்னும் குறுநில மன்னனுக்கு, குதிரை ஒன்றைத் தனக்கு அனுப்பிவைக்குமாறு, அந்தகக் கவி வீரராகவ முதலியார் ஓலைச்சுருளில், கவிதை ஒன்றை எய்தி, அதையே கடிதமாக அனுப்பியுள்ளார்.

ஏடுஆயி ரம்கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்தவிரகன்,

---

1. சீவக சிந்தாமணி, 1767, 1768.
2. ஷை, 2148.

எதுசொலினும் அதுவே எனச்சொலும்
கவிவீர ராகவன் விடுக்கும் ஓலை

சேடாதி பன்சிரம் அசைக்கும் கலாகரன்,
திரிபதகை குலசேகரன்,

தென்பாலை சேலம் செயித்த தாகம்தீர்ந்த
செழியன்எதிர் கொண்டு காண்க!

பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பத்திகோ ணுதகோணம்,

பறவாத கொக்கு, அனல் பண்ணுத கோடைவெம்
படையாய்த் தொடாதகுந்தம்,

சூடாத பாடலம், பூவாத மாத்தொடை,
கொடுத்துமுடி யாதசடிலம்,

சொன்னசொல் சொல்லாத கிள்ளை 'ஒன்று' எங்கும்
துதிக்கவர வீடவேணுமே![1]

என்பது வீரராகவரின் சீட்டுக்கவி. இதன் முதற்பகுதியில் கடிதம் எழுதுபவர் 'வீரராகவர்' என்பதும், கடிதம் பெறுவதற்குரியவர் 'குலசேகர செழியன்' என்பதும் சுட்டப்பட்டுள்ளன; இரண்டாம் பகுதியில், தனக்குக் 'குதிரையை' அனுப்புமாறு அவர் வேண்டு கிருர். இங்கே, கவிஞரின் கற்பனையுள்ளத்தைக் காணுகின்றோம். குதிரையை, 'பாடாத கந்தருவம்,' எறியாத கந்துகம்,' 'பத்தி கோணுத கோணம்,' 'பறவாத கொக்கு,' 'அனல் பண்ணுத கோடை,' 'வெம்படையாய்த் தொடாத குந்தம்,' 'சூடாத பாடலம்' 'பூவாத மாத்தொடை,' 'கொடுத்து முடியாத சடிலம்,' 'சொன்னசொல் சொல்லாத கிள்ளை' எனும் பல பெயர்களால் நயம் படப் புனைந்து போற்றுகிருர்.

இந்நூற்ருண்டின் தொடக்கத்தில் தேசியகவி பாரதியார், எட்டயபுர மன்னர் வெங்கடேச ரெட்டப்பபூபதிக்கு இரண்டு சீட்டுக் கவிகளை அனுப்பியுள்ளார்.[2] இவற்றுள் ஒன்றுக்கு, 'சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத் தூக்கு' எனும் பெயர் இடப்பட்டுள்ளதைக் காணுகின்ருேம்.

---

1. கலைச்செல்வி (பதி.), தனிப்பாடல் திரட்டு, பக். 189.
2. பாரதி நூல்கள், கவிதை, பக். 302-303.

சத்தி
தாசன்எனப் புகழ்வளரும் சுப்ரமண்ய
பாரதிதான் சமைத்த தூக்கு[1]

என்பது பாரதியின் பாடற்பகுதியாகும்,

இவை யாவும் கவிதையில் அமைந்தவை. எனினும், அவை கடிதத்தின் அமைப்பு முறையை அறிந்துகொள்ள உதவுகின்றன.

## இருபதாம் நூற்றாண்டில் கடித இலக்கியம்

மேற்கு நாட்டு அறிஞர் பலர். கடித இலக்கியம் படைப்பதில் வல்லவர்களாக விளங்கினர். வால்போல் (Walpole) பல்லாயிரக் கணக்கான கடிதங்களை எழுதியுள்ளார்.[2] மெக்காலேயின் (Mecaulay) கடிதங்கள் சிறப்புமிகு இலக்கியப் படைப்புகளாகும். இவ்வாறே அடிசன் (Addison) என்பாருடைய கடிதங்களும் போற்றப்படுகின்றன.[3]

புதினங்களைக் 'கடிதங்கள்' வடிவிலே எழுதுவது ஒருகலை. ஆங்கிலேயப் புதின ஆசிரியர், ரிச்சர்ட்ஸன் (1740), பமேலா (Pamela) எனும் புதினத்தைக் கடித வடிவிலேயே படைத்துள்ளார். இம்முறையைத் தமிழறிஞர் மறைமலையடிகள், 'கோகிலாம்பாள் கடிதங்கள்' எனும் புதினப் படைப்பில் பின்பற்றியுள்ளார்.

பாரதத்தின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு, தாம் சிறையில் இருந்தபொழுது, 'உலக வரலாற்றை'யே கடிதவாயிலாகத் தம் அன்பு மகள் 'பிரியதரிசினிக்கு' (திருமதி இந்திரா காந்திக்கு) எழுதியமை, இந்திய மக்கள் உள்ளங்களில் இன்னும் பசுமையாக இருந்து வருகிறது.[4]

இத்தகைய கடித இலக்கிய மரபினைத் தமக்கு வழிகாட்டியாகப் பெற்றவர் மு. வரதராசனார் என்பது, இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

## மு. வ. வின் கடித இலக்கியம்

பேராசிரியர் மு. வரதராசனார் நான்கு கடித இலக்கியங்களைப்

1. ஷை, பக். 303.
2. W. S. Lewis, Horace Walpole, Robert Hart Davids, London, 1961, pp. 48-50.
3. Macaulay's Essay on Addison, Dent & Co; London, 1950, pp. 12-15.
4. Jawaharlal Nehru, Glimpses of World History, O U P; London, 1948.

படைத்துள்ளார். அவை அன்னைக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு, தம்பிக்கு என்பனவாகும். அவற்றில் முதல் மூன்றில் எட்டெட்டு மடல்களும், நான்காவது நூலில் ஒன்பது மடல்களும் உள்ளன.

> இது ஒரு நல்ல குடும்பம்; வளவன் எழில் இருவரும் உடன்பிறந்தவர்கள்; அன்னையும் தந்தையும் அறிவில் சிறந்தவர்கள்; பண்பாட்டைப் போற்றுபவர்கள்; இவர்களின் குடும்ப நண்பன் நம்பி. இக்கால வாழ்வின் இன்ப துன்பங்களை நன்கு உணர்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் கற்பனைப் படைப்புகளே. ஆயினும், இவர்கள் உணர்வனவும் உரைப்பனவும் கற்பனை அல்ல. இவை இன்றைய இளைஞர் பலர் உணர்வன; உரைப்பன[1]

என்று பேராசிரியரே, 'நண்பர்க்கு' எனும் கடித நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமையால், கடிதம் எழுதுவதில் ஈடுபட்ட கற்பனைக் குடும்பத்தினரைப்பற்றியும், கடிதத்தில் இடம்பெற்றுள்ள கருத்துகள் இன்றைய வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் அறிய முடிகிறது.

'அன்னைக்கு' எனும் நூல், அன்பு மகன் எழில், தன் தாயாருக்கு எழுதும் கடிதமாகவும், 'தம்பிக்கு' எனும் நூல், தம்பி எழிலுக்கு அண்ணன் வளவன் எழுதும் கடிதமாகவும், 'தங்கைக்கு' எனும் நூல், அருமைத் தங்கைக்கு அண்ணன் வளவன் எழுதும் கடிதமாகவும், 'நண்பர்க்கு' எனும் நூல், நண்பன் வளவனுக்கு, நம்பி எழுதும் கடிதங்களாகவும் அமைந்துள்ளன. இந்நான்கு நூல்களிலும் மொத்தம் முப்பத்துமூன்று கடிதங்கள் உள்ளன.

இக்கடிதங்களில் தமிழ், தமிழர், தமிழ் நாடு பற்றிய செய்திகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. சமுதாய நலிவுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைப் போக்குவதற்குரிய வழிவகைளைச் சிந்திக்குமாறு ஆசிரியர் தூண்டுகிறார்; தலைமுறை இடையீட்டால் மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையே உண்டாகக் கூடிய மோதல்களைத் தவிர்க்க அவர் வழிகாட்டுகிறார். தமிழர் நல்லவராக வாழ்ந்தால் போதாது; வல்லவராகவும் வாழக் கற்க வேண்டுமென அவர் அறிவுறுத்துகிறார்.

இக்கடிதத்தில் இடம்பெறும் கற்பனைப் பாத்திரங்களுள், பேராசிரியர் மு. வரதராசனார், 'அண்ணன் வளவனாகவே,' காட்சி தருகிறார். இந்த நான்கு கடிதங்களிலும் இடம்பெற்றுள்ள கருத்துகளைத் தொகைவகைப் படுத்தினால், பேராசிரியருடைய 'வாழ்க்கைத் தத்து

1. நண்பர்க்கு, முன்னுரை.

வம்' பற்றிய எண்ணங்களை எளிதில் உணரலாம். இந்தக் கடிதங்களில் பொதிந்துள்ள கருத்துகளே பல்வேறு வடிவங்களில், அவருடைய படைப்பு இலக்கியங்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளன; காந்தியமும் மார்க்சியமும் இணைந்த புதியதொரு சமுதாயத்தை உருவாக்க, இளம் தலைமுறையினரை, ஆசிரியர் இக்கடிதங்களின் மூலம் தூண்டுகின்றார்.

**மு. வ. கடிதங்களின் தாக்கம்**

டாக்டர் மு. வரதராசனாரின், நான்கு கடிதங்களும் 1951க்கு முன்பே வெளிவந்துவிட்டன. அவற்றைத் தமிழ் நாட்டு இளைஞர்கள் ஆர்வத்தோடு வரவேற்றுப் படிப்பதைப் பல அறிஞர்கள் கண்டனர். அவர்களுள் அறிஞர் அண்ணா ஒருவராவர். 1952ஆம் ஆண்டு முதல், தம்முடைய 'திராவிட நாடு' எனும் வார இதழில், 'தம்பிக்கு' எனும் கடிதப் பகுதியை அவர் புதியதாகப் புகுத்தினார். தொடர்ந்து இப்பகுதியை அவர் எழுதி வந்தார். 1965 அளவில், அக்கடிதங்களைத் தொகுத்து, 'தம்பிக்கு' எனும் இருதொகுதிகளை அவர் வெளியிட்டுள்ளார். பேராசிரியருடைய 'கடித இலக்கியத்தின்' தாக்கம் எத்தகையது என்பதற்கு இதைவிட, வேறு சான்று ஒன்றும் தேவை இல்லை.

**மு. வ. வும் செனகாவும்**

பேராசிரியர் மு. வரதராசனாருடைய கடிதங்களில் முதன்மை இடம் பெறுவது அறவுணர்வு. அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கை வாழுமாறு, அக்கடிதங்கள் அறிவிக்கின்றன. இதேவகையான நோக்கும் போக்கும் கொண்ட கற்பனைக் கடிதங்களை, ரோமானியப் பெருமகனும், பேரரசன் நீரோவின் ஆசிரியருமான செனகா (கி.மு. 3–கி. பி. 65), 'அறநெறிக் கடிதங்கள்' (Epistulae Morales) எனும் கடிதத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

அவற்றில் காணப்படும் கருத்துகள் ஸ்டாயிக்கு (Stoic) தத்துவ விளக்கங்களாகும். அவை திருக்குறள் கருத்துகளோடு பெரிதும் ஒப்புமையுடையன. பேராசிரியர் மு. வ. அவர்களின் சிந்தனைப் போக்கில் திருக்குறள் முதன்மையிடம் பெறுவதால், செனகாவினுடைய அறநெறிக் கருத்துகளின் எதிரொலியை, மு. வ. வின் கடித இலக்கியங்களில் நாம் கேட்கின்றோம்.[1]

---

1. Seneca's 'Moral Letters,' 2 Vols; Tr. T. F. Royds, Dent & Co: London, 1909.

## தமிழருக்கு மு. வ. வழங்கும் நற்செய்தி

மு. வ. வின் கடிதங்கள் அனைத்துமே, மாறிவரும் சமுதாயத்தின் போக்கை உணர்ந்து, அதற்கேற்பத் தமிழ் மக்கள், தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும் எனும் கருத்தை வலியுறுத்துகின்றன. மறுமலர்ச்சி அடைந்துவரும் தமிழகத்தில் பழைய நம்பிக்கைகளுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் இடையே மோதல் உண்டாவதையும், பழைய வாழ்க்கை முறைக்கும் புதிய வாழ்க்கைப் போக்கிற்கும் இடையே மோதல் உண்டாவதையும், மூத்த தலைமுறையினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் இடையே கருத்துவேற்றுமையால் பூசல் உண்டாவதையும் தவிர்க்கவும், குறைக்கவும் உதவும் வகையில், பேராசிரியர் மு. வ. அவர்கள், தம்முடைய நான்கு கடிதநூல்களையும் படைத்துள்ளார்.

> பழைய தமிழகத்திலிருந்தே புதிய தமிழகம் தோன்றி வளர்ந்து வருகின்றது. பழைய தமிழகம் தாய்; புதிய தமிழகம் சேய்; தாயிடமிருந்து சேய் கற்கவேண்டியவை பல உள்ளன. புதிய தமிழகம் பலவகையில் வேறுபட்ட வளர்ச்சி உடையது. ஆனாலும், பழைய தமிழகமாகிய அன்னையின் அனுபவ அறிவுரைகளைப் புறக்கணிக்க முடியாது.[1]

எனும் பேராசிரியரின் கருத்து, ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

தமிழன் காலத்திற்கேற்ப வாழக்கற்கவேண்டும். இல்லையென்றால், 'தமிழினமே அழியக்கூடிய ஒரு காலம், விரைவில் வந்துவிடும்' என்று பேராசிரியர் எச்சரிக்கை செய்கிறார்.

> காலவெள்ளத்தில் நீந்திச் சென்றால் போதும். தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும். காலம் அறிந்து, இடம் அறிந்து, சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால், அன்னப் பறவையின் இனம் ஏறக்குறைய அழிந்துவிட்டதாம்; யானையின் இனமும் அழிந்துகொண்டிருக்கின்றதாம். தமிழனும் அப்படிப்பட்ட கண்மூடி வாழ்வு வாழாமல், தன் வாழ்வை மாற்றி அமைத்துக் கொண்டால் போதும்.[2]

என்பது, என்றென்றும் ஒவ்வொரு தமிழ்மகனும் கருத்தில் கொள்ளத்தக்க அறிவுரையாகும்.

---

1. அன்னைக்கு, முன்னுரை.
2. அன்னைக்கு, பக். 15.

குடும்பவாழ்க்கையில் ஈடுபடும் இளம் பெண்களுக்கு இக்காலத்தில் உண்டாகும் சிக்கல்களைச் சுட்டிக்காட்டி, அவற்றிலிருந்து எவ்வாறு விடுதலை பெற்றுவாழ்வது என்பதையே 'தங்கைக்கு' எனும் கடிதநூல் விரிவாகப் பேசுகிறது. ''உலகம் திருந்துவது இருக்கட்டும். முன்னே, நீ உன் நெறியை வகுத்துக்கொள். பழைய நெறியா, புதிய வழியா என்று இரண்டில் ஒன்றை உறுதிப்படுத்திக்கொள்''[1] என்பது அருமைத் தங்கைக்கு, அண்ணன் வளவன் கூறும் அறிவுரையாகும்.

அவளுக்கு, அவன் கூறும் இன்னொரு அறிவுரை, மக்களாகப் பிறந்த அனைவருக்கும் பயன்படக்கூடியதாகும்.

> பல நூல்களைப் பற்றியும் தெரிந்துகொள் என்றும், சில நல்ல நூல்களை மட்டும்படி என்றும், மூன்று நான்கு நூல்களை மட்டும் படித்துக் கொண்டே இரு என்றும் படிக்க விரும்புகின்றவர்களுக்கு நான் சொல்வது உண்டு. மற்றவர்களோடு பழக விரும்பும்போது உனக்கும் அதைத் தான் சொல்வேன். பலரைப்பற்றியும் தெரிந்துகொள்; சிலரோடு மட்டும் பழகு; இருவர் மூவரோடு மட்டும் நெருங்கிய நட்புக்கொள்[2]

என்பது 'நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்னும் வள்ளுவரின் வாய்மொழியை நினைவூட்டுகிறது.

'தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் வாழ்ந்தால் போதாது; வல்லவர்களாகவும் வாழவேண்டும்' என்னும் பேராசிரியரின் கொள்கையை விளக்கும் நூலே, 'நண்பர்க்கு' எனும் கடித இலக்கியமாகும்.

புதியதோர் உலகு செய்யத் துடிக்கும் இளைஞர்களையே, 'தம்பி'யாகக் காணுகின்றார் பேராசிரியர் மு. வரதராசனார். அவர்கள், தங்கள் உணர்ச்சியை, ஆற்றலை மேடைப் பேச்சுகளின் மூலம் பாழாக்கி வருவதைக் கண்டு, அவர் மனம் வருந்துகின்றார். தமிழர் அல்லாத, பிற மொழியாளர்களின் சொற்களுக்குத் தமிழன் எளிதில் மயங்கிவிடுகிறான் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். தமிழருடைய குறைகளைப் போக்குவதற்கும், புதுவாழ்வு பெறுவதற்கும் அவர் பத்து அறிவுரைகளைத் 'தம்பிக்கு'க் கூறுகிறார். அவற்றுள்,

---

1. தங்கைக்கு, பக். 26.
2. ஷை., பக். 79.

> உன்மானத்தைவிட, நாட்டின் மானம் பெரிது என்று உணர். உன் உயர்வைவிட நாட்டின் உயர்வு இன்றியமையாதது என்று உணர். உன் நலத்தைவிட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர்[1]

எனும் அறிவுரை தலைசிறந்ததாகும். இன்று தமிழகத் தலைவர்களிடத்தும், தலைமைப் பதவியில் உள்ளவர்களிடத்திலும் தன்னல வெறியும், பணவேட்டையாடும் மனப்போக்கும் மேலோங்கி நிற்கின்றன. அதனால், நாட்டின் நலனையோ, தமிழ்மொழியின் நலனையோ, தமிழ் இனத்தின் நலனையோ அவர்கள் பெரிதாக மதித்துப் போற்றுவதில்லை. தங்களுடைய வளர்ச்சிக்கு, அவற்றையெல்லாம் விளம்பரத்திற்குரிய ஒரு கருவியாகவே அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலைமாற வேண்டுமானால், மாற்றப்பட வேண்டுமானால், அதற்கு ஒரேவொரு வழிதான் உண்டு! 'தன் நலத்தைவிட நாட்டின் நலமே, மொழியின் நலமே சிறந்தது! உயர்ந்தது!' என்பதை உணர்ந்து, வாழ்க்கையில் ஒவ்வொரு தமிழனும் அக்கொள்கையைக் கடைப்பிடிக்க முயலவேண்டும். அந்நாளே தமிழகத்தின் பொன்னாளாக அமையும். அந்தப் பொன்னாளைப் போற்றி வரவேற்கப் பேராசிரியர் மு. வ. வின் கடிதநூல்கள் வழிகாட்டும் ஒளிவிளக்காக உதவும் என்பது உறுதி.

---

1. தம்பிக்கு, பக். 55.

## இரண்டாம் பகுதி

# அறிஞர் அறவாழியின் கடிதங்கள்

ஓம்
''அன்பே சிவம்''

**வித்துவான் மு. வரதராஜன்**
தமிழ்ப்பண்டிதர்,
திருப்பத்தூர், N. A.
17—7—36

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. உபந்நியாசம் நடக்கும் தேதி முதலிய விவரங்களை அறிய விரும்புகின்றேன். தங்கள் விருப்பம்போல் வந்து பணியாற்றுவேன். விஷயங்கள் மூன்றையும் இங்கு குறித்துள்ளேன். (1) புலால் மனித உணவா?, (2) நாகரீகமும் அறநெறியும், (3) "தெய்வ அருட்கருணை"

குருநாதர் மௌன ஸ்வாமிகள் அங்கே இருப்பின், அவர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கத்தை உரித்தாக்குமாறு வேண்டுகின்றேன்.

நிகழ்ச்சி நிரலை எதிர்நோக்குகின்றேன்.

இங்ஙனம்,
அன்பன்
மு. வரதராசன்

திரு க. தி. சண்முகசுந்தர முதலியார்,
வேளாளர் தெரு,
வெட்டுவாணம்
பள்ளிகொண்டா (வழி)
(வட ஆர்க்காடு மாவட்டம்)

ஓம்

மு. வரதராசன், B O.L;
பச்சையப்பன் காலேஜ்,
சேத்துப்பட்டு, சென்னை. 1—8—40

அன்புமிக்க ஐயா !

வணக்கம், நலம்.

தங்கள் கடிதம் திருப்பத்தூரிலிருந்து திருப்பப்பட்டு இங்கு இன்றுதான் வந்தது. சென்ற ஆண்டு முதல் யான் இந்தக் கல்லூரியில் வேலைசெய்து வருகின்றேன்.

சங்கத்தை யான் என்றும் மறவேன். ஆனல், மிகுதி யான வேலையால், தங்கள் விருப்பம்போலச் சங்கத் தொண்டை ஏற்க முடியவில்லை. நகரவாழ்வில் ஓய்வும் அமைதியும் குறைதல் இயற்கை தானே! ஆகையால், யான் வரமுடியாமைக்கு மன்னிக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன். தலைவர் உயர் திரு. திரு. வி. க. அவர்களுக்கும் என் நிலைமை தெரியும். பெரியார் மௌன சாமியார் அவர்களும், உயர்திரு பூ. ஸ்ரீ. நாயுடு அவர்களும் என்னை மன்னித்தருள்வார்கள் என நம்புகின்றேன்.

இங்ஙனம், அன்புள்ள,
மு. வரதராசன்

திரு. செயலாளர்
ஒத்தநிலை நல்வழி மன்றம்
வெட்டுவாணம்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செனய் நகர்
சென்னை-30
31—1—65

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் கடிதம் பெற்றேன். சுவாமிகளின் பருவுடல் மறைந்தபோது யான் வெளிநாட்டில் இருந்தேன் என்பதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். சுவாமிகள் என்றும் நமக்கு உறுதுணையாக இருப்பார். யாக்கை மறைந்தது. யாக்கை நிலையாமை பலமுறை படித்துணர்ந்த ஒன்று. இப்போது நினைவுபடுத்திக் கொள்வோம்.

18—2—65-ல் தாங்கள் விரும்பியபடியே யான் வருவேன். 17—2—65 மாலை 8½ மணி வரைக்கும் சென்னையில் வேலை உள்ளபடியால், 18—2—65 காலையில்தான் இங்கிருந்து புறப்பட்டு வருவேன்.

அன்புள்ள,
மு. வரதராசன்

திரு சாது நாகரத்தின அம்மையார்,
கம்மவார்புதூர்,
கரிகேரி.
காட்டுப்பார்டி வழி.
வடஆர்க்காடு மாவட்டம்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செனாய்நகர்
சென்னை–30
6—12—65

அன்புள்ள திரு சாது நாகரத்தினம்மாள் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் பெற்றேன். பலவகை வேலைகள் வந்து குவிகின்றன. ஆயினும் அந்த நாள் ஒதுக்கி வைத்து வருகின்றேன். எப்படியாவது முயன்று பூசைக்கு வருவேன்.

தங்கள் அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு,
சென்னை-30
20—2—69

அன்புள்ள * சகோதரியார் அவர்களுக்கு

வணக்கம். தாயார் மறைந்த செய்தி அறிந்தேன். உலக இயல்பும் இறைவன் அருளாட்சியும் நன்குணர்ந்த தங்களுக்கு யான் ஆறுதல் கூறி எழுதுவது மிகை. திருவருள் நடத்தும் முறையில் நடப்பதே நம் கடமை. தனிமையுணர்வு எப்போதும் வேண்டா. தலைவனும் மெய்ப்பொருள் உணர்வுமே துணை.

தங்கள் அன்புள்ள,
மு. வரதராசன்

* சாது நாகரத்தினம் அம்மையார்

## மதுரைப் பல்கலைக் கழகம்

**மு. வரதராசன்**
**துணைவேந்தர்**

**பல்கலை நகர்,**
**பல்கலைக் கழகக் கட்டடம்,**
**மதுரை-21.**
**25—7—1972**

**அன்புடையீர்,**

வணக்கம். நலம். செல்வி விஜயலட்சுமிக்கு இங்கு இடம் கிடைப்பது அரிது. செல்வியைவிட அதிக மதிப்பெண் பெற்றவர்கள் பலர் விண்ணப்பம் அனுப்பியுள்ளனர். நெருக்கடி அதிகம் உள்ளது. சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மறைவுக்குத் தாங்கள் எழுதிய கடிதத்தை, சித்தாந்தம் என்னும் இதழின் ஆசிரியர் திரு. கா. கலியாணம் அவர்களுக்கு (12, கீழமாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4) அனுப்பி உள்ளேன். இறைவன் திருவருள்.

தங்கள் அன்புள்ள,
மு. வரதராசன்

**திரு சாது நாகரத்தினம் அம்மையார்**
**கம்மவார் புதூர்**

** ** **

**மு. வரதராசன்**
**தமிழ்ப் பேராசிரியர்**

**செல்லம்மாள் தெரு,**
**சென்னை-30**
**31—3—70**

அன்புள்ள திரு. வீரமணி

நலம். அன்புக்கு நன்றி, பிறந்தநாள் கொண்டாடுவதில் நம்பிக்கை இல்லாதவன் யான். அன்று யான் ஊரிலும் இல்லை. 3, 4, 5 — பெங்களூர். சிறிதும் பொருட்படுத்த வேண்டா. மனித சமுதாயம் ஒரு கடல். அதில் கலந்து விடுதலே பெருமை. தனிச் சிந்தனையான பெருமை வேண்டா.

அன்புள்ள,
மு. வரதராசன்

**திரு. பா. வீரமணி**
**2 காசிபுரம், 'பி' பிளாக்**
**ராயபுரம்**
**சென்னை—13**

மதுரை–2
27—6—71

அன்புள்ள திரு. வீரமணி,

நலம். கடிதங்கள் பெற்றேன். அது பழைய இலக்கணம் கூறும் விதி. வளர்ந்து வரும் மொழியைப் பழைய இலக்கணம் கட்டுப்படுத்தாது. இலக்கியத்தைப் பொறுத்தவரையில் புலவர் வழக்கு நிற்கும். மக்களின் தமிழில் அது செல்லாது. அஞ்சல் முகவரியில் ராயபுரம் என்று எழுதும் காரணம் அதுவே.

மே திங்களிலேயே பெயர்ப் பலகை தமிழிலும் ஆங்கிலத்திலுமாக மாற்றப்பட்டது. மெட்ரிக் தேதிபற்றி எழுதுவேன். புகுமுக வகுப்பு, இளங்கலை வகுப்புகளும் இங்கு அஞ்சல் வழிப் படிப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மதுரை,
625021
22—10—73

அன்புடையீர்,

வணக்கம். நலம். கடிதம் பெற்றேன். செய்திகள் அறிந்தேன். சில, யான் முன்னமே அறிந்தவை.

அவர்களின் பகைமைக்குக் காரணங்கள் இருக்கும். நீங்கள் அவற்றை அவ்வளவு கவலையுடன் கருத வேண்டா. உலகம் இப்படி என விட்டுவிடுங்கள். யானும் இனி ஒதுங்கியிருத்தல் நல்லது. நடுநிலைமைக்கு அதற்கு உரிய அளவு இடம் இல்லை. அமைதியாக என் பணியைச் செய்வேன்.

எனக்காகப் பரிந்து பேசி, வீண்பகை தேடிக் கொள்ள வேண்டா. படிப்பில் ஆர்வம் காட்டுக. உலகின் போக்கை உற்றுக் கவனித்து ஆராய்க. அதுவும் ஒரு கல்வி எனக் கொள்க.

மனைவி மக்கள் நலம் தானே?

அன்புள்ள,
மு. வரதராசன்

வேலை மிகுதியாதலின்
விளக்கமாகக் கடிதம்
எழுத நேரம் இல்லை.

திரு பா. வீரமணி

மதுரை
625021
23—1—74

அன்புள்ள திரு. வீரமணி,

நலம். கடிதம் பெற்றேன்.

'பிள்ளைச் செல்வம்' என்பதே சரி. மற்றது பிழை. எட்டு எழுத்து வரக் கூடாது என்ற மூடநம்பிக்கையால் அப்படிச் செய்திருக்கக் கூடும். அது அவர்களின் வழக்கம். சாரைப் பாம்பு என்பதுபோல் இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் மிகுந்தே வரும் (இரு பெயரும் ஒன்றையே குறிக்கும். நல்ல தம்பி அப்படி அன்று. ஒன்று பெயரடை, adjective பெயரன்று).

பதவி பற்றி . . . . விலகுதல் பற்றி வேண்டுகோள்விடுத்துள்ளேன். மேலோர் இன்னும் முடிவு செய்யத் தயங்குகின்றனர். இன்னும் சில நாட்களில் செய்தித் தாளிலேயே வந்துவிடும்.

பதவிக்காலம் மூன்று ஆண்டுகளே. உடல் நலம் குறைந்து வருதல் உண்மையே. இனி எழுத்து வேலையும் குறைக்க வேண்டும். பழைய நல்ல நூல்களைத் திரும்பத் திரும்பப் படிப்பதில் இன்பம் கண்டிருக்கிறேன். அதுதான் இனி என் குறிக்கோள்.

அன்புக்கு நன்றி. குழந்தை நலமா? துணைவியார்க்கும் என் நல்வாழ்த்துகள்.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை–30
7—4—52

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு

நலம்.

ஆங்கிலத் தேர்வினை நன்கு எழுதியமை அறிந்தேன். தொடர்ந்து ஆங்கில நூல்களை (உனக்குப் பிடித்த வரலாறு, கவிதை, கதை)ப் பயின்று வருக. 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.' திருக்குறளுக்கு, எல்லிசின் ஆங்கில விளக்கவுரையைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. அதைப் படித்து, அதன் சிறப்பு இயல்புகளைக் குறித்துக்கொண்டு வருக.

சித்திரை இரண்டாம் நாள் (15–4–52) அம்மூருக்குப் புறப்படுகிறேன். உங்கள் தெருவில் உள்ள வங்கியில் (துளுவ வேளாளர் கூட்டுறவு வங்கி), என்னுடைய கணக்குப் புத்தகம் இருக்கிறது. மார்ச்சு முடிய கணக்கு வைக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்து, அத்தப் புத்தகத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவும்.

வெள்ளி மாலையில் ஓய்வாக இருப்பேன்.

அன்புள்ள,
மு. வரதராசன்

வங்கிக் கணக்குப் புத்தகத்தைத்
திரும்பிப் பெற விண்ணப்பம்
இதனோடு இணைக்கப்பட்டுள்ளது.

திரு க. த. திருநாவுக்கரசு
105 சாமி நாயகன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30

23—12—51

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நீத்தார் வழிபாடு இதழ் பெற்றேன். உன் தகப்பனர் காலமான செய்தி வருத்தம் தந்தது. அவர் சென்னையில் மறைந்ததை அறிந்தேன்; அன்று வெளியூரில் இருந்தேன்.

உன் தந்தையார் வயதானவர்; பெரியவர்; சித்த மருத்துவர் என்பதை அறிவேன். அவருடைய பிரிவு உன் குடும்பத்திற்குண்டான பேரிழப்பு. இறைவனுடைய ஏற்பாடு என எண்ணி, ஆறுதல் பெற முயல்க. திருக்குறளும் திருமந்திரமும் உன் மனக்கவலையை மாற்றக் கூடியன! பெரியோர்களின் வாழ்க்கை உணர்த்தும் உண்மைகளைக் கூர்ந்து நோக்குக. அவர்கள் விட்ட பணியைத் தொடர்ந்து, திறமையுடன் செயலாற்றும் தகுதியைப் பெறுவதே நம் கடமை.

உன் தாயாருக்கும், மாமாவிற்கும் என் ஆற்ருமையைத் தெரிவிக்க.

தந்தையார் மறைவினுல், உன் படிப்பிற்கு இடையூருென்றும் வராது என நினைக்கின்றேன். சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள உன் மாமா எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். கவலை வேண்டா.

ஊரில் 'சிக்கல்கள்' இருக்குமாஞல், தொடர்ந்து அவற்றைத் தீர்க்க முயல்க. கிறிஸ்மஸ் விடுமுறைக்குப் பிறகும் அங்குத் தங்க வேண்டியிருந்தால், முதல்வருக்கு ஒரு கடிதம் எழுதி விட்டு, பொங்கல் விடுமுறை கழிந்தவுடன் வருக! உன் மனத்தில் 'இரண்டாட்டம்' இருக்கக் கூடாது; படிப்பில் கருத்தைச் செலுத்த இயலாது என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

அலுவலுக்கு வர இயலாத நிலையில் உள்ளேன். எளிய முறையில் ''நீத்தார் வழிபாடு'' நடத்த பெரியோர்களுடைய ஒப்புதலைப் பெறுக. இவற்றில் எல்லாம் உன் கொள்கையை வற்புறுத்த வேண்டா.

அன்புள்ள,

மு. வரதராசன்

திரு. க. த. திருநாவுக்கரசு,
மேற்குத் தெரு
கருங்குழி,
செங்கற்பட்டு மாவட்டம்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30
12—6—52

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். தாயார் நலம் தானே?

திட்டமிட்ட வகையில் ஆங்கில நூல்களையும், தொல்காப்பியம் பற்றிய ஆய்வு நூல்களையும் (கா. சு. பிள்ளை, ச. சோ. பாரதியார், மு. இரா., பி. எஸ். எஸ். சாஸ்திரி) படித்துக் குறிப்புகளை எடுக்க முடிந்ததா? எண்ணமே வாழ்வு!

நான் 20–6–52 வரையில் சென்னையில் இருப்பேன். இயலுமானால் 14–6–52 அன்று காலை இங்கு வருக. இரண்டு, மூன்று நாட்கள் கழித்துத் திரும்பவும் ஊருக்குச் செல்லலாம்.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன்
தமிழ்ப்பேராசிரியர்

செல்லம்மாள் தெரு,
சென்னை-30.
5—4—54

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். தேர்வினைச் செம்மையாக எழுதியமை அறிந்தேன். 'செய்வினை முடித்த செம்மல் உள்ளம்' சோர்வுக்கு இடம்தரக்கூடாது. முதல் வகுப்பு போதும்; மற்றது கிடைக்காவிடில் வருந்தவேண்டா.

ஆராய்ச்சி தொழில் அன்று. அதை முடித்த பின்னரும் வேலைக்கு அலையவேண்டும். தமிழுலகம் மிகச் சுருங்கியது. எம்.ஏ. பட்டம் பெறுவோர் அனைவருக்கும் அதில் வாய்ப்பு கிடைப்பது அரிது. உன்னைப் போன்றவர்கள் பிற துறைகளில் முயலலாம். தேர்வை முடித்த உடனேயே, வேலை பற்றிய கவலை உன்னை அமைதியிழக்கச் செய்துவிட்டது. இன்றைய இளைஞர் நிலை இதுவே. தேர்வு முடிவு தெரியட்டும். பிறகு அதைப் பற்றி நினைக்கலாம்.

விடுமுறையைப் பயன்தரத்தக்க வழியில் கழிக்க முயலுக. குறிப்பிட்ட சில இலக்கியங்களை, சில துறைகளைத் தேர்ந்து எடுத்து, அவற்றைத் திரும்பத் திரும்பப் பயில்வதன் மூலம் ஆழ்ந்த புலமை பெறலாம். வின்செஸ்டர், ரிச்சர்ட்ஸ் போன்றோரின் திறனாய்வு நூல்களைப் படிக்கலாம்.

தமிழைக் கற்றோர், புத்தம் புதிய துறைகளில் கருத்தைச் செலுத்த வேண்டும். மேற்கு நாட்டுக் கல்வியின் புதிய ஒளியில், நம் பழைய இலக்கியங்களைக் காண்போமானால், அவற்றின் சிறப்பியல்புகள் புலப்படும். அவற்றை உலகிற்கு உணர்த்த முயலலாம். உள்ளதைச் சொன்னால்போதும்; 'அது இல்லையே! இது இல்லையே!' என மனம் வருந்த வேண்டா! நம் தாயிடம் உள்ள சிறந்த பண்புகளை முதலில் அறிந்து கொள்ள முயலவேண்டும்; பிறகே, எதிர் 'வீட்டுக்காரம்மாவி'ன் இயல்புகளை ஆராய்ந்து, அவர்களுடைய சிறப்பிற்குரிய காரணங்களைத் தெரிந்து கொள்ளுதல் நல்லது.

வரலாற்றில் ஈடுபாடு கொண்டவர்கள் தாயின்பியின் 'A Study of History' எனும் நூலைச் சிறப்பாகப் போற்றுகின்றனர். அதை (சுருக்க நூலையேனும்) ஆழமாக ஒருமுறை படித்து, ஐயங்களைக் குறித்துக் கொள்க. பேராசிரியர் T.K.V. போன்ற அறிஞர்களிடம் அவற்றைத் தீர்த்துக் கொள்ளலாம்.

7—4—54ல் வெளியூருக்குச் செல்லுகிறேன். ஜூன் முதல் வாரத்தில் சென்னையில் இருப்பேன்.

தாயார் நலம்தானே?

அன்புள்ள,

மு. வரதராசன்

ஈரோடு
24—4—54

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். நற்சான்று உடன் உள்ளது. முயல்க. தக்கார் நேரே இருந்து உதவினுல் பெறலாம். வெல்க.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30
5—6—54

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

வாழ்த்துக்கள். நலம்.

தேர்வு முடிவினை அறிந்தேன். மகிழ்ச்சி, நீ எதிர் பார்த்த—உழைப்பின்—பயனை அடைந்தமையே பெரு வெற்றி எனலாம். முதல்நிலை மட்டும் அன்று. 1134 மதிப்பெண் பெற்றிருப்பதாக திரு அ. ச. ஞா. சொன்னுர். பச்சையப்பன் கல்லூரியின் வரலாற்றில் உன்னுடைய 'சாதனை' சிறப்புமிக்க இடத்தைப் பெறும். முதல்வரிடம் சொன்னேன். அவருக்கே யுரிய முறையில், தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்திஞர்.

சென்னைக்கு வந்ததும், அவரை நேரில் காண்க. காஞ்சிபுரம் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுசிரியர் (Tutor) தேவை யெனச் சொன்னுர். விளம்பரம் வரும். விண்ணப்பம் செய்க, பிறகு, திரு சி. எஸ். ஆரின் உதவியை நாடலாம்.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30

30—6—54

அன்புள்ள திருநாவுக்கரசு,

நலம். பி. எ. நண்பரைப் பற்றிக் கவலை வேண்டா. நற்சான்று உடன் உள்ளது.

ஆராய்ச்சி மாணவராகப் பல்கலைக் கழகத்தில் சேர விண்ணப்பம் அனுப்பலாம்.

A Critical Study of Kurunthogai,
Nouns and Adjectives in Tamil,
The Treatment of Ethics in Sangam Literature.

மூன்றும் நல்லவை. திரு. ரா. பி. சே. சொல்லும் பொருள் வேறுபடின் அதையே குறிக்க.

அன்புள்ள,

மு. வரதராசன்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30
12—7—54

அன்புள்ள திரு. திரு.

நலம்.

அரசுப் பணியில் சேர விருப்பம்தானா? புதுக்கோட்டை, கோவை அரசினர்க் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றாசிரியர் தேவையாம். திரு. S. N. சொக்கலிங்கம் புதுக்கோட்டையிலிருந்து வந்திருந்தார். அவர், உன்னை அங்கு அனுப்புமாறு சொன்னார். இதைப்பற்றி திரு. நெ. து. சு. விடம் சொல்லிவிட்டுப் போவதாகச் சொன்னார்.

நாளை மறுநாள் காலை 7 மணிக்குள் வீட்டிற்கு வருக. அவரை நேரில் காணச் செல்லலாம்.

அன்புள்ள,
மு. வரதராசன்

வெளியூருக்குப் போவதற்குத்
தடையொன்றும் இராதே!
உன் மாமாவைக் கலந்தபின் வருக.

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30
5—9—54

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன்.

உன் வாழ்க்கையில் புதிய கட்டம் தொடங்கியுள்ளது. புதிய ஊர்; புதிய சூழல்; புதிய பொறுப்பு. எல்லாமே புதியவை. அதனால்தான் உனக்குத் தனிமைத் துன்பம்; சென்னையை நினைத்து ஏங்குகிறாய்! இரண்டு திங்கள்களில் சிறியதாக ஒரு வீட்டைத் தேடி, அம்மாவை அங்கு அழைத்துக் கொண்டு சென்றால், பழகிய ஊராகிவிடும்.

பதவிகள் கிடைப்பது எளிது. ஆனால் அவற்றைக் காப்பாற்றுவது அரிது. அதிலும் திறமையுடன் பணியாற்றிப் பெயர் பெறுவது மிக அரிது. கடமையைச் செம்மையாகச் செய்க! திறமையாகச் செய்க! மாணவர் மனப்போக்கை அறிந்து, அவர்கள் உள்ளங் கொள்ளத்தக்க வகையில் பாடங்களை நடத்துக. சில பயிற்சிகளைத் திருத்திப் பழகிவிட்டால், 'நோட்டு' திருத்துவது சுமையாகத் தோன்றாது!

B. O. L. (Hons) திருநாவுக்கரசும் உன்னுடன் பணியில் சேர்ந்திருப்பதை அறிந்தேன். அவர் திரு, S. N. சொக்கலிங்கத்தோடு படித்தவர். அவர் சில 'உரிமைகள்' பெறலாம். அதைப் பற்றி வருந்த வேண்டா.

எங்கள் கல்லூரிக்கு அக்டோபரில்தான் விடுமுறை. எனவே, நீ வரும்பொழுது இங்கிருப்பேன்.

முன்பு என்னிடம் தெரிவித்த திட்டப்படி, மேற்படிப்பைத் தொடங்குக! ஓய்வு நேரத்தைப் பயன்தரும் வகையில் பயன்படுத்த, இப்பொழுதிருந்தே பயில்க! பிற்காலத்தில் ஓய்வு கிடைப்பது அரிதாகும்.

உணவு வசதியாகக் கிடைக்கிறதா? உனக்குத் தேவை காய்கறி உணவுதானே? அது எங்கும் கிடைக்கும். உறைப்பு அங்கெல்லாம் கூடுதலாக இருக்கும்! அதைக் குறைத்துக் கொள்க!

அன்புள்ள,

மு. வரதராசன்

செல்லம்மாள் தெரு,
சென்னை-30
12—3—55

அன்புள்ள திரு. தி.

நலம். கடிதம் பெற்றேன். இந்தக் காலத்தில் எதையும் துணிந்து சொல்வதற்கில்லை. எந்தத்துறையில் முன்னேற்று பவர்கள், செல்வாக்குள்ளவர்கள் வேண்டியவர்களாயிருக்கிறார் களோ அதை நாடுதல் கடமை. பிறதுறையில் கிடைத்தால் விடவேண்டா,

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

சென்னை-30
1—4—56

அன்புள்ள திரு. க. தி.

நலம். அனைவரும் நலமே. குடும்ப வாழ்க்கை நன்கு நடைபெறுகிறதா! நூல் எழுதுக. முயற்சி வெல்க. சுவிட்சரைப் பற்றி நீயே எழுதுக. எனக்கு வரவர ஓய்வு குறைகிறது; உடலும் முன்போல் ஒத்துழைப்பதில்லை. ஆகையால், எனக்கு எண்ணம் இருந்தும் பயனில்லை, நீ செய்தால் மிக மகிழ்வேன். தமிழ்நாடு அறிந்து போற்ற வேண்டிய பெரியவர் - அறவோர் அவர். ரத்தின முதலியார் செங்குந்தர்; புதியவர்; பண்பு அறியேன். நாளை வெளியூருக்கு - மலைக்குப் புறப்படுவேன்.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு,
சென்னை-30,
28—1—57

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். 'இளங்கோ' நடிக்க இசைவு அளிக்கின்றேன், முயற்சி வெல்க. சமுதாயம் நோயுற்றுள்ளது. ஆதலின் போலிகளும் பெருக இடமுள்ளது. தக்கார் கடமை, அறநெறியைப் பயன் கருதாமல் போற்றி நடத்தல் தான். பயன் கருத வேண்டா என்பது, ஏனெனின், கருதின் ஏமாற்றமும் சோர்வும் அடுத்து வரக் கூடும். அவைவரினும் கலங்காமல், கடமையாற்றிச் சாதாரண மனிதர்போல வாழத் துணிந்தால்தான், வாழ்க்கை சலிக்காது. ரஸல் நூல்கள் கற்க.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

சென்னை-30,
19—7—57.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். வேலையிலிருந்து விலகுவது பற்றி மீண்டும் எண்ணிப் பார்க்க. வேறு தொழிலில் காலூன்றும் வரையில் இதனோடு ஒட்டியிருத்தல் நல்லது. ஆராய்ச்சி ஒரு தொழில் அன்று. ஆராய்ச்சிக்குப்பின், மீண்டும் தமிழ்த் துறையில் இடம்பெற முடியுமா? முடியும் என்ற நம்பிக்கை இருப்பின் செய்யலாம்.

தமிழ்த்துறை குறுகியது; இதில் பலர்க்கு இடம் இல்லை. அதனால் தயங்க வேண்டியுள்ளது. திரு. இராமநாதன் செட்டியாரிடம் அறிமுகம் செய்து வைப்பேன். தேவையானபோது எழுதுக. அவர் இயல்பு உனக்குத் தெரியும் என எண்ணுகிறேன். 'அறம்' குறித்தது நல்லது; புதியது. 'ஆற்றுப் படை' எழுதியபின் புதுமை ஒன்றும் இல்லையே என்ற குறை ஏற்படும். அறத்தில் அந்தக் குறை இராது. ஆகையால் அது தக்கபொருள். நீ குறித்துள்ள பாகுபாடு மிகப் பொருத்தமாக உள்ளது.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன், செல்லம்மாள் தெரு,
தமிழ்ப் பேராசிரியர் சென்னை-30,
29—7—57

அன்புள்ள திரு. க. த. திரு.

நலம். கடிதம் பார்த்தேன். 'பெருமக்கள்' நிலைகுறித்து என்ன செய்வது? அந்தமுயற்சியை இங்கே (திரு. VRR வழி யாகச்) செய்து பச்சையப்பனில் டியூடராகவாவது வந்திருக்க லாமே நிற்க. திருமணத்தைப்பற்றி அறிந்தேன். ஒவ்வொரு வரும் அவ்வாறு 'ஒருநாள்' எனக்கோரி வற்புறுத்துகின்றனர். பொதுவிதியை நெகிழ்த்தால் வீண்தொல்லையும் பகையும் நேர் கின்றன. பலர் உள்ளனர். அதனால்தான், என்னை விடுமாறு கோருகிறேன். என் நிலை உணர்ந்து எழுதியுள்ளமையும் பெரியவர்களின் வற்புறுத்தலும் உணர்ந்தேன். ஆயினும் என்னை விடுக. அன்புக்கு நன்றி. கவலை வேண்டா. இருந்த இடத்திலிருந்தே யான் செய்யத்தக்க உதவிகள் இருப்பின், எப்போதும் உரிமையுடன் கேட்டுப் பெறுக.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மு. வரதராசன் செல்லம்மாள் தெரு,
தமிழ்ப் பேராசிரியர் சென்னை-30
6—8—57

அன்புடைய திருநாவுக்கரசு,

நலம். கடிதம் வந்தது. சென்னையில் நடந்தால் தவறாமல் வருவேன். (31-8-57)ல். ஆனால், ஒரு வேண்டுகோள், நிகழ்ச்சி நிரலில் அழைப்பிதழில் என் பெயர் தவறாமல் பொறிக்கா திருக்க! காரணம் தெரியுமே!

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வரதராசன்,
தமிழ்ப் பேராசிரியர்.

செல்லம்மாள் தெரு,
சென்னை-30
26—8—57

அன்புள்ள திருமணச் செல்வ,

திருமண அழைப்புப் பெற்றேன். இல்லறம் நன்கு தொடங்கி நலம் பலவும் நிரம்பி வளமுறுவதாக. என் அன்பான வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மு. வரதராசன்
தமிழ்ப்பேராசிரியர்

சென்னை-30
26—11—57

அன்புள்ள திரு. தி.

நலம். கடிதம் பெற்றேன். சென்ற வாரத்தில் உடல் நலம் குறைந்திருந்தேன். எனக்குப் பகையான கொடிய நீர்க்கோவைதான். சிறிது காய்ச்சலும் இருந்தது. கனவு பற்றி எனக்கு நம்பிக்கை இல்லை. டிசம்பர் விடுமுறையில் காண்போம். 24—12—57லும் கல்லூரி உண்டு. நான் குறிப்பிட்ட நூலை எழுதி முடித்தாயா? குடும்பத்தை நன்கு நடத்திச் செல்வதே ஒரு தனிக்கலை. அதிலும் வென்று விளங்குக. பாரி நம்பி அரசு அனைவரும் நலம்.

அன்புள்ள,
மு. வரதராசன்

9, இன்பண்ட்ரிகிராஸ்,
பெங்களூர்—1.
8—5—69

அன்புள்ள திரு. திரு.

நலம். உடன் ஒரு கடிதம் உள்ளது. கிளர்க்கைக் கண்டு தக்கது செய்க. அவசரம் இல்லை. நன்கு ஓய்வாக இருந்து உடல் நலம் காக்க.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

## மதுரைப் பல்கலைக் கழகம்

மு. வரதராசன்
துணைவேந்தர்

மதுரைப் பல்கலைக் கழகக்கட்டடம்
மதுரை-2
25—2—1971

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். இங்கு யாவும் நன்கு நடைபெற்று வருகின்றன. கடமைகள் மகிழ்ச்சியாகவும் உள்ளன. ஆனல் தமிழுக்கு ஒதுக்கத்தான் நேரம் இல்லை. நூல்களைப் பற்றிச் சென்னைத் துணைவேந்தரிடமும் சென்றவாரம் பேசிக் கொண்டு இருந்தேன். விரைவிலேயே வெளியிடுதல் நல்லது என்பதை வற்புறுத்திக் கூறினேன். நடக்கும்போது நடக்கட்டும். அதைப் பற்றிக் கவலை வேண்டா. தமிழவேள் நன்ருக எனக்குத் தெரியும். என் இயல்பும் உனக்குத் தெரியும். ஒருவர் இருவரை நம்பி நான் வாழ்வதில்லை. கடமையையும் அறத்தையுமே நம்புகிறவன். குடும்பத்தில் எல்லோரும் நலமாக இருக்கிருர்களா? என்னுடைய வாழ்த்துகள்.

அன்புள்ள,
மு. வரதராசன்

மதுரை-2

24—9—71

அன்புடைய் திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன்; பயணம் நன்றாக அமைந் திருந்தது. 16 – 9 – 51 வைகறையே புறப்பட்டுவிட்டேன். நூல், நிழற்படம் பெறுவேன். நன்றி. மாற்றங்கள் பற்றி அறிந்தேன். பேராசிரியர் திரு. கோ. சு. மறைந்தமை அறிந்து வருந்தினேன். தனிவாழ்க்கை எப்படி இருப்பினும், அவர் கரவற்றவர்; நல்லவர்; வீணாகப் பிறர் சிக்கலில் தலையிட மாட்டார். வரலாற்றுக்குழு பற்றிய கருத்தினை அறிந்தேன். நம்முடைய வேண்டுகோள் இன்னும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. அவற்றை நிறைவேற்றினால், இவற்றைப்பற்றியும் தீர்மானங்கள் செய்து அனுப்பலாம். பக்கத்திற்கு இவ்வளவு என்று பணம் தருதல் முறையான கடமையே. ஆனால் செய லகத்தில் எதுவும் ஆண்டுக்கணக்கில் காலத்தாழ்ப்பு ஆகும் போல் தோன்றுகிறது.

மனைவி மக்கள் நலம்தானே?

அன்புள்ள,

மு. வரதராசன்

மதுரை-2
30—11—71

அன்புடைய திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். கவலை சிறிதும் வேண்டா. என் உள்ளத்தில் பதவி ஆசை இல்லை. இந்தப் பதவியும் ஏற்றிருக்கத் தேவையில்லை; குடும்பத்தினர் தடுத்தனர். அமைச்சர்கள் தவருக எண்ணக் கூடாதே என்று உடன்பட்டேன். என் மனத்தை இது தாக்காது. நடப்பது நடக்கட்டும். எதற்கும் கவலை வேண்டா. நீ இடர்ப்பாட்டில் சிக்கிக்கொள்ள வேண்டா. இந்த உலகத்தில், இன்றைய நிலையில் எதிர்த்து உண்மையை விளக்க வேண்டுமானுல், பெருமுயற்சி வேண்டும், அதற்கு எனக்கு நேரமும் இல்லை; மனமும் இல்லை. அதைவிட எந்த நூலையாவது கற்று மகிழலாம். உலகம் நம்பினுல் உண்மையை நம்பட்டும்; இல்லையேல், உண்மை மறைக்கப்படினும் என்ன ஆகும்? ஒருநாள் மறைக்கப்படும் வாழ்வு, மறையும் வாழ்வு தானே! என் நூல்கள் சில பலஆண்டுகள் வாழ்ந்தால் போதும். மக்கள் நலம்தானே? கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருக்க.

அன்புள்ள,

மு. வரதராசன்

[ வீட்டு முகவரி தந்திருக்கலாமே ! ]

மதுரை-21,
13—7—72.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன்: 'சதி' பற்றி எனக்குக் கவலை இல்லை. நீயும் வருந்த வேண்டா. சென்னைக்கு வந்த போது சிலர் என்னைக் கேட்டனர். மறுமொழி கூற மறுத்து விட்டேன். அதற்காகவே, இத்திங்கள் இறுதிவரையில் சென்னைக்கு வராமல் இங்கேயே உள்ளேன். நான் யாரிடமும் வாய் திறந்து அவ்வாறு கூறவில்லை. திரு. ராசவேலுவிடமும் கூறியதில்லை. வீண்செய்தி பரப்புவர். வரவிரும்புவதாக விளம் பரமும் செய்துகொள்ளவில்லை; காரணம் என் நண்பர் திரு. நெ. து. சு. அவர்களுக்கு மனக்கவலை, துயர் ஏற்படக் கூடாதே என்பதுதான். தரின் வருவேன். ஆயின் நிகழ்தல் அரிது போல் உள்ளது. திருமண ஏற்பாடு இப்போது வேண்டா எனப் பாரி கூறுகிறான். ஆதலின் இப்போது முயற்சி தேவை யில்லை. சும்மா இருப்போம். அன்புக்கு நன்றி.

அன்புள்ள,
மு. வரதராசன்

மு. வ.
சென்னை-30,
19-8-72.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். மதுரைக்கு எழுதிய கடிதம் பெற்றேன். அது பற்றிக் கவலை வேண்டா. வேறு ஏற்பாடு இன்று செய்யப் பெற்றது.

வரலாற்றுத் துறையிலே சேர்க்க எண்ணினேன். அதை விட நல்லது இது. IITS (திரு. க. மீனாட்சிசுந்தரத்தின் கீழ்) ஆயிரம்ரூபாய் சம்பளத்தில் Associate Professor ஆக நியமனம் ஆகியுள்ளது. அங்கிருந்தவாறே 'பல்லவர் காலச் சமுதாய வரலாறு' பற்றி நீ ஆராய வேண்டும். அதனுடன் அங்கு IITS வேலையும் சில செய்யலாம். துணைவேந்தரும் வந்திருந்தார்; விடுவிக்க இசைந்தார். கவலையின்றி வந்து சேர்க. வாழ்த்துகள்.

(1000-1500)

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

மதுரை-21,
31—10—72.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். உன் ஊதியத்தை மட்டும் ஒதுக்குமாறு கேட்கத் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு எழுதியுள்ளேன். பணம் தரத்தயங்குகின்றனர். நாள் கடத்துகின்றனர். அவர் சம்பளத்துக்கும் மற்றச் செலவுகளுக்கும் என்ன செய்வார்? அமைச்சர் திட்டவட்டமாக ஆணையிட்டால்தான், இத்தகைய நிலையங்கள் நடக்கும். உதவிப்பதிவாளர் சொன்னவை எல்லாம் துணைவேந்தரின் கூற்றாக இருக்க முடியாது. புனைந்து கூறல் இயற்கை. துணைவேந்தர் திரு. பாலசந்திரன் பற்றிப் பலரிடம் கூறியதாகக் குறித்ததையும் என்னால் நம்ப முடியவில்லை. திரு. மீனாட்சிசுந்தரம் உன்பால் அன்பாக, உன் சார்பாக உள்ளார் என்றே நம்புகிறேன். கல்வி அமைச்சர் மனம் வைத்து, இவ்வகையில் பணம் ஒதுக்குமாறு திரு. திரவியத்திடம் சொன்னால், எல்லாம் விரைவில் நிறைவேறும். 4-11-72, 5-11-72 சென்னையில் இருப்பேன்.

அன்புள்ள,
மு. வரதராசன்

## MADURAI UNIVERSITY

University Buildings,
PALKALAI NAGAR,
Madurai-21,
18—11—72.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். கல்விச்செயலர் வந்த பிறகும் விரைவாக ஒன்றும் செய்ய மாட்டார். உள்ளவர் களுக்கே சம்பளம் தருதல் அரிதாக உள்ளது எனத் திரு. கா. மீ. எழுதியுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து வேண்டிக் கொளல் நன்று. அவர் ஆணையிட்டால், செயலர் தட்டமாட் டார்.

அன்புள்ள,
மு. வரதராசன்

** ** **

## MADURAI UNIVERSITY

University Buildings,
PALKALAI NAGAR,
Madurai-2I,
30—11—72.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். மாண்புமிகு கல்வி அமைச் சருக்கு நீண்டதொரு கடிதம் எழுதி இருந்தேன். அது பற்றிக் குறிப்பிடவில்லையா? கல்விச் செயலர் சலிப்படைந்துள்ளார். ஆதலின் அவர்க்கு அவ்வாறு எழுதவில்லை. இங்குவர இருக் கிறார். பேசுவேன். பயன்குறைவே.

வட்டிப்பணம் அனுப்பப்பட்டுள்ளதாகத் திரு. கா. மீ. எழுதினார். நியமன உத்தரவு உனக்கு அனுப்புவதாகவும் தெரிவித்தார். இந்நேரம் வந்திருக்கும். திரு. ம. பொ. சி. அவ்வாறு பேசுவதற்குத் தூண்டுதல் செய்துவருவோர் உள்ள னர்; சிறப்பாக நம் நண்பர் என் செய்வது?

9, 10-சென்னையில்

அன்புள்ள,
மு. வரதராசன்

மதுரை-625021
5—5—73.

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். 28-5-73 முற்பகலும் 30-5-73 பிற்பகலும் சென்னையில் இருப்பேன். செய்திகள் அறிந்தேன். மகிழ்ந்தேன். எனினும் 1974 முதல் அறிவுப் பணிக்கே திரும்ப விழைகின்றேன்.

டாக்டர் பட்ட ஆராய்ச்சிக்கு இங்கு விதிகள் இடந்தர வில்லையே? எப்படி மாற்றுவது? சென்னையார்க்கு இங்கு இடம் இல்லை! மற்றப் பாடங்களுக்கு உள்ள விதிமுறையைத் தமிழுக்கு மட்டும் மாற்றுவது இடர்ப்பாடு ஆகும். சென்னையில் என் கீழ் (IITS-ல்) ஆய்வதற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்குமா? 'சங்கஇலக்கியத்தில் காணும் தமிழர் நெறிமுறை' என்ற பொருள் நன்று. உன் நியமனம் தவறு என்று என்னிடமும் அறிவித்தனர் சிலர். அதுபற்றிச் சிறிதும் சோர்வுற வேண்டா.

அன்புள்ள,

மு. வரதராசன்

மதுரை-625021,
25—9—73

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம். கடிதம் பெற்றேன். 2-10-73 முதல் சில நாட்கள் சென்னையில் இருப்பேன். திரு. கா. மீ. நேரில் சந்திக்கவில்லை. தொலைபேசியில் முயன்றாராம். யான் கிடைக்க வில்லையாம். திரு. சுப. பற்றி முன்னமே முடிவு செய்யப்பட்டது. திரும்பக் கருதத் தேவையில்லை. டாக்டர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே என்ற விதி இல்லை. நீ தொடர்ந்து இருக்க வழிசெய்வோம். கவலை வேண்டா. ஓய் வூதியம் (Pension) பற்றிய விதிகளை அறியேன். ஆனால் ஆட்சித்துறையில் இடம்பெறுவதாயின், மேலோர் மனம் வைக்க வேண்டும். முயல்க. யானும் பரிந்துரைப்பேன். வரலாற்றுக்குழுப்பற்றிய செய்தி விந்தையாக உள்ளது. போகட்டும். எனக்காவது விடுதலை கிடைக்கட்டும்.

அன்புள்ள,

மு. வரதராசன்

# மதுரைப் பல்கலைக் கழகம்

அன்புள்ள திரு. திருநாவுக்கரசு,

நலம், கடிதம் பெற்றேன்.

நம் முயற்சி பயன்தராது போல் தோன்றுகிறது. அமைச்சர் உறுதியாக எடுத்துச் சொன்னால், நன்றாக இருக்கும். திரு. நெ. து. சுவும், செயலரும் 'சு. ம. இயக்கத்தை'ச் சேர்ந்த 'அவருக்கு' அளிக்க விரும்புகிறார்கள். அவர் S.S.L.C. தேர்ச்சியுறாதவர் என்பது அவர்களுக்குத் தவறாகத் தெரிய வில்லை; உனக்கு டாக்டர் பட்டம் இல்லாததுதான் அவர்களுக் குப் பெருங்குறையாகத் தோன்றுகிறது.

இதனால் வேறோர் ஏற்பாடு செய்ய நினைத்துள்ளேன். நேர்முகத் தேர்விற்கு வராதவரை அழைத்துள்ளோம். அங்கு அவருக்கும் வி. ஐ. சுக்கும் மனத்தாங்கல். அங்குப் பேராசிரிய ராக, அவருக்கு வாய்ப்பு இல்லை. இங்கு இரண்டு ஆண்டுகள் பேராசிரியராகப் பணிபுரிந்துவிட்டுத் திரும்பிப் போனால், அங்குப் 'பேராசிரியர்' பதவி கிடைக்குமாம். மதுரைப் பல்கலைக் கழகத்துப் பதவிக்குப் போட்டியிட்ட பொழுதே அவர் சொன்னார்.

அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுப்போம். 'லீனி'ல் வருவார்; இரண்டு ஆண்டுகள் முடிந்ததும் திரும்பிச் சென்று விடுவார். உன்னுடைய முதன்மை நிலைக்கு இடையூறு வராது. அவர் திரும்பி விடுவார்.

இந்த இரண்டு ஆண்டுகளுக்குள், உன்னுடைய 'திருக் குறள் நீதி இலக்கியத்திற்கு' மதுரையில் டி. லிட். (D. Litt.) பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். அமைச்சர் இதைச் செய்யுமாறு சொன்னார். மேலோர் ஆணையை ஆட்சிக்குழுவி னர் ஏற்றுக் கொள்ளுவர்.

இம்மாதம் 28முதல் சென்னையில் இருப்பேன். நேரில் பேசலாம்.

திருமண அழைப்பிதழ் சேர்ந்ததா?

அன்புள்ள,

மு. வரதராசன்

## மதுரைப் பல்கலைக் கழகம்

மு. வரதராசன்,
துணைவேந்தர்.

பல்கலைநகர்,
பல்கலைக் கழகக் கட்டடம்,
மதுரை-21,
20-9-74.

அன்புள்ள திரு. திரு.

கட்டுரைகளின் சுருக்கம் படித்தேன். அச்சிடுதற்கு அனுப்புதல் நல்லது. ஒப்புதல் அளிக்கின்றேன். அங்குசாமி என்பவரை நூலகராக நியமனம் செய்யலாம். விதிகள் என்ன? யானே நியமனத்தைச் செய்யலாமா? அல்லது குழுகூட்டித் தான் செய்ய வேண்டுமா? சம்பள விகிதம் என்ன? யானே செய்யலாம் என்றால், நியமன உத்தரவு வழக்கப்படி அமைத்துத் தருக.

அவர் நவம்பர் முதல்தேதி பொறுப்பு ஏற்பார். அது வரையில் வரவு — செலவுத்திட்டம் அனுப்புவதில் காலம் தாழ்த்த வேண்டா.

அன்புள்ள,

மு. வரதராசன்

திரு. க. த. திருநாவுக்கரசு,
சென்னை-20.

# ஆசிரியரின் பிற நூல்கள்

## 1. இலக்கிய ஆராய்ச்சி

திருக்குறள் நீதி இலக்கியம்
(சாகித்திய அக்காதமி பரிசு பெற்றது)
திருக்குறளில் கற்பனைத்திறனும் நாடக நலனும்
ஒளிவிளக்கு
திருக்குறளும் இந்திய அறநூல்களும்

## 2. இலக்கியக் கட்டுரைகள்

தமிழ் நிலவு
வாழ்வும் இலக்கியமும்

## 3. உரையும் பதிப்பும்

தனிப்பாடல் திரட்டு
திருக்குறள் மூலம்

## 4. தொகுப்பும் பதிப்பும்

தொல்காப்பிய நூலடைவு
திருக்குறள் நூலடைவு
தமிழ் இலக்கியக் கொள்கை : 2

## 5. மொழிபெயர்ப்பு

ஜி. எம். டிரெவிலியனுடைய இங்கிலாந்தின்
ஆக்ஸ்போர்ட் இந்திய வரலாறு
இலட்சுமிநாத பெஸ்பரூவா
இராசாராம் மோகன்ராய்
ஜீபானானந்த தாஸ்

## 6. மொழியியல்

தொல்காப்பியரின் மொழிநூற்புலமை

## 7. வரலாறு

சிந்துவெளி தரும் ஒளி
வரலாறும் வாழ்வும்
தமிழர் நாகரிக வரலாறு
திராவிட இனத்தின் தோற்றம் : ஒரு மறு
இனமரபு வரலாறு
முதலாம் இராசராசன்
வரலாற்று வஞ்சி
இலங்கையில் தமிழ்ப் பண்பாடு

## 8. ஆங்கில நூல்கள்

The Evolution of Moral
Philosophy in Ancient Tamil Literature (in Press)
The Chieftains of the Sangam Age (in Press)